


# காற்றோடு போதல்

சுதாராஜ்

# காற்றோடு போதல்

சுதாராஜ்

குணசேன

வரையறுக்கப்பட்ட எம் டி குணசேன அன் கம்பனி
217, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 11.
தொலைபேசி 323981-4 பக்ஸ் 323336 Email mdgunasena@mail.ewisl.net
www.mdgunasena.com

© சுதாராஜ்

முதற் பதிப்பு 2002

ISBN - 955 - 21 - 1185 - 4

இந்தப் பிரசுரத்தின் எந்த ஒரு பகுதியும், இதன் பதிப்பாளருடைய எழுத்து மூலமான முன் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்யப் படவோ, எழுத்தாளப்படுவதற்கோ, சேகரம் செய்யப்பட்டு வெளிப்படுத்தப் படவோ, மாற்றம் செய்யப்படவோ எந்த வடிவத்திலும் அதாவது எலக்ரோனிக் கையெழுத்துப்பட்ட அச்சுவடிவாக்கங்களிலோ பிரதியச்சு வடிவிலோ ஒலிப்பதி வாக்கமாகவோ வெளியிடப்படுவதற்கு உரியதல்ல.

வரையறுக்கப்பட்ட எம்.டி. குணசேன அன் கம்பனியினரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. R - P - 2066 - 10/2001

# முன்னுரை

நான் சிறுவனாயிருந்த போதே கதைகளின் மேல் நாட்டம் ஏற்பட்டிருந்தது. அதற்குக் காரணம் எனது வகுப்பு நண்பன் ஒருவன். அவனது தந்தை ஒரு பிரபல கல்லூரியின் அதிபராயிருந்தார். மகனுக்கு சிறுவர் இலக்கிய நூல்களை வாங்கிக் கொடுப்பது அவர் வழக்கம். அவன் அவற்றை எனக்கு வாசிக்கத் தருவான். அவன் எனது நெருங்கிய நண்பனாயிருந்ததன் ரகசியமும் அதுதான். அக்கதைகளிலுள்ள நீதிபோதனைகளும் படிப்பினைகளும் மனதிற் பதிந்து இன்னுமின்னும் கதைகளில் ஆர்வத்தையூட்டின. ஆனால் நான் ஓர் எழுத்தாளனாக வரவேண்டுமென அப்போது கனவுகூடக் கண்டதில்லை.

அப்போது நான் யாழ் இந்துக் கல்லூரியிற் கற்றுக் கொண்டிருந்தேன். கல்லூரி சஞ்சிகையில் ஒருமுறை ஆசிரியர் தேவன்-யாழ்ப்பாணம் அவர்கள் மாற்றலாகிப்போகும் இன்னோர் ஆசிரியரைப்பற்றி பிரியாவிடை கட்டுரை ஒன்று எழுதியிருந்தார். அந்த எழுத்தின் ஸ்டைல் ஒரு வித ரசனையைத் தந்தது. எழுத்தின்பால் உண்டான முதலாவது ஈர்ப்பு அது என நினைக்கிறேன். அப்போதே எனது கனவும் தொடங்கி விட்டது. எழுத்தாளனாக ஆகவேண்டுமென! ஆனால் வாசகர்கள் செய்த புண்ணியமோ என்னவோ கல்லூரியை விட்டு

வெளியேறும் வரை நான் எந்தக் கதையுமே எழுதவில்லை. எழுதி அவர்களுக்குத் தொல்லை கொடுக்கத் தொடங்கியது மொரட்டுவ பல்கலைக்கழகத்துக்கு வந்த பிறகுதான்.

நான் எழுதிய முதற் சிறுகதை "இனி வருமோ உறக்கம்" என்பதாகும். இக் கதையில் வரும் கதாநாயகியின் பெயர் மட்டும் உண்மையானது. மற்றப்படி அது வெறும் கற்பனைக் கதை. கதை எழுதத் தொடங்கிய ஆரம்ப நாட்களில் கற்பனைகளில் மிதப்பது சுகமாயிருந்தது. விசித்திரம் என்னவென்றால் அந்தக் கதை பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம் நடத்திய போட்டியில் முதற் பரிசு பெற்று விட்டது. ஆனால் கற்பனைக் கதைகள் நல்ல சிறுகதை இலக்கியமாக இருக்க முடியாது என நம்பியதால் அந்தச் சிறுகதையை எந்தச் சிறு கதைத்தொகுப்பிலேனும் சேர்த்துக் கொள்ளவில்லை. உண்மையான "இனி வருமோ உறக்கம்?" கதையை இனி எப்போதாவது நான் எழுதக்கூடும்.

இதுவரை சுமார் எழுபது சிறுகதைகள் எழுதியிருக்கிறேன். எழுதத் தொடங்கிய காலம் முதல் இன்றுவரையான கால அளவைப் பார்த்தால் இது குறைவு என்று தான் தோன்றுகிறது. ஆனால் நான் எழுத வேண்டும் என்ற கடமையுணர்வுடன் தினமும் அமர்ந்து எழுதும் எழுத்தாளனல்ல. அவ்வாறு செய்வது தவறு என்று சொல்லவில்லை. எனது இயல்பு வேறு. கதைகளுக்

கான கருப்பொறி தட்டியதுமே எழுத வேண்டும் என பேனாவை நான் எடுப்பதில்லை.

எனது கதைகள் என் மனதுக்குள்ளேயே பல காலம் இருந்தாலும் மறந்து போகாது. அப்படி மறந்து போகும் கருக்கள் கதைகளாக வர வேண்டிய அவசியமில்லை. உதாரணத்துக்கு "காற்றோடு போதல்" எனும் கதையில் அந்த நிலவு எறிக்கும் இரவில் அடர்ந்த மரங்களூடாக நடந்தது.... இராணுவக்காரர்கள் கொலை வெறியுடன் துரத்தி வந்தது - சுமார் இருபது வருடங்களுக்கு முன் கண்ட ஒரு கனவுக்காட்சி. அதன் விரிவாக்கம் தான் காற்றோடு போதல்.

மனித வாழ்வின் மகத்துவங்களை மேன்மை யான செயற்பாடுகளைத் தரிசிக்கும் போது பரவசம் உண்டாகிறது. மனதைத் தொட்டு உள் அமிழ்ந்தாலும் அடங்கிப் போகாது மீண்டும் மீண்டும் குமுழியிட்டு மேல்வந்து மனப்பரப்பில் வியாபிக்கிறது. சிந்தனையைத் தூண்டி புதிய அநுபவங்களைத் தருகிறது. தானே அழித்து அழித்து எழுதிப் புதிய உருவை எடுக்கிறது. இந்த உணர்வுகளின் பயன்பாட்டை மற்றவர்களுக்கும் தொற்ற வைக்கும் முயற்சிதான் எனது சிறுகதைகள்.

எனது சிறுகதைகளின் அடிநாதமாக அமைவது நேசிப்பு நேயம் என்பது, மனிதர்கள்பால்

மட்டுமின்றி சகல உயிரினங்கள் மீதும் இரங்குதல் ஆகும். எங்களைச் சூழ உள்ள இயற்கை ஓர் அற்புதமான விஷயம். மரம், செடி, தாவரங்கள், பூக்கள் ஆகியவற்றின் வனப்புகள் பிரமிப்பையும் இதமான சுகானுபவங்களையும் தருகின்றன. வானத்தில் பறவைகளே பறக்காத ஒரு நாளைக் கற்பனை செய்து பாருங்கள். எவ்வளவு சோகமாயிருக்கிறது. அந்தப் பறவைகளும் அவற்றின் அழகும் எங்கள் மனங்களை இதமாக வருடிக் கொடுப்பதற்காகவே படைப்பெடுத் துள்ளன போல் எண்ணத் தோன்றுகிறது. இவற்றையெல்லாம் என் கதைகளிற் பதிய வைத்திருக்கிறேன்.

இந்நூல் வெளிவருவதற்கு முழுக் காரணகர்த்தா திரு. செ. யோகநாதன். அவர்களுக்கும் இந்நூலை நல்ல முறையில் வெளியிடும் எம். டி. குணசேன நிறுவனத்தினருக் கும் எனது இதயபூர்வமான நன்றிகள் உரியன.

அன்புடன்
சுதாராஜ்

58/3, அநுராதபுரம் வீதி,
புத்தளம்,
இலங்கை.
05-12-2001

# காற்றோடு போதல்

தன்னால் பறக்க முடியுமென்பது அவனுக்குத் தற்செயலாகத் தான் தெரிய வந்தது. தற்செயல் எனக் குறிப்பிடுவது அவனே எதிர்பார்த்திராத ஒரு தருணத்தில் அது நேர்ந்ததைத்தான். ஆனால், உண்மையிலேயே அது தற்செயல் நிகழ்வுமல்ல.

பறப்பதற்கு அவன் ஒருபோதும் எத்தனித்த தில்லை. பறப்பதென்பது தனக்கு இயலாத காரியம் என்றே எண்ணியிருந்தான். ஆனாலும் பறப்பதை அவன் விரும்பியிருந்தான். பறப்பது பற்றி பல தடவை கற்பனைகளில் மிதந்திருக்கிறான். சிறு வயதிற்தான் அப்படியான கற்பனைகள் வரும். பறக்க முடியுமானால் ஸ்கூலுக்குக் கால் கடுக்க நடக்கத் தேவையில்லை. தெருவைக் கடப்பதற்காக வாகனங்கள் வருகிறதா என இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் பார்த்துக் கொண்டு நிற்கத் தேவையில்லை. லேட்டாகப் போய் வாசலில் நின்று கையை நீட்டி பிரின்ஸிபலிடம் அடி வாங்கத் தேவையில்லை. சரியான ரைம்முக்குப் போய் அவரை அசத்திவிடலாம்.

பறவைகள் பறக்கும் விதங்களையெல்லாம் பார்த்துப் பார்த்துப் பிரமித்துப் போயிருக்கிறான்.

நினைத்த மாத்திரத்தில் எழுந்து பறக்கும் லாவகம் (ரேக் ஓ.ஃ.ப்), வேண்டிய திசையில் சட்டென் திரும்பும் உத்தி, முகம் குப்புற அடிபட்டு விழாமல் சே.ஃ.ப் லான்ட்டிங் செய்யும் நேர்த்தி....... இதையெல்லாம் அவைகளுக்குக் கற்றுக் கொடுத்தது யாராக இருக்கும்?

அவன் கனவுகளில் பறந்திருக்கிறான். கனவுதானென்றாலும் பறப்பது ஒரு சாதனை புரிகிற பெருமிதத்தைக் தரும். பறக்க முடியாதவர்கள் வியப்போடு பார்த்துக் கொண்டு நிற்க ....பறக்கும் போது, ஓர் அற்புத உணர்வில் ஆழ்ந்து போவான். கைகளை சிறகு போல அடிக்கும் போது அல்லது நீச்சலடிப்பது போல வலிக்கும் போது காற்றில் மிதப்பதென்பது ஒரு வித சுகம். கனவுகள் கலைந்து எழும் போது இப்படி நிஜமாகவே பறக்க முடியாதா என ஒரு வித ஏக்கம் தோன்றும்.

அது இப்போது நிஜப்பட்டிருக்கிறது. ஆனால், அவனுக்குப் பறக்க முடியுமென்பதை யாரும் நம்பத் தயாரில்லை. அவனாவது பறப்பதாவது? சும்மா கதை விடுகிறான் – யாரும் நம்ப வேண்டாமாம். அப்படி நம்பத் தயாராயிருந்த ஒரு சிலரும் அவன் இந்த வித்தையை அவன் தங்கியிருந்த வெளிநாட்டிற்தான் கற்று வந்திருக்கிறான் என்று கருதினார்கள் பதினைந்து ஆண்டளவில் ஜேர்மனியில் இருந்து வந்திருக்கிறான். அங்கு இன்னும் என்னென்ன

வித்தைகளைக் கற்று வந்திருக்கிறானோ என்றெல்லாம் சந்தேகப்பட்டார்கள். ஆனால், அவன் பறப்பது பற்றிய எந்த நுணுக்கங்களையும் ஜேர்மனி யில் கற்று வரவில்லை என்பதே உண்மை. அப்படியானால் அங்கிருந்து வந்தபோது விமானத்தில் வந்திருக்கத் தேவையில்லையே? பறந்தே வந்திருக்கலாமே?

இப்படி நியாயத்தைப் பேசினால் அதைக் கேட்க யாரும் தயாராயில்லை. அந்தக் கதையெல்லாம் இங்கு வேண்டாம் அப்பனே... நீ ஏன் ஜேர்மனிக்குப் போனாய்? அங்கு என்னென்ன நடவடிக்கைகளில் ஈடுபட்டாய்? நீ தமிழன். உன்மேல் சந்தேகமாய் இருக்கிறது.

அவன் ஜேர்மனிக்குப் போனது எந்தக் கற்கை நெறிகளுக்கோ அல்லது · ஏதேனும் ஆராய்ச்சிகளுக்காகவோ அல்ல. மொட்டையாகச் சொல்வதானால் உயிர் தப்பிப் பிழைப்பதற்காக அந்த நேரத்தில் ஓடவேண்டியிருந்தது என்றும் சொல்லலாம். பிறந்து வளர்ந்த சொந்த நாட்டை விட்டு இன்னொரு நாட்டுக்கு உயிர் தப்பிப் பிழைக்க ஓடியதென்பது தன்னையே தான் கேவலப் படுத்தியது போலவும் உணர்ந்தி ருக்கிறான். ஆனால், கேவலம் தனக்கல்ல அல்லது தனக்கு மட்டுமல்ல என்பதையும் எண்ணிச் சமாதானமடைய முயன்றிருக்கிறான்.

எண்பத்தி மூன்று - ஜுலைக் கலவரங்கள் வெடித்தபோது அவன் கொழும்பில் படித்துக்

கொண்டிருந்தான். கலவரத்தில் பாதிக்கப்பட்டு தப்பியோடியிருந்த தமிழருக்கு தஞ்சமளிக்க சில நாடுகள் அப்போது தங்கள் கதவுகளைக் கொஞ்சம் திறந்து விட்டன. அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டுதான் அவனும் போனான். இது தான் உண்மை...உண்மை....உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை.

ஆனால் அதை யாரும் நம்பத் தயாராயில்லை. நீ வேறு எதற்காகவோ போயிருக்கிறாய். இப்போது ஏன் இங்கு வந்திருக்கிறாய்?

என்ன கேள்வி இது? சொந்த நாட்டுக்கு (அதை ஒத்துக் கொண்டால்) வருவது ஒரு குற்றமா? அது குற்றமென்றால் சொந்த வீட்டுக்கு வருகிறேன் என்றாவது சொல்லலாமா? அவனுக்கும் வீடு என்று ஒன்றிருந்தது. இராணுவ நடவடிக்கையின் போது அம்மா அங்கிருந்து இடம் பெயர நேர்ந்ததாம். பிறகு வந்து பார்த்தால் ......வீடு குண்டுக்கு இரையாகி இருந்ததாம் – அம்மா எழுதியிருந்தாள். யாழ்ப்பாணத்துக்குப் போய் வீடு இருந்த சுவட்டையாவது பார்க்க வேண்டும் – அம்மாவைப் பார்க்கப் பறந்து போக வேண்டும்.

“தம்பி ஒருக்கால் வந்திட்டு போ ராசா! நான் கண்ணை மூட முதல் வந்திடு. எப்படியாவது வந்திட்டு போ ராசா!” – அம்மா கடைசியாக எழுதிய கடிதம் அது.

அம்மா செத்துப் போய் விடுவாள் என்பதைக் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை. அம்மாவிற்கு சாவு நெருங்கி விட்டதா? ஏன் இப்படி எழுதினாள்?

அம்மாவுக்கும் தெரியாமலே கொழும்பிலிருந்து ஜேர்மனிக்குப் போய்ச் சேர்ந்தது, அது பற்றி அறிவித்த செய்தி அம்மாவுக்குப் பல மாதங்களுக்குப் பின்னர் கிடைத்த போது "எங்கயெண்டாலும் தப்பியோடி உயிரோட இருந்தால் போதும் ராசா, நான் கும்பிட்ட தெய்வங்கள் கைவிடயில்ல, இஞ்சை வராதை! இளம் பிள்ளை.. உண்டு இல்லையெண்டு ஆக்கிப் போடுவாங்கள்" என்றுதான் எழுதியிருந்தாள். அதற்குப் பின்னர் இத்தனை வருடங்களாக எழுதிய கடிதங்களிலெல்லாம் இதே வாசகங்களைத்தான் ஒரு பாட்டுப் போல எழுதுவாள். "இஞ்ச நாட்டு நிலைமைகள் படுமோசம், வர வேண்டாம்!"

அம்மா தனிய இருக்கிறாளே என்ற கவலை எப்போதும் அவனை வருத்தியிருக்கிறது. இந்த தள்ளாத வயதில் அவள் ஒழுங்காகச் சமைப்பாளா ....வேளாவேளைக்குச் சாப்பிடுகிறாளா? என்றெல்லாம் கவலைகள் தோன்றும். இப்போது அக்காமாரும் அம்மாவுடன் இல்லை. திருமணம் முடிந்த பிறகு யாழ்ப்பாணத்தில் யுத்த நெருக்கடிகளும் அதிகரிக்க அவர்களும் அம்மாவை விட்டுப் பறந்து விட்டார்கள். அம்மா தனித்துப் போய் விட்டாள்; வீட்டுக்குக் காவலாக!

"வீடு எப்படிப் போனாலும். போகட்டும் நீங்களும் இந்தப் பக்கம் வந்திட்டால் நல்லது. ஏஜன்ட் மூலம் ஜேர்மனிக்கு வருகிற ஒழுங்குகளும் செய்யலாம்" என அவன் அம்மாவுக்கு எழுதியிருக்கிறான். அம்மா அதற்குச் சம்மதிக்க வில்லை. யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய பெற்றோரைப் போல பிள்ளை குட்டிகளை ஒரு வழியில் விட்டு விட்டு, வீட்டுக்குக் காவலாகக் கிடந்தாள்.

"தம்பி இது..... நாங்கள் பிறந்து வளர்ந்த மண். இந்த வீடு வாசலை விட்டு எங்கை போறது? எல்லாரும் விட்டுட்டு போனால் வீடும் பாழடைஞ்சு போகும். ஊரும் அழிஞ்சு போகும். வந்தான் வரத்தான் எல்லாத்தையும் கொண்டு போயிடு வாங்கள். நீ ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். இப்போதைக்கு இஞ்ச வரவும் வேண்டாம். நிலைமைகள் சீரடைஞ்ச பிறகு வா!"

நிலைமைகள் எப்போது சீரடையும், எப்போது போய் அம்மாவைப் பார்ப்பது எனக் கவலை மேலிடும். அம்மா எழுதுவதை எழுதட்டும் அதைப் பொருட்படுத்தாது போய் வரலாம் என யோசித்தான். இலங்கையை விட்டு தூர இருந்தாலும் கொழும்பி லிருந்து யாழ்ப்பாணத்துக்கான பயணமானது ஒவ்வொரு கால கட்டத்திலும் எவ்வளவு சிரமங்களுக்குள்ளானதாய் இருந்திருக்கிறது. என்பதை அறிந்தே வைத்திருந்தான். கொழும்பு - யாழ் பஸ் சேவை இருந்த நாட்களிலேயே எத்தனையோ சோதனைத் தடை நிலையங்கள்.

அவற்றால் வடிகட்டல்கள் என்ற பெயரில் பிடித்து வைத்தல்கள். (தம்பி உன்ர வயசும் அப்படி......இஞ்ச வந்து இவங்கட கையில மாட்டியிடாதை.....!) தொண்ணூறுக்குப் பின்னர் தரைப் பாதையும் தடையேற்பட, சேறு சகதிகளுக்கூடாகவும் கடல் மார்க்கமாகவும் உலகத்தின் வேறு எங்கோ மூலையில் உள்ள தேசத்துக்குப் போவது போன்ற நிச்சயமற்ற பயணங்கள். கிளாலிக் கடலூடாக உயிருக்கு உத்தரவாதமில்லாது போய் வந்த பயணங்களைப் பற்றியும், பறிபோன உயிர்களைப் பற்றியும் கேள்விப் பட்டுமிருக்கிறான்; செய்திகளாக அறிந்து மிருக்கிறான். எப்படியாவது அம்மாவைப் போய் பார்க்க வேண்டுமென மனம் உந்தும் போதெல்லாம் இந்தப் பயணங்கள் பற்றிய பயம் வந்து தடுத்து விடும். ஆனால் மனம் அடங்காது.

அம்மாவுக்கு ஒரு வருத்தம் துன்பம் என்றால் யார் டொக்டரிடம் கூட்டிப் போவர்? இராணுவ நடவடிக்கைகளின் போது ஊரே பெயர்ந்த வேளைகளிலெல்லாம் அம்மா என்ன செய்திருப்பாள்? எங்கு ஓடியிருப்பாள்? யாராவது உதவி செய்திருப்பார்களா, எனத் தனக்குள்ளேயே கனன்று வெந்து போயிருக்கிறான். பிறகு அம்மாவிடமிருந்து கடிதமாவது வந்து சேரும் வரை நிம்மதி குலைந்து போயிருக்கும்.

தன்னைப் பெற்று வளர்த்த அன்னையை அவளது வயோதிபத்தில் பக்கத்திலிருந்து உதவ முடியவில்லையே என்ற வேதனை நெஞ்சைப்

போட்டு உடைத்திருக்கிறது. சிறு வயதிலேயே அப்பாவை இழந்த பிறகு அம்மா தான் எல்லாமாக இருந்து அவனை ஆளாக்கியவள். அம்மாவை பார்க்காமல் இருக்கிறோமே....என்ற குற்றம் மனதை உறுத்தும் போதெல்லாம் அம்மாதானே வர வேண்டாம் என்று எழுதியிருக்கிறாள்.... எனத் தனக்குச் சமாதானம் சொல்லிக் கொள்வான். ஆனால்....... அம்மாவுக்கு இப்போது என்ன வந்தது? (உன்னைக் கண்ணிலை வைச்ச பிறகு தான் நிம்மதியாகக் கண்ணை மூடுவன்!)

சாவில் நிம்மதியான சாவு, நிம்மதியற்ற சாவு என்றெல்லாம் உள்ளதா?

"தம்பி சின்ன வயதிலேயே படிப்பையும் குழப்பிப் போட்டு உழைச்சு கொக்காமார் ரெண்டு பேரையும் கரை சேர்த்திருக்கிறாய். இந்த நன்றியை நான் ஒருக்காலும் மறக்க மாட்டேன். கடவுள் உன்னைக் கைவிட மாட்டார்.!"

கடவுள் என்றால் அவனுக்கு அம்மாதான். வருடக்கணக்கான காலங்கள் அம்மாவைக் காணாமலே பறந்திருக்கின்றன. ஆனால், கூட இருப்பது போன்ற உள்ளுணர்வு எப்போது மிருக்கும். எந்தக் கருமங்களைச் செய்ய முன்னரும் அம்மாவை நினைத்துக் கொள்வான். காலையில் எழுந்தவுடனும் படுக்கைக்குப் போகும் முன்னரும் சாப்பிடும் போதும், இப்படி எல்லா நேரங்களிலும் அம்மாவை ஒரு தெய்வம் போல நினைத்து வணங்குவான்.

விட்டுப் போன ஆரம்ப காலத்தில் அம்மாவை நினைத்து அழுததுண்டு.... சொல்லாமல் வந்து விட்டேனே.....கடைசியாகப் பார்க்காமலும் வந்து விட்டேனே! வீட்டில் அம்மாவுடனிருந்த நினைவுகள் வரும். சாப்பாடு சரியில்லை, வாய்க்கு ருசியில்லை, என அம்மாவுடன் சண்டை பிடித்திருக்கிறான். சாப்பாட்டைத் தள்ளிவிட்டு எழுந்திருக்கிறான்.

"தம்பி சாப்பாட்டை இப்படித் தள்ளக் கூடாது. சாப்பாட்டுக்கு மரியாதை கொடுக்க வேணும் எத்தினை சனங்கள் இந்த ஒரு வேளைச் சாப்பாட்டுக்கே வழியில்லாமல் தவிக்குதுகள்?"

ஜேர்மனிக்குப் போய் ஒரு "பார்ட்டைம்" வேலை கூடக் கிடைக்காத அந்த நாட்களில், ஒழுங்காக ஒரு வேளைச் சாப்பாடு கூட கிடைக்காத அந்த நேரங்களில், முகம் தெரியாத மனிதர்களின் முகங்களைப் பார்த்துப் பார்த்து யாரிடம் (வேலை) கேட்கலாம்? யார் உதவி செய்வார்கள்? என ஏக்கத்தோடு அலைந்த நாட்களில், அம்மா உலையில் வடிக்கிற கஞ்சியாவது கிடைக்காதா என வாடியதுண்டு.

காலப் போக்கில் எல்லாவற்றையும் "அஜஸ்ட்"பண்ணப் பழகி உழைப்பே மூச்சாகி, புதிய உலகம் புதிய நண்பர்கள் புதிய தொழில்... உழைப்பு பணம்! பணம்! அம்மாவின் கடிதங்களைக் கண்டால் ஒரு பதில் போடுவதோடு சரி.

அவ்வப்போது பணமும் அனுப்பி வைப்பான். அத்தோடு கடமை முடிந்தது போன்ற உணர்வு ஏற்படுகிற மரத்துப் போன வாழ்க்கை.

அவன் அனுப்பிய பணத்தில் அக்காமாருக்கு திருமணங்கள் ஒப்பேறிய போது அவன் ஊருக்கு வர விரும்பினான். "அம்மா உங்களைப் பார்க்க ஆசையாயிருக்கு!" அவன் அப்படி அம்மாவிற்கு எழுதினாலும் உள்ளூர இன்னொரு ஆசையும் இருந்தது. ஊருக்குப் போனால் சாந்தியைப் பார்க்கலாம். (பச்சைக் கிளியானால் பறந்தோடி வருவேன்.) சாந்தி ஓரிரு கடிதங்கள்தான் எழுதியிருக்கிறாள். அவன் ஜேர்மனிக்குப் போய்ச் சேர்ந்து சுமார் நான்கு வருடங்களின் பின்தான் அவளது முதற் கடிதம் கிடைத்து. (நின்ற இடம் யாவும் நிழல் போலத் தோன்றுதே.)

அந்தக் கடிதம்தான் அவனுக்குத் தனது மனதிலும் என்ன இருக்கிறது என்பதை உணர்த்தியது. அந்தக் கணத்தில் அவன் வானத்தில் எழுந்து பறப்பது போன்ற உணர்வில் மிதந்தது இன்னும் நினைவிருக்கிறது. சாந்தி இப்போது எப்படியிருப்பாள்? போகும் போது பதிமூன்று வயசு சிறுமியாயிருந்தவளுக்கு இப்போது எத்தனை வயசு இருக்கும்? சாந்தி விஷயத்தில் கூட்டல் கணக்குக் கூடப் பிழைக்கிறது. அவளது வளர்ந்த தோற்றத்தைப் பார்க்க வேண்டுமென்று ஆவல்.

ஆனால், அம்மா வரவேண்டாமென்றுதான் எழுதினாள்; "இஞ்ச நிலைமைகள் படு மோசம்" அப்போது வந்திருந்தால் அம்மாவைப் பார்த்திருக்கலாம். இப்போது யாழ்ப்பாணம் போய்ச் சேரும் வரை அம்மா உயிரைப் பிடித்து வைத்துக் கொண்டு காத்திருப்பாளா?

விமானத்திலிருந்து இறங்கிய போதும் அவனுக்கு அதே உணர்வுதான் மனதைக் குடைந்து கொண்டிருந்தது. எவ்வளவு கெதியில் யாழ்ப்பாணம் போக ஏலுமோ அவ்வளவு கெதியில் போய் விட வேண்டும். ஆனால்....யாழ்ப்பாணப் பயணம் நினைத்தவுடன் போகக் கூடிய மாதிரியா இருக்கிறது? பதிவுகள், விசாரணைகள், பாஸ்கள், ...அது வரை எங்கே தங்குவது?

தரையிறங்கிய பின்னரும் விமானங்கள் இறக்கைகளை நீட்டி விரித்துக் கொண்டு நின்றன. நாங்கள் நிரபராதிகள் எனக் கைகளை உயர்த்திக் கொண்டு நிற்கும் மனிதர்களைப் போல! முன் பின் தெரியாத தேசங்களுக்கெல்லாம் போய் இரவு பகலென்றின்றி இன்ன நேரமென்றின்றி சர்வ சுதந்திரமாகத் திரிந்திருக்கிறான். கொழும்பில் தங்கியிருக்க நினைத்தால் பயமாயிருந்தது. விமான நிலையத்தில் சோதனைகள் முடிந்து வெளியே வந்தது நள்ளிரவு கடந்த நேரம். அம்மாவின் கடிதத்தைக் கண்டதும் திடுதிப்பென்று வெளிக்கிட்டு வந்தாயிற்று. வந்த பிறகு தான், தங்கியிருப்பது

பற்றிய பிரச்சினையொன்று தன் தலையைப் பெரிதாக நீட்டிக் கொண்டு எழுவது தெரிந்தது.

கொழும்பில் மாமா ஒருவர் இருக்கிறார். அவர் வீட்டுக்குப் போகலாமா? கேட்டுப் பார்க்கலாம். வேளை கெட்ட நேரத்தில் "போன் கோலை" கையில் எடுத்த பதற்றம் மாமாவிடம்! "இதெல்லாம் முன்னமே சொல்லி ஒழுங்கு படுத்தி போட்டல்லோ வரவேணும்? இப்படி சட்டு புட்டென்று வந்து நின்றால் நான் என்ன செய்யிறது? இஞ்ச பொலிசில பதியாமல் ஒருத்தரையும் வீட்டிலை வைச்சிருக்கேலாது. பதிஞ்சு போட்டு வைச்சிருந்தாக் கூட விடுறாங்களில்லை!"

மாமா பாவம். அருமையான மனுசன். யாருக்கும் என்ன உதவியும் சலிக்காமல் செய்கிறவர். கொழும்பு நெருக்கடி நிலைமைகள் அவரையும் மாற்றியிருக்கின்றது.

"சரி....அங்கிள்....பரவாயில்லை. நான் வேறை எங்கையாவது தங்கிறன்."

"இந்த நேரத்தில எங்க போய்த் தங்கப் போறீங்கள்?" உண்மையாகவே மாமா கவலைப் படுவது அவரது குரலில் தொனித்தது.

"எங்கையாவது தங்கலாம்!" ஃபோனை வைத்தான். செய்வதறியாது நின்றான்.

அப்படி டெலிபோனை சட்டென வைத்தது சரியில்லையோ எனத் தோன்றியது. மாமாவிற்கு அது முகத்திலடித்த மாதிரி இருந்திருக்கும். என்ன நினைத்தாரோ தெரியாது. தனக்கு ஏன் அவ்வாறு கோபம் வந்தது எனக் கவலையடைந்தான். ஒரு நம்பிக்கையுடன் "கோல்" எடுத்த போது மாமாவின் கடுமையான தொனி எரிச்சலையூட்டிவிட்டது. மாமாவும் இப்படியான ஒரு சங்கடமான நிலைமையை எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராத விதத்தில் எதிர்பார்த்திருக்க மாட்டார். அதனாற்தான் அப்படி சினந்து கதைத்திருக்கிறார். "நோர்மலா"ன நாளென்றால் இப்படி நேர்ந்திருக்குமா?...இவ்வளவு காலத்துக்குப் பிறகு வந்திருக்கிறேனே, பார்க்கப் போகிறோமே என மாமா எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பார். நாட்டின் நெருக்கடி நிலைமைகள் மனிதர்களின் குணாதிசயங்களைக் கூட மாற்றுகிற அளவுக்கு நிர்ப்பந்திக்கிறது. யாருடையதோ பாவத்தை யாரோ சுமக்கிறார்கள். யார் மேலோ தோன்றும் கோபத்தை வேறு யார் மேலோ காட்டுகிறோமே எனக் கலங்கினான். திரும்பவும் "கோல்" எடுத்து மாமாவுடன் சமாதானமாகப் பேசினால் நல்லது என நினைத்தன். ஒருவேளை மாமா கூட மனம் இரங்கி.... வீட்டுக்கு வா.... என்று சொல்லக்கூடும் – பெரியதொரு பிரச்சினை தீர்ந்த மாதிரியிருக்கும். ஆனால்..... வேண்டாமென இன்னொரு மனசு தடுத்தது. "யாருக்கும் தொல்லை கொடுக்க வேண்டாம். வேறு வழியைப் பார்."

முன்னர் கொழும்பில் தங்கியிருந்த நாட்களில் சேர்ந்து படித்தவர்களை ஒவ்வொருவராக நினைவு கூர்ந்து பார்த்தான். அவர்களில் யார் யார் கொழும்பு வாசிகளாக இருந்தவர்கள் என நினைவில் கொண்டு வர முயன்றான். அவர்கள் கூட இப்போது கொழும்பிற் தான் தங்கியிருக்கிறார்களோ தெரியவில்லை. அவர்களுடனான தொடர்புகளெல்லாம் இந்தப் பதினைந்து வருட காலங்களில் விட்டுப் போய் இருந்தது. இருக்கிறார்களா எனப் போய்ப் பார்க்கலாம் ஆனால்..... இந்த நடு நிசியில்... வீடு வாசல்களைத் தேடிப் பிடித்து கதவைத் தட்டுவது சரியா?... அப்படி யாரையாவது கண்டு பிடித்தாலும் இன்னும் நினைவு வைத்திருப்பார் களோ என்னவோ...! தன்னை இன்னார் என அறிமுகம் செய்து .... இப்போது ஜேர்மனி யிலிருந்து வருகிறேன் தங்குவதற்கு இடம் வேண்டுமென்று சொன்னால் அது எந்த வகையில் புரிந்து கொள்ளப்படும்..... சொந்த மாமாவே காய்வெட்டி விட்டார். மற்றவர்களிடம் அதிகம் எதிர்பார்க்க முடியாது தானே....? இதற்கெல்லாம் மேலாக இந்நடுநிசியில் தங்குவதற்காக இடம் தேடித் திரிவது சாத்தியப்படுமா என்பதே பெரிய கேள்வி. பாதுகாப்புப் படையின் கையில் அகப்பட்டால் என்ன பதிலைச் சொல்லுவது? கணத்துக்குக் கணம் அவனுக்குப் பயம் அதிகரித்துக் கொண்டிருந்தது. சொந்த நாட்டுக்கென வந்து திக்கற்றுப் போய் நிற்பதாய் உணர்ந்தான்.

மாமாவிடமே இன்னொரு முறை ⁛போன் பண்ணிப் பார்க்கலாம். அவராகச் சொல்லாவிட்டால் தானாக என்றாலும் ப்ளீஸ் பண்ணிக் கேட்டுப் பார்க்கலாம். (ஒரு வழியும் இல்லை அங்கிள்.... விடியிற வரையாவது தங்கியிட்டு .... பிறகு வேற இடம் பார்க்கிறன்.) அதற்கு அவர் சம்மதிக்கக்கூடும் எனக் கருதினான்.

பொதிகளை இழுத்துக் கொண்டு டெலிபோனுக்கு நடந்த போது அண்மையாக இருவர் வந்தார்கள். ஒரு மாதிரிப் பார்த்தார்கள். அவனுக்குள் மிரட்சி

"எங்க இருந்து வாறது?....பெட்டியில என்ன இருக்கிறது?.....படு சேரம செக் கறன்ட ஓன.... (சாமான் எல்லாம் செக் பண்ண வேணும்.....)"

என்ன இது? யார் இவர்கள்...? எதையாவது கையாடல் செய்யும் நோக்கமா?

அவன் ஆத்திரமாக சொன்னான். "எயாப்போட்டுக்குள்ள எல்லாம் செக் பண்ணி முடிஞ்சுது, பிறகென்ன.....?"

"பரவாயில்லை....திரும்பவும் பார்க்க வேணும். அதுக்கு எங்களுக்குத் தகுதி இருக்கு."

அவன் உஷாரடைந்தான் - ஒரு வேளை இவர்கள் சிவில் உடையில் உள்ள அதிகாரிகளாக இருக்கலாம். சந்தேகத்துக்குரியவர்களை "செக்"

பண்ணுவதற்காக இப்படி ஒரு ஒழுங்கு இருக்கக் கூடும். அவர்களுடன் முண்டுவது புத்திசாலித்தன மல்ல என நினைத்து அடக்கமாகப் பேசினான். "இவ்வளவு பணம் தந்தால் போகலாம்..... அல்லது டெலிபோன் கோலிலேயே உள்ள போட முடியும்" மிரட்டினார்கள். அவர்களிடமிருந்து விடுபட்டாலே போதுமென்று இருந்தது - பேரம் பேசி விலையை குறைத்துக் கொடுத்தான். மறுபக்கம் திரும்பிய போது இன்னொரு ஆள்.

"மஹத்தையா .. எங்க போறது....? வாஹனயக் ஓனத (வாகனம் தேவையா.....?)" இந்த இடத்தில் நின்று யோசிப்பதை விட போய் விடுவது நல்லது. அந்த ட்ரைவரிடமே தனது நிலைமையைச் சொல்லிப் பார்க்கலாம்.

"மஹத்தையா...பயவெண்ட எப்பா (பயப்பட வேண்டாம்.) எனக்குத் தெரிந்த ஒரு லொட்ஜ் ஆள் இருக்கிறான். அங்கு போகலாம்."

வாகனம் கொழும்பை அண்மித்த போது அடுத்த தடை. "டோர்ச் லைட்"டைக் காட்டி நிறுத்தினார்கள். நீ யார்? எங்கிருந்து வருகிறாய்? கொழும்புக்கு ஏன் போகிறாய்? "ஐடென்ரிரிக் காட்" பார்த்தார்கள்.

"என்ன தமிழனா?... பாக்குகளை இறக்கு!" சோதனை மேல் சோதனை....(போதுமடா சாமி)

"கொழும்பிலே எங்க தங்கப் போகிறாய்? லொட்ஜிலா?" கேட்ட தொனியே லொட்ஜில்

தங்கினால் தொலைத்து விடுவோம் என்பது போல் இருந்தது. (இல்ல...வெள்ளவத்தையில் .... மாமா வீடு இருக்கு.... அங்க தான்.) மாமா யார்? என்ன செய்கிறார்? அவரது பூர்வீகம் என்ன?....உருட்டல்களும் மிரட்டல்களும். ட்ரைவர் இறங்கி வந்து அவர்களோடு பேசினான்.

"மம ...மேயாவ..அந்துர்ரணவா.... (எனக்கு அவரைத் தெரியும்)"

"சரி போங்க"

லொட்ஜில் தங்கியிருந்து யாழ்ப்பாணம் போவதற்குரிய பதிவு, அனுமதி பெறுதல் போன்ற காரியங்களில் ஈடுபட்டான். இரண்டாவது நாளே மனேஜர் சொன்னார்.

"நீங்க.... இங்க தங்கியிருக்க வேணாம்... யாராவது சொந்தக்காரங்க இருந்தால் அங்க போய் இருங்க"

"ஏன்?"

"இங்க அடிக்கடி செக்கிங் வருவாங்க... புது ஆளென்றால் புடிச்சிக் கொண்டு போயிடுவாங்க...."

அவனுக்குக் கலக்கமாயிருந்தது. யாழ்ப்பாணத்துக்கு நினைத்தவுடன் போக முடியாது. "பொலிஸ் கிளியரன்ஸ்", அனுமதி கிடைக்கத் தாமதமாகலாம் என்று சொல்கிறார்கள்.

அது வரையும் இங்கு எங்கேயும் தங்கி நிற்கக் கூடாதென்றால் ... அடியுமின்றி முடியுமின்றி இதென்ன...?

இரவு அறைக் கதவு தட்டப்பட்டது. திறந்தால் காக்கிச் சட்டைகள் துவக்குகளை தூக்கிப் பிடித்துக் கொண்டு......

கடவுளே இங்கு வராமலே நின்றிருக்கலாமே. இந்தப் பதினைந்து வருடங்களும் ஜேர்மனியில் எந்த உபத்திரவங்களும் உயிர்ப் பயமும் இல்லாமல் சீவிக்க முடிந்ததே!.

"விசாரணை செய்ய வந்திருக்கிறோம்." பொருள் பண்டங்களை சோதனை செய்தார்கள். "உன்னை மேலும் புலன் விசாரணைக்காக கொண்டு செல்ல வேண்டியுள்ளது." அவன் விக்கித்துப் போனான். .... அம்மாவைப் பார்ப்ப தற்காகத்தான் இங்கு வந்தேன்... அம்மாவின் உயிர் பிரிவதற்கு முன் ஊருக்குப் போக வேண்டிய அவசரம்....அதற்காக ஏற்கனவே பொலிஸில் பதியப்பட்டிருக்கின்ற சான்று.... மூன்று நாட்களுக்கு முன்னர் தான் இந்த நாட்டுக்கு வந்து சேர்ந்ததற்குரிய சான்றுகள் போன்ற பத்திரங்களை யெல்லாம் காண்பித்தான். அந்த கதையொன்றும் தேவையில்லை. உன்னை விசாரிக்க வேண்டியுள்ளது.

இப்படித்தான் அது நடந்தது. கொண்டு வந்து பூட்டி வைத்தார்கள். ஓரிருவரே தங்கக் கூடிய

அறையில் முப்பத்திரண்டு பேர் வரை அடைக்கப்பட்டிருந்தார்கள். அறையுள்ளே ஒரு பக்கத்தில் கதவில்லாத ரொய்லட். அதன் நாற்றம். இவன் யார், அவன் யார் என்றே தெரியவில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து அழலாம் போலிருந்தது. அமைதியாக இருக்க முயன்றான். விசாரித்து விட்டு விடுவதாகத் தானே சொன்னார்கள். நாளைக்குப் போய் விடலாம்.

நாளையும் வந்தது. விசாரணைகள்....பூட்டி வைப்பு, விசாரணைகள். தினமும் நாளைகள் வரும் வரும் என்ற எதிர்பார்ப்பு. நாட்கள் வந்து கொண்டிருந்தன. ஆனால், "உன் மேல் சந்தேகம் உள்ளது உன்னை விட முடியாது"

உள்ளே இருந்தவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக் கதைத்தார்கள். இனி மீட்சியே இல்லை என்றார்கள். "தங்களுக்கு புரமோசன் கிடைப்பதற்காக யாரையாவது பிடித்து வைத்து விட்டு மேலதிகாரிகளின் தயவைப் பெறுக் கொள்கிறார்கள்" எனப் பேசிக் கொண்டார்கள். அதற்காகத்தான் வெருட்டி உருட்டி தாங்கள் தயார் செய்த பத்திரங்களில் வாக்குமூலம் எனக் கையெழுத்து இடச் செய்கிறார்கள். அவனுக்கு எல்லாமே சிதம்பர சக்கரமாய் இருந்தது. "நீ வெளிநாட்டிலிருந்து தானே வந்திருக்கிறாய்? அது அவர்களுக்குத் தெரிந்திருக்கும். யாராவது "ரிப்" கொடுத்திருக்கலாம். இவ்வளவு காசு கட்டினால்

உடனே விட்டு விடுவார்கள். எல்லாம் காசு பிடுங்குவதற்காகத் தான். நான் இத்தனை முறை பிடிபட்டு வந்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் இவ்வளவு காசு கொடுத்து விடுதலை யாகியிருக்கிறேன்" எனச் சிலர் வாழ்க்கையில் இதெல்லாம் சாதாரண விஷயம் என்பது போல மிக அலட்சியமாகப் பேசினார்கள். சிலர் அழுது வடித்துக் கொண்டிருந்தார்கள்.

அவனுக்கு யாருடனும் பேச முடியவில்லை. அழுகை நெஞ்சுக்குள் முட்டி முட்டி மோதியது. உறக்கமில்லை. அல்லது உறக்கம் மறை முகமாக கெடுக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட ஒரு சிலர் இரவு பகலாக மாறி மாறி பக்கத்திலிருந்து பேசிக் கொண்டிருந்தார்கள். (நான் இன்ன இயக்கம் எனக்கு இன்னாரைத் தெரியும்) என்று பெருமையாக! அவனுக்கு எல்லாமே பிரமையாக இருந்தது. இவர்கள் உண்மையாகவே கைது செய்யப்பட்டு வந்தவர்களா அல்லது மூளைச் சலவை செய்விப்பதற்காகத் தயார் செய்யப்பட்டு அனுப்பப்பட்டவர்களா?

நாளாக ஆக அவன் நம்பிக்கை இழக்கத் தொடங்கினான். தடுத்துவைக்கப்பட்ட பொலிஸ் நிலையத்திலிருந்து வேறு தடை முகாமுக்கு மாற்றப்பட்டான்.

அம்மாவை நினைக்கும் போதெல்லாம் நெஞ்சு பற்றி எரிந்தது. போய்ப் பார்க்க முதலே அம்மா விட்டுப் போய் விடுவாளோ... "நீ

எங்கையாவது தப்பி இரு தம்பி..... இங்கு வர வேண்டாம். இங்கு நிலைமைகள் படு மோசம்" என அம்மா எழுதிய கடிதங்கள் நினைவு வந்தன. இப்போது இதை அறிந்து கொண்டால், "கடவுளே ....இது அம்மாவுக்கு தெரிய வரக் கூடாது."

அவனுக்கு வேதனையாக இருந்தது. எதற்காக அடைத்து வைக்கப்படுகிறோம் என்று தெரியாமலே அடைத்து வைக்கப்படுகிற கொடுமை எதிரிக்குக் கூட ஏற்படக் கூடாது. சாந்தி கனவுகளில் வந்தாள். ஊருக்குப் போய் அவளைக் காணப்போகிறோம் என உள்ளத்தில் உந்தப் பட்டிருந்த துடிப்புகளெல்லாம் அடங்கிப் போயிருந்தன. (காலம் இனிமேல் நம்மை ஒன்றாய்க் கொண்டு சேர்க்குமோ?)

வருடக்கணக்காகச் சிலர் அடைக்கப்பட்டு கிடக்கிறார்கள். அதே கதிதான் தனக்கும் ஏற்படுமோ...? எப்போது இந்தப் பிரச்சினைகள் தீரும்... எப்போது எங்களுக்கு விடுதலை கிடைக்கும்? என்றெல்லாம் ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாறிக் கொள்வதும் அன்றாடக் கடமையாகி விட்டிருந்தது. "உனக்கு எதிராக இன்னும் நீதி மன்றத்தில் ஒரு குற்றமும் சமர்ப்பிக்கப்படவில்லைத் தானே. மூன்று மாதத்தில் விட்டு விடுவார்கள். அதற்கு மேல் வைத்திருக்க முடியாது?" என சிலர் சட்ட நுணுக்கங்களைக் குறிப்பிட்டு ஆறுதற் படுத்தினார்கள். அது

உண்மையாயிருந்தால்.... மூன்று மாதம் முடிவதற்கு இன்னும் சில நாட்கள் தானே இருக்கிறது? ஆனால், "இங்கு சட்டத்தைப் பற்றியெல்லாம் யார் கவலைப்படுகிறார்கள்....?"

அவனது உடல் தளர்ச்சியடைந்து கொண்டிருந்தது. சரியான சாப்பாடு இல்லை. மனதில் அயர்ச்சி. அடிக்கடி மயக்க நிலை ஏற்படுவது போன்ற உணர்வு. சிறு விடயங்களுக்கெல்லாம் பயம் ஏற்படுகிறது. பக்கத்தில் ஏதாவது விழுந்து சத்தம் கேட்டாலும் யாராவது உரத்துக் கதைத்தாலும் பயம். உறக்கமில்லாத இரவுகள், துயரம்.

விஞ்ஞான பூர்வமாக உலகம் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறது. ஒவ்வொரு காரியங்களையும் சாதிக்க அரிய சாதனங்களெல்லாம் வந்து விட்டன. ஒருவனைப் பற்றி சரியான கணிப்புச் செய்யும் வல்லமை மனிதப் பண்புக்கு இல்லாவிட்டால் அதற்கு என்று ஒரு சாதனத்தைக் கண்டு பிடித்து விட்டால் எவ்வளவு நல்லதாயிருக்கும்.

அவனுக்கு நெஞ்சு வலித்தது. இப்போதெல்லாம் இந்த நெஞ்சு நோவும் புதியதொரு தொல்லையாய்ப் போய் விட்டது. நெஞ்சு நோவுக்குப் பல காரணங்கள் இருக்கலாம். நியாயமின்றி அடைக்கப்பட்டிருக்கிற கொடுமை பற்றிய கவலை, எதிர்காலம் பற்றிய பயம் எல்லாம். நெஞ்சை ஒரு கையால் அழுத்தி அழுத்தி தானே

வருடிக் கொண்டிருந்தான். ஒரு மூலையில் சுருண்டு படுத்தான். எது சரி? எது உண்மை? எது பொய்...? இப்படி இங்கே அடைக்கப்பட்டுக் கிடப்பதுகூட ஒரு கனவு போலிருந்தது. நிஜ வாழ்க்கை என்பது எது என்று குழப்பமாயிருந்தது. கண்கள் சொருகியது. திடுக்கிட்டுத் திடுக்கிட்டு விழித்தான். நெஞ்சு வலித்தது. யாரோ வருடி விட்டார்கள். யாரோ வருடி விடுகிறார்களா?... அல்லது அது தனது கையா...? கண்கள் இர ண்டும் என்று உம்மைக் கண்டு பேசுமோ...?

பறவைகள் பறந்தன. உல்லாசமாக.... கூட்டம் கூட்டமாக! அவை திரும்பவும் தரைக்கு இறங்கின. வேறு சில பறவைகள் தன்னந் தனியாக பறந்து கொண்டிருந்தன. அவை களைத்துப் போனவை போல மிக மெதுவாக சிறகுகளை நீட்டி விரித்துக் கொண்டு இன்னும் உயர உயரக் காற்றில் மிதந்து கொண்டிருந்தன. அவை தரைக்கு இறங்கி வரவே மாட்டாதா என அவற்றின் தனிமை குறித்துச் சோகமாயிருந்தது.

....உயர்ந்து வளர்ந்த மரங்கள்.... ஒரு காடு போலவும் தோன்றுகிறது. ஆனால் காடல்ல. மரங்கள் அவ்வளவு நெருக்கமாக இல்லை. பற்றைப் புதர் இல்லை. குளிர்ந்த காற்று மரங்களூடு வீசி வருகிறது. தார் போட்ட வீதி மரங்களை இடைபிரித்துச் செல்கிறது. இரவு. அதனாலோ என்னவோ பாதை தெரியாமலிருப்பது போலொரு மயக்கம். இரவின் கோலத்தைத்

துகிலுரித்துக் காட்டும் மின் வெளிச்சம் அறவே இல்லாத பிரதேசம் அது. எனினும் நிலா எறிக்கிறது. மரங்களென்றாலோ நிலவைக் கூடிய வரை மறைத்து அந்த இரவைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன. நிழல்தானென்றாலும் நிலவு மனதுக்கு இனிமையைச் சேர்க்கிறது. (நின்ற இடம் யாவும் நிழல் போலத் தோன்றுதே.)

அந்தப் பாதையில் போனால் ஒரு கோயில் தென் படுகிறது. கோயிலிற் திருவிழா – நிலா வெளிச்சத்திற் திருவிழா நடக்கிறது. அங்குமிங்குமாக திருவிழா பார்க்க வந்த மக்களையும் சாமி கும்பிட வந்த மக்களையும் துப்பாக்கிகளுடன் நிற்கும் இராணுவத்தினரின் தோற்றம் பயமுறுத்துகிறது. எங்கும் நிறைந்தவர்கள். எல்லாம் வல்லவர்கள். கடவுளிலும் சக்தி வாய்ந்தவர்களைப் போல தங்களிலும் பெரிய பெரிய துப்பாக்கிகளைச் சுமந்து கொண்டு நீக்கமற நிறைந்திருந்தார்கள்.

அவன் கோவிலுக்குள் நுழைந்து கர்ப்பக் கிரகத்தை நோக்கிச் சென்றான். அங்கே ஒளித்திருக்கலாம். அங்கே போனால் . . . சாந்தி! பேச எத்தனித்தான். பேச்சு வரவில்லை. சாந்தி எழுந்து அவனைப் பார்த்துக் கொண்டே அந்தப் பீடத்தில் தன் கைகளிரண்டையும் வைத்தாள். அவளது கைகளை அவன் ஆதரவுடன் பற்றினான்.

அந்தக் கணத்தில் அவர்கள் கால்கள் பூமியை விட்டு எழுந்தன. ஒருவர் கையை ஒருவர் பிடித்தவாறும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்த

நிலையிலும் மேலே மேலே காற்றோடு போனார்கள். அடைத்து வைத்திருந்த மூச்சு உடைந்து வெளிப்பட்டது போல.

"நீயும் செத்துப் போனாயா?"

அவனால் பறக்க முடியுமென்பதை யாரும் நம்பத் தயாரில்லை. யார் நம்பினாலும் அம்மா மட்டும் ஒரு போதும் நம்பவே மாட்டாள். "தம்பி எப்படியாவது வருவான்.... வராவிட்டால் கடிதமாவது போட்டிருப்பான்...ஏனோ கிடைக்க வில்லை." எனத் தபால் சேவையை குறை சொல்லிக் கொண்டு வழியை வழியைப் பார்த்திருப்பாள்.

(மல்லிகை 2000)

# உறுத்தல்

"நைட் ஸி∴ப்ட்" வேலை முடிந்து பஸ் எடுத்து வீட்டுக்கு வந்து சேர எட்டு மணியாகி விட்டது. நித்தியும் கோபாலும் ஏற்கனவே புறப்பட்டு விட்டார்கள் என்பதை பூட்டியிருந்த கதவு காட்டியது. இப்படி சில நாட்களில் அவர்களுக்கு பொறுப்புணர்வு மிகுதியானதுபோல் நேரத்துடன் வேலைக்குப் போய்விடும் அற்புதம் நடப்பதுண்டு. கதவைத் திறந்து வீட்டுக்குள் போனதும் தனிமையை மறக்க ரேடியோவை "ஓன்" பண்ணினேன். "தூக்கம் உன் கண்களைத் தழுவட்டுமே...." என அது பாடியது. இரவு வேலைக்குப் போகிறவர்களெல்லாம் தூக்கம் கெட்டு கடமையே கண்ணாக இருப்பார்களாக்கும் என அது அப்பாவித்தனமாக எண்ணிக் கொண்டிருக்கிறது. ஆனால் எனக்கு இப்போது உறங்க முடியாது. சமையல் வேலை காத்துக் கொண்டிருக்கிறது.

உத்தியோக நிமித்தம் இந்த நகரத்துக்கு வந்து தங்குமிட வசதி கருதி ஒன்று சேர்ந்தவர்கள் நாங்கள்.

நகரத்தையண்டிய பகுதியில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் குடியிருந்தோம்.

நித்தியானந்தன் கிராம அபிவிருத்தி அலுவலராக வேலை பார்க்கிறவன். கோபாலச்சந்திரன் ஒரு நிறுவனத்தின் விற்பனைப் பிரதிநிதி. தொழிற்சாலை ஒன்றில் "ஸி.ஃப்ட் என்ஜினியரா"க் கடமையாற்றுகிறவன் நான். அன்றாடம் வேலைக்குப் போவது, வருவது சாப்பாட்டுக் கடைகளில் போய் எதையாவது வயிற்றுப் பாட்டுக்குப் போட்டு விட்டு வந்து அறைகளில் ஒதுங்குவது என்று எங்கள் வாழ்க்கை போய்க் கொண்டிருந்தது. உப்புச் சப்பில்லாத இந்த வாழ்க்கைக்கு ஒரு சுவாரஸ்யத்தை ஏற்படுத்தலாமே எனக் கருதி "நாங்களே சமைக்கிற" திட்டத்தை ஆரம்பித்தோம். அதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. மூவருமே திருமண வயதில் (திருமணத்தை எதிர்பார்த்து) காத்திருக்கும் இளைஞர்கள். வந்து வாய்க்கப் போகிற மனைவிக்குச் செய்யவேண்டிய பணி விடைகள் பற்றிய பயம் (அல்லது ஆர்வம்) உள்ளூர எங்களுக்கு இருந்தது. விளையாட்டாகவேனும் சமையற் கலையைக் கற்றுத் தேர்ந்து விடலாமே என்ற ஆசை தான்.

அரிசியை சுளகில் எடுத்துக் கொண்டு வெளித் திண்ணைக்குப் போனேன். அரிசி கொழிப்பதென்பது மிக நுட்பமாகச் செய்ய வேண்டிய பணி. நெல், கல், உமி, குறுணல் இத்யாதி சரக்குகளையெல்லாம் அப்புறப் படுத்தும் வித்தை கை வருவதற்கு சில நாட்கள் பிடிக்கும். ஒரு வகையில் பார்த்தால் மனதுக்கு சலிப்புத் தரும் வேலை இது. ஆனால், இதற்காகவே விசேஷமாக

படைக்கப்பட்டவர்கள் தாங்கள்தான் என்பது போல பெண்கள் மிக நிதானமாக அரிசி கொழிக்கும் காட்சிகளை நினைவில் கொண்டு வந்து இவ்வேலையை ஒரு சவாலாக எடுத்துக் கொள்ளப் பழகியிருந்தேன். எனினும் வெளித்திண்ணைக்குப் போவது சலிப்புணர்வை போக்கடிக்கும் நோக்கத்தில்தான். அரிசியின் வாசனையை மோப்பம் பிடித்துக் கொண்டோ அல்லது எனது வருகையின் அசுகையை தெரிந்து கொண்டோ வழக்கமாக வரும் கோழிகள் என் மனதைக் கவர்ந்திருந்தன.

அரிசியை கொழித்தவாறு வேலிப்பக்கம் நோட்டமிட்டேன். முதலில் அந்தச் சேவல் வந்தது. சிறகை அடித்து ஒரு முறை கூவியது. தலையை திருப்பித் திருப்பி இந்தப் புறமும் அந்தப் புறமும் பார்த்தது. பாதுகாப்பை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு குனிந்து தீன் பொறுக்குவதுபோல பாசாங்கு செய்து பேடுகளை அழைத்தது. பேடுகளும் இந்தப் பக்கம் வந்ததும் நான் ஒரு சிறங்கை அரிசியை எடுத்து வீசினேன். சேவலும் அதோடு சேர்ந்து இளங் கோழிகள் இரண்டும் ஓடிவந்தன. சேவல் "கொக்! கொக்!" என நிலத்தைக் கொத்தி பேடுகளைச் சாப்பிடச் சொன்னது. கறுப்புக் கோழி ஒரு வயதான பெண்ணைப் போல இடுப்பை அசைத்து அசைத்து ஓட முடியாது அப்போது தான் ஓடிவந்து சேர்ந்தது. வந்ததும் சாப்பிட வேண்டும் என்ற எண்ணத்தையும் விட்டு இளங்கோழிகளுக்கு

கொத் கொத்தென கொத்தியது. மனிதர்களிடம் மட்டுமன்றி பிராணிகளிடமும் பொறாமை உணர்வு உள்ளது போலும்!

இளங்கோழிகள் அப்பால் விலகி ஓட சேவல் இடையில் புகுந்து விலக்குப் பிடித்தது. ஒரு காலைத் தூக்கி சிறகொன்றை விரித்து ஒரு முறை சுழன்று நடனமாடுவது போல கோழிகளுக்கு அண்மையாக சேட்டை செய்தது. தான் ஓரிரு பருக்கை அரிசியை மட்டும் கொத்தி எடுத்துக் கொண்டு பேடுகளை வயிறு நிறைய சாப்பிட விட்டு மனம் நிறையப் பார்த்து நின்றது. பிராணிகளின் வாழ்க்கையில் நிறைய அர்த்தங்கள் உள்ளன. அவைகளிடத்தில் அன்பும் காதலும் உண்டு.

"கேற்" திறக்கப்படும் சத்தம் கேட்டது. நித்திதான் வருகிறான் என நினைத்துக் கொண்டு எழுந்தேன். சமையலுக்கு ஏதாவது கறி வாங்கி வருவான் என அவனைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அவனோ வெறுங் கையுடன் வருவது தெரிந்தது.

"என்ன நித்தி? ....... கறிக்கு ஒன்றும் வாங்கி வரயில்லையா?"

அவன் கையைச் சொறிந்து கொண்டு நின்றான். எனக்கு விளங்கி விட்டது. அவனது கையிற் பணம் இல்லை. என்ன செய்யலாமெனச்

சிந்தனையில் ஆழ்ந்து விட்டான். அவனைப் பொறுத்தவரை இது ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டிய விஷயம்தான். மச்சக் கறியில்லாது நித்திக்குச் சாப்பாடு இறங்காது. எதை இழந்தாலும் ஒரு நேரச் சாப்பாட்டை இழக்கத் தயாராயில்லாதவன் அவன்.

எனக்கு நித்தியை சீண்ட வேண்டும் போல ஒரு விளையாட்டு உணர்வு மூண்டது.

"உனக்கு கோழிக் கறி விருப்பமா?"

என்னை ஒரு ஏளனப் பார்வை பார்த்தான் நித்தி – ஒரு முழுக் கோழி வாங்கக் கூடியளவுக்கு கையிற் பணப்புழக்கம் இல்லாதவன்.... சம்பளம் எடுத்த மறுநாளே அப்பாவின் கடன் சுமைகள், தம்பியவர்களின் படிப்பு செலவுகள் போன்ற வற்றுக்கு பணம் அனுப்பி விட்டு வெறும் கையோடு திரிகிறவன் கோழி வாங்குவதாவது! இதுதான் நித்தியின் பார்வைக்கு அர்த்தம்.

நான் மேலும் புதிர் போட்டேன்.

"உனக்கு கோழி உரிக்கத் தெரியுமா.....? அது மட்டுமல்ல கோழியைக் கொலை செய்து உரிக்கவேணும்.. அது உன்னாலே முடியுமா?"

கொலை என்றதும் பின்வாங்கி விடுவான் என மனக் கணக்குப் போட்டுக் கொண்டுதான் இப்படிக் கேட்டேன். அவன் அலட்சியமாகப் பதில் சொன்னான்:

"கொலை செய்வது பெரிய வேலையா? குண்டுகள் போட்டு மனிசரையே கொண்டு குவிக்கிறாங்கள்!....இது சிம்பிள்!..... பகிடி விடாமல் சொல்லு! என்ன, கள்ளக் கோழி பிடிக்கப் போறியா?"

நித்தி எனது ரோச நரம்பைத் தட்டி விட்டது போலிருந்தது. எனினும் அவன் கேட்டது சரி! கள்ளக் கோழிதான்! எப்படியோ, ஒரு கோழியை பிடிக்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலைக்குள் தள்ளப்பட்டு விட்டதை உணர்ந்தேன்.

"நீ இங்கையே நில்! நான் ஒரு கோழியோட வாறன்!"எனக் கூறி அரிசிச் சுளகை, எடுத்துக் கொண்டு வெளித் திண்ணைக்குப் போனேன்.

கோழிகள் அங்கு இன்னும் என்னை எதிர்பார்த்துக் காத்து நின்றன. அரிசி கொழிக்கும் அலுவலை நிறைவு செய்யாமல் நான் இடை நடுவில் எழுந்து போனதை இவை கவனித் திருக்கக் கூடும். கொஞ்ச அரிசியை எடுத்து வீசினேன். அவை அண்மையில் ஓடி வந்தன.

"உனக்கு எது வேணும்.....? பார்த்துச் சொல்லு! " எனக் குரல் கொடுத்தேன். நித்தி கதவை மெல்லத் திறந்து எட்டிப் பார்த்தான். கோழி கலைந்து விடக் கூடாது என்பதில் அவன் என்னை விட உசாராக இருப்பது தெரிந்தது.

கையை நீட்டிக் காட்டினான். "அந்தக் கறுப்புக் கோழி!"

நான் எதிர்பார்த்த பதில்தான். பிடிக்கிறது தான் பிடிக்கிறோமே அது பெரிசாகவே இருக்கட்டும் என்றுதான் அவனும் நினைத்திருக்கிறான்.

கோழியைப் பிடிக்கப் போகிறேன் என்றதும் ஒரு மனத் தயக்கம் ஏற்பட்டது. இவ்வளவு தூரம் வந்த பிறகு பின்வாங்கக் கூடாது. மனதைத் தைரியப் படுத்தினேன். என்னாலும் சில காரியங்க ளைச் சாதிக்க முடியுமென்று நித்திக்கு காட்ட வேண்டாமா என்ன?

மனோரீதியாக என்னைத் தயார் படுத்திக் கொண்டதும் (கள்ளக்) கோழி பிடிப்பவனுக்குரிய எச்சரிக்கையுணர்வும் தானாகவே வந்து சேர்ந்து கொண்டது. கோழியைப் பிடிக்கும் போது அது அவலக் குரல் எழுப்பாது பார்த்துக் கொள்ள வேண்டுமே.....

இன்னும் கொஞ்ச அரிசியை கையில் எடுத்து வீசினேன். கோழிகள் அண்மையில் அண்மையில் வந்தன. கறுப்புக் கோழிக்கு கையை வளம் பார்த்துப் பார்த்து – சட்டென எட்டி அதன் கழுத்தைப் பற்றினேன்.

"கொக்" என ஒரு விக்கல் சத்தம் மட்டும் கேட்டது. தொண்டைக் குழியில் ஒரே அழுத்தாக அழுத்திப் பிடித்துக் கொண்டேன்.

மற்றக் கோழிகள் கொக்கரித்தவாறு துள்ளிப் பறந்தன. சேவல் ஆட்களைக் கூப்பிடுவது போல கொக்கரித்துக் கொண்டே நின்றது.

"நித்தி!.....நித்தி....!" நான் அவலக் குரல் எழுப்பினேன். கதவைத் திறந்து கோழியை என் கையிலிருந்து அதே ஸ்டைலில் (கழுத்தில் கையை அழுத்தி) வாங்கிக் கொண்டான். உள்ளே வந்து கதவைப் பூட்டினேன்.

சேவல் கொக்கரித்து ஓயும் வரை நான் மூச்சு விடாமல் நின்றேன்.

நித்தியைத் திரும்பிப் பார்த்தால் அவன் சர்வ சாதாரணமாக தன் கால்களுக்குள் கோழியின் கால்களை மிதித்து வைத்துக் கொண்டு அதன் தலையை இழுத்து பிடித்துக் கழுத்தை ஒரு கத்தியினால் அரிந்து கொண்டிருந்தான். இரத்தம் கொப்பளித்துச் சீறியது. அதை அப்படியே போட்டு விட்டு நிமிர்ந்தான்.

வெட்டிய தலையுடன் கோழி இறக்கையை அடித்துத் துடித்தது. பின் அடங்கிப் போனது. நான் அதிர்ந்து பேச்சற்று நின்றேன். கொலை! இது எப்படி நடந்து முடிந்தது?

அரிசியைக் கண்டதும் ஓடி ஓடி வந்த அதன் கால்கள் உயிரற்று விறைத்துப் போய்க் கிடந்தன.

ஏனைய பறவைகளைப் போல உயர உயரப் பறக்க முடியுமானால் அது பறந்தே தப்பிப்

போயிருக்கும். சிறகிருந்தும் பறக்க முடியாத கோழி இனத்தின் மேல் பரிவு ஏற்பட்டது.

பறந்து போக முடியாமையினாற்தான் அவை மனிதனை அண்டி வாழ்கின்றன போலும். தனக்கு இப்படி ஒரு கதி நேரும் என அந்தக் கறுப்புக் கோழி நினைத்திருக்காது. அதை எண்ணி மனம் கசிந்தது. நான் செய்தது சரியில்லை என குற்ற உணர்வு என்னைக் குத்தியது.

நித்தி இந்தக் கவலை எதுவுமின்றி தன் பாட்டுக்கு (பாடிப் பாடி) கருமமே கண்ணாயி ருந்தான். ஒரு பேப்பரை நிலத்தில் விரித்து அதன் மேல் கோழியைக் கிடத்தினான்.

"ஒரு இறகு கூட வெளியில் விடக் கூடாது. யாருக்கும் தெரிய வந்தால் அவ்வளவு தான்.....! கள்ளக் கோழி பிடிச்சவங்களென்று பொலிசிலை பிடிச்சுக் குடுத்தாலும் குடுத்திடுவாங்கள்!"

பொலிஸ்..... அது இது என்று நித்தி என்னைப் பயமுறுத்துகிறானோ என்று தோன்றியது. ஆனாலும் அவனது புத்திசாலித் தனத்தை மெச்சத்தான் வேண்டும். கோழி உரித்த கழிவுகளையும் இறகுகளையும் அப்படியே பேப்பரில் சுற்றி எடுத்து புதைக்கப் போகிறான் போலி ருக்கிறது. "அப்படித்தானே?" என்று கேட்டேன்.

"நல்லாய்த் தான்....! நாய்கள் விட்டு வைக்குமா? மோப்பம் பிடிச்சு கிளறியிடுமே?

பிறகு வேற வில்லங்கமே தேவையில்லை! அயலிலை உள்ளவங்களெல்லாம் இஞ்ச பொல்லோட வந்திடுவாங்கள்."

இப்போது நான் உண்மையிலேயே பயந்தேன். "அப்ப என்ன செய்யலாம்.?" எனது குரலும் அடைத்துக் கொண்டது.

"நீ ஒன்றுக்கும் பயப்பிடாதை.... நான் பார்த்துக் கொள்ளுறன்....எல்லா அலுவலும் முடிஞ்ச பிறகு இதை அப்படியே கொண்டு ஆற்றிலோ குளத்திலோ எறிஞ்சு விடலாம்." நித்தி அபயமளித்தான். இந்தக் கட்டத்தில் எனக்கு அவனை நம்புவதைத் தவிர வேறு வழியில்லை. ஏதோ கொலைக் குற்றத்திலிருந்து என்னைத் தப்பவைக்கப் போகிறவனாகக் கருதிக் கொண்டு அவனிடத்தில் கட்டுப்பட்டுப் போய் நின்றேன்.

"யன்னற் கதவுகளைச் சாத்து!" அவன் கட்டளையிட ஓடிச் சென்று கதவுகளையெல்லாம் பூட்டினேன். பின்னர் வந்து அவனது அடுத்த ஏவலுக்காகக் காத்து நின்றேன். கோழி தன் கைக்கு வந்த நேரமுதலே அவனும் ஒரு புதிய தோரணையுடன் உருக்கொண்டு நின்றான்.

"சட்டியை எடுத்துக் கொண்டு வா!"

கொண்டு வந்தேன்.

கைவேறு கால் வேறாக இறைச்சியை வெட்டி சட்டியில் போட்டான். கோழியின் நெஞ்சைப்

பிழந்தான். வயிற்றுப் பாகத்தை கிழித்ததும் அதனுள்ளிருந்த ஒரு முட்டையைக் கையில் எடுத்தான்.

"இந்தா பார்த்தாயா...முட்டை!....இந்தக் கோழி சாகாமல் இருந்தால் இன்றைக்கு இடவேண்டிய முட்டை...!" இப்படி அவன் சொன்னதும் எனக்கு வலித்தது. கோழியைப் பிடித்துக் கொடுத்துக் கொலை செய்வதற்கு உடந்தையாயிருந்த பாவத்தை நினைத்து வருத்தமேற்பட்டது.

சமையல் செய்து கொண்டிருக்கும் போது நித்தி என்னிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தான்.

"இது கள்ளக் கோழியென்று கோபாலுக்கு சொல்ல வேண்டாம். சரியா?"

செய்த காரியத்துக்காக நித்தி வெட்கப் படுகிறானோ என நினைத்தேன். அல்லது எதற்காக கோபாலனுக்கு சொல்லக் கூடாது என்றான்? கள்ளக் கோழி பிடித்தவனை கேவலமாக நினைக்குமளவிற்கு கோபாலன் உத்தமமான ஆளுமல்ல... கோழியைப் பிடித்தாயிற்று! சாப்பிடவும் போகிறோம். ஆனால் மனது ஏதோ ஒரு விதத்தில் குழப்பமடைந்து போயிருக்கிறது. "அகப்பட்டு விடுவோமா?" என்ற பயமும் ஒரு புறம். இதைக் கோபாலனிடம் சொல்லாமல் விடலாமா? அவனது நிம்மதியையும் குலைக்காமல்

விடுவது சரியா? "ஏன் சொல்லக் கூடாது?" என நித்தியிடமே கேட்டேன்.

"அவன் பயந்தவன்....சாப்பிட மாட்டான்! ஆளை விடக்கூடாது! கோழி பிடிச்சது நாங்கள் தான் என்று தெரிய வந்திட்டால் நாலு சாத்து சாத்தாமல் விடுவாங்களா? அவனையும் சேர்த்துக் கொண்டால் அவனும் சேர்ந்து வாங்குவான் ....யாம் பெற்ற துன்பம் பெறுக இவ் வையகம்!"

"சரி! ஆனால் – சாப்பிட்ட பிறகு அவனுக்குச் சொல்லுவம்!" என எனது திருத்தக் கருத்தையும் தெரிவித்தேன். சாப்பிட்ட பின் ஒரு கோழித் தூக்கம் போடுவான் கோபாலன். "அட்லீஸ்ட்" அதையாவது கெடுத்து விடலாமே என்ற நோக்கம் தான்.

மேசைக்கு சாப்பாடு வந்ததும் கோழியின் உயிரைப் பற்றியதும் கோழிச் சொந்தக் காரர்களைப் பற்றியதுமான பாவ பயங்களெல்லாம் பறந்து போனது. நித்தியின் கைப்பட்ட சமையலின் மகத்துவம் அது! அவன் சமையற் கலையில் வல்லுநன். இந்த விஷயத்திலாவது அவன் வரப்போகிற மனைவியிடம் நல்ல பெயர் எடுத்து விடுவானே என எங்களுக்குப் பொறாமையும் உண்டு.

சாப்பாடு முடிந்ததும், இது யார் வீட்டுக் கோழியாக இருக்கும், இன்னாருடைய கோழியாக

இருந்தால் பாதக சாதகங்கள் எப்படி இருக்கக் கூடும் என ஒரு ஆராய்ச்சியில் ஈடுபட்டோம். அண்டை அயலவர்களின் குணங்களும் "பலம்களும்" அலசி ஆராயப்பட்டன.

பொழுதுபட, பக்கத்து வீட்டில் சத்தம் கேட்டது.

"பா....பா....பா....."

வேலிக்கு இந்தப் பக்கமாக நின்று காது கொடுத்துக் கேட்டோம்.

"எங்க போயிருக்கும்?....வழக்கமாக இருட்டுப்படமுதல்ல மற்ற கோழிகளோட வந்திடுமே....பா!....பா.....! பா.....!"

ரோசலின் அன்டியின் குரல் அது. இரவும் அந்தக் குரல் கேட்டுக் கொண்டிருந்தது. மூலை முடுக்குகள், மரக்கிளைகளெல்லாம் ரோர்ச் அடித்து தேடிக் கொண்டிருப்பது கேட்டது. நித்தி என்னைப் பார்த்துக் கள்ளச் சிரிப்பு சிரித்துக் கொண்டிருந்தான். அவர்கள் கோழியைத் தேடிக் கொண்டிருக்க நாங்கள் அதே கறியுடன் இரவுச் சாப்பாட்டையும் நடத்திக் கொண்டிருந்தோம்.

அடுத்த நாள் காலை வேலைக்கென கிளம்பி வாசல் வரை போன கோபாலன் திரும்பி ஓடி வந்தான்.

"வாராங்க!..... வாராங்க!......கோ..... கோழி....கோழி.....!" அதே ஸ்பீட்டில்

ரொய்லட்டுக்குள் ஓடிச் சென்று கதவைப் பூட்டிக் கொண்டான். இன்னொரு ரொய்லட் இல்லாத காரணத்தால் அறைக்குள் சென்று கதவைப் பூட்டிக் கொள்ளலாம் என நான் ஓடினேன்.

"ஏன்டா பயந்து சாகிறீங்கள்... வாங்கடா...! சமாளிக்கலாம்!" நித்தியின் கத்தல் என்னை தடுத்து நிறுத்தியது. தான் தனித்து விடப்பட்டு விடுவோமோ என்ற பயம் அவனுக்கு!

வாசலுக்கு வந்தோம். ரோசலின் அன்டி வாசலைத் திறந்து உள்ளே வந்தார்.

"ஒரு கோழியைக் காணயில்லை.... இந்தப் பக்கம் வந்திச்சுதா....மகன்?"

"கோழியா? எப்படியிருக்கும்?" சீவியத்திலேயே கோழியைக் காணாதவன் மாதிரி பாவனை செய்து கொண்டிருந்தான் நித்தி. ரோசலின் அன்டியைக் குழப்புகிற உத்திதான் அது. "என்ன நிறம்?" என்றான். ஆனால் அன்டியின் சோகமான தோற்றம் என்னை நெகிழ்த்தியது. அவரது தரப்பு சாட்சியாக மாறி விடுவதென அக்கணமே தீர்மானித்து, "கறுப்பு!" என்றேன்.

"உனக்கு எப்படித் தெரியும்? பேசாமலிரு!" என எனக்கு ஒரு குட்டுப் போட்டான் நித்தி. அதன் வலிமை எனது வாயை மூடியது.

"அந்தத் தம்பி சொல்றது சரி....கறுப்புக் கோழிதான்..!" அன்டி இன்னும் அப்பாவித் தனமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

“அதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க எங்களுக்கு எங்க நேரமிருக்கு? வேலைக்குப் போய் வரவே பொழுது பட்டிடும்! நீங்கள் போங்கோ கோழி திரும்பி வந்திடும் போங்கோ!” நித்தி சொல்வதைக் கேட்டும் சமாதானமின்றி ரோசலின் அன்டி போகாமலே நின்றார்.

“முட்டையிட்டுத் தந்து கொண்டிருந்த கோழி மகன்... நேற்று முட்டையிடக்கூட வரயில்லை!” அன்டி அழுதே விடுவார் போலிருந்தது.

மந்திரவித்தை காண்பிக்கிறவன் போல நித்தி எடுத்துக் காட்டிய முட்டை எனக்கு நினைவில் வந்தது. (பார்த்தாயா – கோழி சாகாமல் இருந்தால் இன்றைக்கு இடவேண்டிய முட்டை!)

ரோசலின் அன்டியின் நிலைமையைப் பார்க்க பாவமாக இருந்தது. கோழி வளர்ப்பதும் முட்டை எடுத்து விற்பதும் அவர்களுடைய ஜீவனோ பாயத்தை சரிக்கட்டுகிற முயற்சியாயிருக்கலாம். அவருடைய கணவர் சரியான வருமானமற்றவர். சில்லறைக் கடையொன்றில் பணியாளராக உள்ளார். அவர்களது வயிற்றிலே கையை வைத்து விட்டோமே எனக் கவலையாயிருந்தது.

“இந்தப்பக்கம் தான் கோழியள் அடிக்கடி ஓடிவரும்....தேடிப்பார்த்து சொல்லுங்க ... மகன்....உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும்.”

அன்டி நித்தியைப் பார்த்து கெஞ்சும் தொனியில் கேட்டார். அவனோ தன் தொனியைக் கடுமையாக்கினான்.

"எங்களுக்கு வேற வேலையில்லையா ...? உங்கட கோழியைத் தேடிக் கொண்டிருக்க..? அதைப் பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது ....கரைச்சல் தராமல் போங்கோ!"

அந்தச் சத்தம் வேலை செய்தது. அன்டி திரும்பி விட்டார். அதே கடுமையுடன் என்னைப் பார்த்தான் நித்தி.

"இப்படியான விஷயங்களிலை இரக்கப்படக் கூடாது! ஏதாவது உளறிக் கொட்டினால்.... பிறகு எல்லாருமாய்ச் சேர்ந்து மாட்டுப்பட வேண்டியதுதான்." ஒவ்வொருத்தருக்கும் என்ன மாதிரி போடு போடவேண்டும் என அவனுக்குத் தெரிந்திருக்கிறது. நான் அடங்கிப் போனேன்.

அடுத்த நாள் நானும் நித்தியும் கடைத் தெருவுக்கு போய் விட்டு வந்து கொண்டிருக்கும் போது ரோசலின் அன்டி தன் வீட்டிலிருந்து புயலெனக் கிளம்பி வந்து கொண்டிருந்தார். நான் சற்றுப் பயந்து வந்த வழியே திரும்பி விடலாமோ என நினைத்தேன். தூரத்திலிருந்தே எங்களை இனங் கண்டு கொண்டவர் போல வலு வீச்சாக வந்தார். "கோழி ஓரிடத்தில நிக்கிறதாய் தகவல் கிடைச்சிருக்கு மகன். ஆண்டவன் என்னைக்

கைவிடவில்லை!" நித்தியைப் பார்த்தே இந்தச் சங்கதியைச் சொன்னாலும் "அப்படியிருக்க முடியாதே" என நான் தடுமாறினேன். எனது வாய் உளற முற்பட்ட தருணத்தில் நித்தி ஒரு உறுமல் போட்டு என்னைத் தடுத்தாட் கொண்டான். எனினும் ஆண்டவனின் செய்கையை நாங்கள் மெச்சினோம். அவருக்கு இப்படி ஏதாவது அற்புதங்கள் செய்யும் ஆற்றல் இருந்தால் மிகவும் நல்லது தான். எங்களைப் போன்ற (அப்) பாவிகள் வீணாகப் பழிவாங்கப் படாமல் தப்பித்த விடலாம்!

வீட்டுக்கு வந்து சேர்ந்தும் இருப்புக் கொள்ளவில்லை; "வாடா போய்ப் பார்ப்பம்!" என்றான் நித்தி. எனக்கு மேற்கொண்டு என்ன நடக்கிறது என அறியும் ஆவல். ரோசலின் அன்டி போன திக்கில் நடந்தோம். நாலாவது வீட்டின் முன் சிலர் கூடியிருந்தனர். அன்டியின் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

"மூணு நாளாய் கோழியைக் காணயில்ல, நான் தேடித் திரியிறன்....அதைப் பிடிச்சு அடைத்து வைச்சுக் கொண்டு....கேட்டால், கோழியை காட்டிறாங்களும் இல்லை..... சண்டைக்கு வாற ாங்களே!"

"சண்டைக்கு வாறது நீங்களா? நானா? எங்கட கோழிதான் கூட்டில இருக்கு. சும்மா சத்தம் போட்டு ஊரைக் கூப்பிடாமல் போங்கோ!" அந்த வீட்டுக்காரரின் குரல் அடைத்துப் போனமாதிரி வெளிவந்தது.

ஆனால் அன்டி அதைக் கேட்கும் நிலைமையில் இல்லை. சன்னதம் தலைக் கேறுவது போல கத்தினார். சிலர் கட்டுப் படுத்த முயன்றார்கள். முடியவில்லை. நாலாவது வீட்டுக்காரருக்கும் ஐந்தாவது வீட்டுக்காரருக்கும் உறவு நிலை சுமுகமில்லை. அத • ாற்தான் இப்படியொரு தகவலைக் கொடுத்து விட்டு தன் வீட்டுக்குள் பதுங்கி விட்டார் அவர். அது புரியாமல் அன்டி தன் வாக்கு வாதத்தின் உச்சக் கட்டத்தில் "அந்த மனுசன் சொல்லித்தான் எனக்குத் தெரியும்.... நான் இஞ்ச ஆதாரமில்லாமல் வரயில்ல" என பக்கத்து வீட்டைக் காட்டி சத்தம் போட பிரச்சினை வேறு வடிவம் எடுக்கத் தொடங்கியது. இடத்தை விட்டு நாங்கள் மெல்ல நழுவினோம். எப்போதும் ஒரு சாதுவைப் போல தோன்றும் அன்டியின் ருத்ர தோற்றம் எங்களுக்கு ஆச்சரியமாயுமிருந்தது. எப்படியாவது கோழியைக் கண்டு பிடித்து விட வேண்டுமென்ற ஆவேசமாயுமிருக்கலாம்.

நாட்கள் ஒன்றிரண்டெனக் கழிந்து கொண்டிருந்தன. ரோசலின் அன்டி தன் முயற்சியைக் கைவிடவில்லை. "பா!...பா! பா....!" என அடிக்கடி அந்தப் பக்கத்தில் அழைப்பொலி கேட்கும். அயலிலுள்ள வீடுகளிளெல்லாம் அலைந்து திரிந்தார். அவரது உடலிலும் மெலிவும் தளர்வும் ஏற்பட்டிருப்பது போலிருந்தது. முகத்தில் வாட்டம் தெரிந்தது. கண்டும் காணாதவர் போலப் போகிற ஒரு வித

மன அழுத்த நிலைக்கு ஆட்பட்டவர்போலத் தோன்றினார். அல்லது.... எங்கள் மேலே சந்தேகமோ?

அரிசி கொழிப்பதற்காக வெளித் திண்ணைக்குப் போவதை நான் சில நாட்கள் தவிர்த்திருந்தேன். மற்றக் கோழிகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் குற்ற மனப்பான்மை உறுத்தியது. நாளாக ஆக மனம் சற்று மாறிக் கொண்டு வந்தது. மற்றக் கோழிகளைப் பார்த்தால் மனம் சற்று ஆறும் போலிருந்தது. அந்தக் கோழிகளும் இந்தப் பக்கம் வருவதில்லை என்பதை சில நாட்களுக்குள்ளே புரிந்து கொண்டேன்.

இவை தாமாகவே பயத்தில் வராமல் விட்டு விட்டனவா? அல்லது ரோசலின் அன்டியே எங்கள் மேல் சந்தேகம் கொண்டு அவற்றை அடைத்து வைத்திருக்கக்கூடுமோ என்பது புரியாமல் இருந்தது. காரணம் எதுவாயிருப்பினும் நாங்கள் ஏதோ ஒரு விதத்தில் சிறுமைப் படுத்தப் பட்டு விட்டது போல மனம் சங்கடப் பட்டது. கோழிகள் கூட்டில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனவா எனப் பார்க்க வேண்டும் என ஓர் உந்துதல் ஏற்பட்டது.

ஒரு மரக்கட்டையை வைத்து அதன் மேல் ஏறி வேலிக்கு மேலாக எட்டிப் பார்த்தேன். அந்தப் பக்கம் கிணற்றடியில் ரோசலின் அன்டியின் மகள்

தென்பட்டாள். நான் நோக்கிய தருணத்தில் அவளும் நோக்கி அந்தக் கணத்திலேயே தண்ணீர் அள்ளிய வாளியையும் விட்டு ஓட முற்பட்டாள். இது கோழி பிடித்ததை விடப் பெரிய வில்லங்கத்துக்குள் போய் முடியப் போகிறது எனத் தடுமாறி இந்தப் பக்கமாக நான் விழுந்தேன். சத்தம் கேட்டு ஓடிவந்த நித்தி கட்டைக்கு மேலே ஏறி அந்தப் பக்கம் பார்த்து விட்டு "கள்ளா எத்தனை நாளாக இந்த விளையாட்டு?" எனக் கேட்டான்.

இப்படி ஒரு சங்கதி இருப்பதை தங்களுக்கு ஏன் இவ்வளவு நாட்களும் சொல்லவில்லை என நித்தியும் கோபாலும் தினம் என்னைக் குடையத் தொடங்கினார்கள். நானும் அவர்களிடையே கதாநாயக அந்தஸ்த்து பெறும் நோக்கில் கதையளந்து கொண்டிருந்தேன். இதனால் அவர்களுக்கு என் மேல் சற்று விரோத உணர்வு கூட ஏற்பட்டது.

ஆனாலும் அன்றாட சமையல் பாதிக்கப்படால் நடந்து கொண்டிருந்தது. நாட்களும் நகர்ந்து கொண்டிருந்தன. நாங்கள் அந்தக் கோழியை மறந்தோம். (ஆனால் வேலியை மறக்கவில்லை)

சம்பள நாள் வந்தது. சம்பள நாளென்றால் நித்தி ஒரு பை சுமையோடு வருவான். பையைக் கொண்டு வந்து அவன் வைத்ததும் "கொக்!" என ஒரு சத்தம் கோழி கத்துவது போலக் கேட்டது. எனக்குப் பிரமையோ? அவலமாக இறந்த மனிதர்

களின் ஆவி அலையும் என்கிறார்களே.......அது போலக் கோழியின் ஆவியும் அலையுமோ?

பையைத் திறந்து பார்த்தேன். அது போல அல்லது அது தானோ?... ஒரு கறுப்புக் கோழி! ஒரு துள்ளுத் துள்ளிப் பின்வாங்கினேன். பின்னர் சுதாரித்துக் கொண்டேன். அறையில் உடையை மாற்றிக் கொண்டு நித்தி வெளியே வந்தான். கறிக்கு என்றால் வழமையாக உரித்து ரெடி பண்ணப்பட்ட புரொய்லர் கோழியை வாங்கி வருவான். இது என்ன புதிதாக உயிருடன்? ருசி கண்ட பூனை விடுமா?

"என்ன? கோழி, கறிக்கா?" என்றேன்.

"இல்ல அது ரோசலின் அன்டிக்கு குடுக்கிற துக்காக!....அவ.....அந்தக் கோழியைக் கூப்பிட்டுக் கூப்பிட்டுத் தேடுறதைப் பார்க்க பாவமாயிருக்கும். அதுதான் வேலைக்குப் போகிற இடங்கிளில் சொல்லி வைச்சு கிட்டடத் தட்ட அது போலவே ஒரு கோழி வாங்கியந்திருக்கிறன்."

இது போல சில சந்தர்ப்பங்களில் எனக்கு நித்தியை அளக்க முடியாமல் இருந்திருக்கிறது என்பது உண்மைதான். உற்சாகம் பொங்க எழுந்தேன்.

"சரி வா! கொண்டு போய்க் கொடுக்கலாம்.!" என நித்தியை அவசரப்படுத்தினேன்.

"என்ன இவ்வளவு அவசரம்? ஆரைப் பார்க்க?" எனச் சீண்டினான்.

கோழியைத் தூக்கிக் கொண்டு போனோம். வாசலில் நின்று கூப்பிட்டு, கதவைத் திறந்து உள்ளே போனோம்.

கையில் கோழியைக் கண்டதும் ரோசலின் அன்டி தீனைக் கண்டு ஓடி வரும் கோழியைப் போல ஓடி வந்தார்.

"என்ன, கோழி.... கிடைச்சுட்டுதா?"

"இல்ல....அன்டி!.... இது வேற கோழி! நீங்க எப்பவும் அதைத் தேடுவீங்க தானே! எங்களுக்கு கவலையாயிருக்கும்....! அதுதான் அதே மாதிரி ஒரு கோழியைத் தேடி வாங்கியிருக்கிறம்!" நித்தியை முந்திக் கொண்டு நான் பதில் சொல்லி விட்டு பெருமிதம் ததும்பும் ஒரு தோற்றம் கொடுத்தேன்.

ரோசலின் அன்டியின் முகத்தில் மலர்ந்திருந்த வெளிச்சம் பக்கென அணைந்தது.

"அது ..... குஞ்சாயிருந்தே....நான் வளர்த்தெடுத்த கோழி ..... என்ட பிள்ளையைப் போல.... காணயில்ல என்டதும்....மனசு தாங்காமல்தான் தேடித்திரிஞ்சன். எப்படியாவது கிடைச்சிடாதா என்ற கவலைதான்..... நீங்க

நல்ல பிள்ளையள்....அதனால இப்படி செய்யறீங்க!..... வேணாம் கொண்டு போங்க."

போக முடியவில்லை. கவலை அந்தக் கோழியை நினைத்தா அல்லது அன்டிக்காகவா என்று கூடப் புரியாமல் நெஞ்சில் ஏதோ ஒரு உறுத்தல்.

(தினகரன் 2000)

# இட்ட அடி நோக...

யூனிவர்சிட்டிக்குக் காலடி எடுத்து வைத்த முதல் நாளே அப்படியொரு சோதனை எனக்குக் காத்திருந்தது. இயல்பாக நடக்க முடியவில்லை. ஒவ்வொரு அடியையும் மிகச் சிரமத்துடன் எடுத்து வைத்தேன். வலி...சப்பாத்து ஏற்கனவே என் பாதங்களை அமுக்கிப் பதம் பார்த்திருந்தது.

அப்பாவிற்கு அந்தச் சிரமங்கள் புரிய ஞாயமில்லை. ஸ்கூலில் படித்த நாட்களைப் போல ரப்பர் செருப்புடன் சமாளிக்க முடியாது, சப்பாத்து வாங்க வேண்டுமெனச் சொன்ன போது அவருக்கு அது முக்கியமாகப் படவில்லை.

"தம்பி....குடும்பம் இருக்கிற நிலைமை உனக்குத் தெரியும்....அந்த ஆசையெல்லாம் வேண்டாம்"

அப்பாவிற்கு அப்படியான பதிலைத்தான் தர முடியும். படிப்பை மேற் தொடர்வதற்கும் சப்பாத்துக்கும் என்ன சம்பந்தம் எனக் கருதினார். அவரது கஷ்ட நிலைமை காரணமாக அந்த ரீதியில் தான் அவரால் சிந்திக்க முடியும். அப்பா கார் சாரதியாக தொழில் பார்த்தார். ஐந்து பிள்ளைகள்

கொண்ட குடும்ப பாரத்தைக் கொண்டிழுக்க வேண்டிய பொறுப்பு அவருக்கு. வீட்டிலென்றால் அன்றாடச் சாப்பாட்டுக்கே திண்டாட்டம். நிலைமையறிந்து பசியில்லாதவன் போலப் பாசாங்கு பண்ணியிருக்கிறேன். சாப்பாட்டை அரைகுறையில் முடித்துக் கொண்டு எழுந்து விடுவேன். அல்லது அம்மா பட்டினி கிடக்க நேரிடும்.

பேசாமல் படிப்புக்கு ஒரு முழுக்கு போட்டுவிட்டு ஏதாவது தொழில் செய்தால் என்ன என்று யோசித்தேன். அதனால் அப்பாவின் சுமைகளையும் குறைக்கக் கூடியதாய் இருக்கும். அதை அப்பாவிடம் சொன்னதும் பதறிப் போனார்.

"நீ..... படிக்கக் கூடிய பிள்ளை..... கஷ்டம் என்னோட இருக்கட்டும்..... போக முதல் எப்படியும் சப்பாத்து வாங்கி விடலாம்...... கவவலைப்படாதை.....!"

அப்பா அப்படிச் சொன்னதும் சந்தோஷம் உச்சிக்கு ஏறியது. சப்பாத்து அணிந்து நடக்கப் போகும் கணத்தை எண்ணிப் பார்த்தேன். சில கடைகளுக்குச் சென்று சப்பாத்துக்களின் மொடல்களைப் பார்த்தேன். என்ன ஸ்டைலில் வாங்கலாம் எனக் கற்பனை செய்தேன். அப்பா சப்பாத்து வாங்கக் கடைக்குப் போகும் போது சேர்ந்து போக வேண்டும், அல்லது சீப்பராக இருக்கிறதென்ற காரணத்துக்காக அவர் தரமில்லாதவற்றை வாங்கி விடக் கூடும்.

அப்பா பகலெல்லாம் அலைச்சல் பட்டு வருவார். இரவில் வெகு நேரம் வெளித் திண்ணையில் உறங்காமல் இருப்பதைப் பார்த்தால் பணம் கிடைக்கவில்லை என்று தெரியும். பதிவுக் கட்டணப் பணம், லைப்பிரரி பீஸ், என இன்னோரன்ன தொகைகளைக் குறிப்பிட்டு யூனிவசிட்டி நிர்வாகத்திடமிருந்து கடிதம் வந்திருந்தது. அந்த விசித்திரத்தில் அப்பா சப்பாத்து வாங்கித் தருவதாகவும் உறுதியளித்திருந்தார். அது ஆகக் கூடிய காரியமல்ல என நம்பிக்கையிழக்கத் தொடங்கியபோது, புறப்படுவதற்கு இரண்டே நாட்களிருக்கையில் அப்பா கையில் ஒரு பார்சலுடன் வந்தார். "சப்பாத்து!"

மனசு துள்ளியது. ஆனால்....கடைகளில் பார்த்தபோது சப்பாத்துக்கள் நீள்சதுரப் பெட்டிகளில் "பக்ட்" பண்ணப்பட்டிருந்தனவே, அப்பாவின் கையிலிருப்பது ஒரு சோற்றுப் பார்சலைப் போல் தென்பட்டது. அப்பா மிக நிதானமாக அந்தப் பார்சலைப் பிரித்துப் போட்டார்.

நன்றாக உலர்த்தப்பட்ட கருவாடு போல சப்பாத்துக்கள் தம் உயிரை இழந்திருந்தன. எனினும் பொலிஷ் பண்ணப்பட்டு அவற்றின் முகத்தை அழகூட்டும் முயற்சியும் நடந்திருப்பது தெரிந்தது.

அப்பாவின் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தேன்... "பொன்னையா மாமாதான் தந்தவர். போடு! அளவு சரியாயிருக்கோ பார்க்கலாம்."

பொன்னையா மாமா கச்சேரியில் கிளார்க்காக வேலை பார்த்து ஓய்வு பெற்றவர். அந்தக் காலத்தில் தான் போட்டடித்த சப்பாத்துக்களைக் கொடுத்தனுப்பியிருந்தார். அவற்றை எடுத்துக் கொள்ளாமல் வன்மம் கொண்டவனைப் போல் நின்றேன்.

"என்ன தம்பி செய்யிறது?.....நானும் எவ்வளவு இடங்களில அலைஞ்சு பார்த்தன். கேட்கக் கூடாத இடங்களிலையெல்லாம் வாய் விட்டுக் கேட்டுப் பார்த்தன். கிடைச்ச காசு ஒன்றுக்கும் போதாது. பொன்னையரிட்டையும் காசு தான் கேட்டுப் போனன். அவர் தான் என்ர நிலைமையைப் பார்த்திட்டு இந்தச் சப்பாத்துக் களைத் தூக்கித் தந்தார்."

அந்தக் கணத்தில் அப்பாவின் தொண்டை அடைத்துக் கொண்டது. தலையைக் கை விரல்களால் கோதி விட்டார். கண்களை அழுத்தித் துடைத்தார். கண்ணீர்த் துளிகள் என் காலடியில் விழுந்தன.

"அப்..ப்...பா!" ஓசை வெளிப்படாத கூவல். உயிரணுக்களில் ஓர் அதிர்வு. மறு கதை பேசாமல் சப்பாத்துக்களை எடுத்தேன். அப்பா என் காலடியில் அமர்ந்து ஒருவாறு அதை அணிந்து கொள்ள உதவி புரிந்தார்.

"சரி, நட பார்க்கலாம்...!"

இயல்பாக நடக்க முடியவில்லை. நோவைத் தாங்க முடியாது, பாதங்களை அவதானமாக மென்மையாகப் பதிக்க வேண்டியிருந்தது. அதனால் நடை சற்று நொண்டுவது போன்ற அலாதியான தோற்றத்தையளித்தது. அந்த வித்தியாசமே ராக்கிங் செய்யும் சீனியர்களிடம் என்னைக் காட்டிக் கொடுத்தது. அவர்களால் விசேஷ கவனிப்புக் குள்ளானேன். கேலிகள்... சீண்டுதல்....சிரிப்புக்கள், ....ராமனின் பாதுகையைப் போல இதுவும் ஏதாவது சரித்திரப் பிரசித்தி பெற்ற சமாச்சாரமா எனக் கிண்டலடித்தார்கள்.

"இப்படிப் பட்டிக்காட்டான் போல வந்து இந்தக் கம்பஸின்ரை மானத்தையே வாங்காமல் முதல்ல புது ஷூஸ் போட்டு டீசன்ராய் வரப் பழகு.... பிறகு தான் படிப்பு...!" என அறிவுரை சொன்னார்கள். "அட அப்படியொரு சங்கதியும் இருக்கா?.....அதற்காகவாவது புது சப்பாத்து வாங்கத்தான் வேண்டும். ஆனால் எப்படி......? அதற்கெல்லாம் நான் வசதியற்றவன் என அவர்களிடம் சொல்லிவிடலாமா? சொன்னால் ஏற்கப்படுமா?.... அல்லது புது தொல்லைகளுக்கு ஆளாக நேரிடுமா?"

அடுத்த நாளும் அதே சப்பாத்துக்களு டனேயே போக வேண்டியிருந்தது. அமுக்கப் பட்டிருந்த விரல்கள் பச்சை இறைச்சியாக வலித்தன. குதிக் கால்கள் சிதைந்து புண்ணாகி

யிருந்தன. கால்களை ஒருவாறு இழுத்திழுத்து நடந்தேன். போதாத நேரம் போலும்.... கல்லொன்று தடுக்க, சப்பாத்து கிழிந்து ஆவென வாய் பிழந்து கொண்டது.

அதைத் தைத்துச் செப்பனிடும் வரை அஜஸ்ட் பண்ணி நடக்க வேண்டுமே! அது வரை அவர்கள் கண்களில் படாமல் தப்பிக்க வேண்டுமே! ஆனால் தப்பிக்க முடியவில்லை.

"உனக்கு சொன்னால் கேட்க மாட்டியா? திமிர்தானே?" - உறுமினார்கள். "இதற்கு சரியான தண்டனை தர வேண்டும்."

"ஷூவைக் கழட்டு!"

"தலையில வை!"

"இது காலுக்கு உதவாது..தலையில வைச்சுக் கொண்டு நட, எல்லாரும் பார்க்கட்டும்...!"

இன்னும் சில புது மாணவர்களை என்னுடன் சேர்ந்து அணியாக நடக்கச் சொன்னார்கள். நடக்கும் போது பாடச் சொன்னார்கள்.

"பாதுகையே துணையாகும்...எந்நாளும் இந்தப் பாதுகையே துணையாகும்!"

கூட அணிவகுத்து வரும் மாணவர்களுக்கு அது பரவாயில்லைப் போலும். கூட்டாக ராக்கிங் என்ற பெயரில் ஒரு விளையாட்டு நடக்கிறது.

அனுபவித்துப் பாடுகிறார்கள். ஆனால் எனக்கு சத்தம் வாயை விட்டு வெளிவர மறுத்தது. இரு பக்கமும் வேடிக்கை பார்க்கும் விழிகள். கேலிச் சிரிப்புக்கள். தலையைக் குனிந்து கொள்ளவும் முடியவில்லை. குனிந்தால் சப்பாத்து விழுந்து விடும். விழுந்தால் ராக்கிங் அதிகரிக்கும். யாரையும் கவனிக்காதவன் போல நடந்து கொண்டிருந்தேன். சற்றும் எதிர்பாராத விதமாக நித்யா எதிர்ப்பட்டாள். நித்யாவை கவனிக்காமல் போவதென்பது என் சக்திக்கு அப்பாற்பட்ட விஷயம்.

அன்றைய இரவு உறக்கம் கெட்டது.

நித்யாவின் சிரிப்பு நினைவில் வந்து என்னவோ செய்தது. நித்யா புது வருட மாணவி. மாணவர்களால் அறைகளிலும் பிற இடங்களிலும் நினைத்து நினைத்துப் பேசப்படும் அழகி. அவளுக்கு முன்னே மானப்பங்கப்பட்டுப் போனது போலிருந்தது. புரண்டு புரண்டு படுத்தேன். அதைக் கவனித்த அறை நண்பன் சொன்னான்;

“அந்த ஷூஸ் சரியில்லைத்தான்....புதுசா வாங்கலாமே...?”

சப்பாத்து புதிதாக வாங்கத்தான் வேண்டும். இப்படிக் கேவலப்பட்டதே போதும். அப்பாவுக்கு கடிதம் எழுதலாமா? (எப்படியாவது பணம் அனுப்புங்கள் அப்பா) அதற்கு அவர் என்ன செய்வார்? பயணப்பட்டு வந்த போதுகூட

தேவையான செலவுகள், பீஸ்களுக்கு மேலாக நூறு ரூபா மட்டும் தந்திருந்தார்.

"தம்பி கண்டபடி செலவு செய்யக் கூடாது. ஆசாபாசங்களில மனசைப் பறிகொடுக்கக் கூடாது. நீ....படிச்சு ஆளாகித் தான் எங்கட குடும்பம் தலையெடுக்க வேணும்."

அப்பாவிற்கு வேறு வழியில்லை. பணக் கஷ்டத்தை இப்படி எதாவது புத்திமதிகள் கூறிச் சரிக்கட்ட முயன்றார். இந்த நிலையில் எப்படியாவது பணம் அனுப்பி வையுங்கள் என எழுதினால் அன்றாடம் வீட்டுக்கு ஆகும் செலவில் தான் வெட்டு விழுமோ தெரியாது. வயிற்றுக்கு வஞ்சகம் செய்து அரைவயிறு கால் வயிற்றுடன் எழுந்து விடுகிற நாட்கள் நினைவுக்கு வந்தன. இப்போது தம்பி, தங்கைகளுக்கும் அந்த கதியாக இருக்கலாம். வேண்டாம்....இப்படியே ஒருவாறு சமாளித்துக் கொள்ள வேண்டியதுதான்.

இரண்டு வாரங்கள் கடந்ததும் ராக்கிங் தொல்லை ஒரு முடிவுக்கு வந்தது. அதன் பின் எனது சப்பாத்துக்களைப் பற்றி யாரும் கவலைப்பட்டது போலத் தெரியவில்லை. பாதங்களில் அமுக்கப்பட்ட பகுதியும் மரத்துப் போனதால் வலியுணர்வு கூடத் தெரியவில்லை. ஆக தற்காலிகமாக எனினும் ஒரு பெரிய பிரச்சினை தீர்ந்த ஆறுதல் எனக்கு.

ஆனால், அந்த ஆறுதல் நீடிக்கவில்லை. நித்யா ஒரு நாள் என்னைத் தேடி வந்தாள். தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டாள். எனது கல்லூரி நண்பன் சத்தியகுமாரின் வீட்டுக்கு அண்மையில் நித்யாவின் வீடாம். யூனிவர்சிட்டி அட்மிசன் பற்றி நித்தியாவிற்குக் கடைசி நேரத்திலேயே அறிவித்தல் கிடைத்தது. அதற்கிடையில் சத்திய குமார் என்னை சந்திக்காத தால் நித்தியாவைப் பற்றித் தெரிவிக்க வில்லையாம். நித்யாவிடம் சொல்லி அனுப்பியிருந் தான்.

"உங்கள மீட் பண்ணி கதைக்கச் சொன்னார்.... நீங்கள் என்ன உதவியும் செய்யக் கூடிய ஆள் என்று உங்கள் ஃபிரன்ட் சொன்னார். அப்படியா?" எனக் கண்களை அபிநயித்துக் கேட்டாள்.

அந்தக் கண்களின் அசைவே என் மன ஆறுதலைப் பறித்துக் கொண்டு போவது போலிருந்தது. அவளுக்கு முன்னால் நிற்கும் போது கால்களில் மாட்டியிருந்த சப்பாத்துக்களின் நினைவு வந்து கூச்சமேற்பட்டது. அவளோடு சரியாகப் பேச முடியாமலும் இருந்தது.

இரவு படுக்கையில் கற்பனைகள் விரிந்தன. வீட்டுச் சூழலையும் உறவுகளையும் முதன் முதல் பிரிந்து வந்த தூரத்துத் தனிமையில் ஒரு துணை நித்யாவிற்குத் தேவைப்படுகிறதென்பதை அவளது பேச்சிலிருந்து உணரக் கூடியதாக இருந்தது.

அதையே சாட்டாக வைத்துக் கொண்டு நித்யாவின் நட்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவளது மனத்தில் இடம் பிடிக்க வேண்டும். சப்பாத்துக்களை தலையில் வைத்துக் கொண்டு அணியாக வலம் போன அந்த கொறிடோரில் நித்யாவுடன் கைகோர்த்துக் கொண்டு நடக்க வேண்டும். ராக்கிங் செய்த சீனியர்கள் எல்லாம் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகட்டும்.

படுக்கையில் புரண்டவாறு திரும்பிய போது ஓரத்தில் கிடந்த சப்பாத்துக்கள் என் பார்வையில் பட்டன. அந்தக் கணத்தில் கற்பனைக் குதிரை ஒரு "சடின் பிறேக்" போட்டது. சட சடவென எல்லாம் உடைந்து கொட்டுண்டது போல பிரமை ஏற்பட்டது. நித்யாவுடன் பழக வேண்டுமென இலகுவாகத் திட்டம் போட்டாயிற்று. ஆனால் அந்தச் சப்பாத்துக்களுடனா?

புதிதாக சப்பாத்து வாங்க வேண்டுமென்று தான் நினைத்திருந்தேன். ஆனால் அதற்கு வழி ஏதும் இல்லை. ஒருவாறு சமாளித்துக் கொள்ள வேண்டியதுதான்.

நித்யா தங்கியிருக்கும் வீட்டுக்கு மாலை வேளைகளில் சென்று பொழுதைப் போக்கும் அளவுக்கு நட்பு வளர்ந்தது. நித்யா ஒவ்வொரு தேவைக்கும் என்னை எதிர்பார்த்தாள். இங்கே போக, அங்கே போக, கடைத்தெருவுக்குப் போக என எந்த அலுவல்களுக்கும் எனது துணையை

நாடினாள். இது எனக்கு உள்ளூர சந்தோஷத்தை அளித்தது. நண்பர்களிடத்தில் எனக்கு ஒருவித மதிப்பும் பெருகியது. நித்யா காரணமாக நான் ஒரு ஹீரோவாக ஆகிவிட்டது போலுணர்ந்தேன்.

நித்யாவின் நினைவுகள் நாளும் பொழுதும் ஆக்கிரமிக்கத் தொடங்கின. லெச்சர் ஹோலில் பாடத்தில் மனசு செல்ல மறுக்கும். நித்யாவின் இருக்கையை நாடிக் கண்கள் போகும். படுக்கையில்...கண்கள் மூட மறுக்கும். கண்களை மூடினாலும் நித்யாவின் முகம் தெரியும். அவள் எனக்கே சொந்தமாக மாட்டாளா எனக் கனவுகள் கண்டேன். அதை அவளிடம் தெரிவிக்கலாமா?

வெள்ளிக் கிழமைகளில் நித்யாவுடன் கோவிலுக்குப் போவதுண்டு. அப்போதுதான் அவளுடன் ஆறுதலாகப் பேச முடியும் எனத் திட்டமிட்டேன். அந்த எண்ணத்துடன் கோவிலுக்குப் புறப்பட்ட போது மனம் ஒருவித அச்சத்தால் அடித்துக் கொண்டது. நித்யா ஏதாவது சொன்னால் எனக்குப் பேச்சுத் தடுமாறியது. எப்படிப் பேச்சை ஆரம்பிக்கலாம் என எண்ணிப் பார்த்தேன். கோவிலைச் சுற்றி வந்த போது...."நித்யா இது போலவே வாழ்க்கை முழுதும் ஒன்றாய் இருக்கலாமா?" என மனதில் வசனம் பேசினேன். அப்படி நிஜமாகவே பேசப் போவதை நினைத்தால் நடுங்கும். உடல் சூடேறி காய்ச்சல் அடிப்பது போன்ற உணர்வு. நித்யாவிடம் என் காதலை தெரிவித்துவிட

வேண்டுமென்ற ஆசை மட்டும் நர்த்தனம் புரிந்து கொண்டிருந்தது.

கோவிலுக்கு வெளியே வந்து அமர்ந்தபோது நித்யாவின் கல கலப் பேச்சுக்கள். அவளது முகத்தைத் திரும்பத் திரும்பப் பார்த்தேன். "சொல்லலாமா?.....சொல்லலாமா.......?" சொல்லும் துணிவு வரவில்லை.

புறப்பட ஆயத்தமாகி வந்து சப்பாத்துக்களை மாட்டினேன். நித்யா சற்று நேரம் அதையே பார்த்துக் கொண்டிருந்தாள். பின்னர் என்னைப் பார்த்துச் சிரித்தாள்.

"ஏன் ஜெயந்தன் இதைக் கைவிட விருப்பமில்லையா?....புது ஷூஸ் வாங்கலாமே.....?"

மூச்சு ஒரு முறை நின்றது. எனக்குப் பேச எண்ணியிருந்த விஷயங்களெல்லாம் மறந்து போயின.

"ராகிங்கில....உங்கட தலையில ஷூக்களை வச்சு நடக்க சொன்னாங்கதானே....அதுதான் நினைவு வந்து சிரிச்சன்....சொறி ஜெயந்தன்.....புது ஷூஸ் வாங்குங்கோ...!"

எனக்கு மறுமொழி பேச முடியவில்லை. அந்த சப்பாத்துக்களைக் கைவிடுவதும் புதிது வாங்குவதும் முடியாத விஷயமாயிருக்கும் விஷயத்தை – எனது நிலைமையை – குடும்ப

நிலவரத்தை நித்யாவிடம் சொல்லி விடலாம் எனத் தீர்மானித்தேன்.

நான் சொல்வதைக் கேட்டு நித்யா அனுதாபப் படுவது போலிருந்தது. நித்யாவின் இரக்கத்தைச் சம்பாதிப்பதுகூட எனக்கு ஒரு வித இதமாகவே இருந்தது.

ஆனால், அதற்குப் பிறகு எந்தச் சமாதானமும் வேண்டாம் என எண்ணிக் கொண்டேன். புதிய சப்பாத்து வாங்கியே ஆக வேண்டும். பணம் அனுப்பும்படி அப்பாவிற்குக் கடிதம் எழுதினேன். அப்பா மேல் கோபம் கூட ஏற்பட்டது. சப்பாத்து என் வாழ்க்கைப் பிரச்சினையாகக் கூட ஆகிவிட்டது போலிருந்தது.

கனவுகளில் வித விதமான சப்பாத்துக்கள் வந்தன. புதிய சப்பாத்து வாங்கினால் எல்லாம் சரியாகும். எழுதிய கடிதத்துக்கு நீண்ட நாளாக அப்பாவிடமிருந்து பதிலேதும் கிடைக்கவுமில்லை. பணத்துக்கு என்ன பாடு படுகிறாரோ? ஆனால் அப்பா கைவிட மாட்டார் என்று நம்பிக்கை இருந்தது. என்னைப் படிப்பித்து ஆளாக்குவதற்கு அவர் என்ன கஷ்டப்படவும் தயாராயிருந்தார். எப்படியாவது பணம் அனுப்பி வைப்பார்.

சப்பாத்து வாங்குவதென முடிவெடுத்த பிறகு கம்பஸில் போகிறவர் வருகிறவர்களின் கால்களையெல்லாம் நோட்டமிட்டேன். ஒவ்வொரு

விதமான சப்பாத்துக்களையும் அவை நிலத்தில் பதியும் போது எழுப்பும் ஓசை வித்தியாசங் களையும் ரசித்தேன். இது நல்லது,....இது சரியில்லை என எனக்குள்ளே விமர்சனங்கள் செய்தேன். சிலரிடம் அணுகி அவற்றின் விலையை விசாரித்துப் பார்த்தேன்.

ஆனால் அப்பாவிடமிருந்து பணம்தான் வந்தபாடில்லை . நித்யாவை சந்தித்தும் நீண்ட நாட்களாகியிருந்தது. புதிய சப்பாத்துக்களுடன் தான் நித்யாவின் அறைக்கு இனிப் போவது என ஏற்கனவே ஒரு குழப்ப நிலையில் எடுத்திருந்த முடிவு மடைத்தனம் போலத் தோன்றிற்று.

நித்யாவின் அறைக்கு மாலையிற் சென்றேன். அங்கே சுந்தரமூர்த்தி நித்யாவுடன் பேசிக் கொண்டிருந்தான். சுந்தரமூர்த்தி சீனியர் பட்ஜ் மாணவன். ராகிங் காலத்தில் சப்பாத்தை தலையில் சுமக்க வைத்தவர்களில் ஒருவன். அதனால், அவனிடத்தில் ஒரு இனம் புரியாத கோபம் இருந்தது. எதுவும் பேசாமல் சப்பாத்துக்களை வாசற்படியில் வழக்கம் போல கழற்றி வைத்து விட்டு உள்ளே சென்று அமர்ந்தேன்.

"என்ன ஜெயந்தன்?....இந்த ஷூசை விடவே மாட்டியா?..... அதில இவ்வளவு காதலா....?" எனக் கேட்டு விட்டு அட்டகாசமாகச் சிரித்தான் சுந்தரமூர்த்தி. ஒரு தமாஷுக்காக அப்படிக் கேட்டானா அல்லது நித்யாவின் முன் என்னை ஏளனப்படுத்தும்

எண்ணமா...எனப் புரியாமல் இருந்தது. சுந்தரம் வெளியேறும் வரை மௌனமாக இருந்தேன். பின்னர் நித்யாவிடம் மெதுவான குரலில் சொன்னேன்.

"அப்பாவுக்கு கடிதம் எழுதியிருக்கிறேன். காசு வந்ததும் ஷூஸ் வாங்கலாம்."

"என்ன இது ஜெயந்தன்?.... அவர் சும்மா விளையாட்டுக்கு ஜோக் அடிச்சிருப்பார். அதை ஏன் பெரிசு படுத்திறீங்கள்....?"

என்ன சொல்லியும் மனசு அடங்க மறுத்தது. நித்யாவின் முன் அவமானப்படுத்தப் பட்டதால் "மூட்" குழம்பிப் போய் அவளுடன் கூடப் பேச முடியாமல் இருந்தது. வெளியேறி நடந்தேன். இது தேவைதானா என நிலத்தில் காலை உதைத்தேன். சப்பாத்து கிழிந்து வாய் ஆவெனப் பிழந்து கொண்டது. கடவுளே எனத் தலையில் கையை வைத்தேன். வாய்விட்டு அழவேண்டும் போலிருந்தது. நடையைத் திருப்பினேன்.

அறைக்குப் போனபோது அன்றைக்கு வந்த தபால் காத்துக் கொண்டிருந்தது. அப்பாவிட மிருந்து மணியோடர்! ஐநூறு ரூபா அனுப்பியி ருந்தார். அதை கையில் எடுத்த போது நெஞ்சில் ஒரு சூடு படத்தான் செய்தது. எனினும் அவ்வுணர்வையும் மீறிய பரவசத்தில் ஆழ்ந்தேன். புதிய சப்பாத்து வாங்கப் போவது நிச்சயமாயிற்றே! எப்போது விடியுமெனக் காத்திருந்து கடைக்குப்

போனேன். சப்பாத்து வாங்கியதும் அதைக் கால்களில் மாட்டிக்கொள்ளக் கூட மனசில்லா திருந்தது. பிள்ளையைப் போல நெஞ்சோடு அணைத்துக் கொண்டேன். அதை அணிந்து கொண்ட போது நடக்க முடிய வில்லை.... பறந்தேன்.

கால்களை அலட்சியமாக அடியெடுத்து வைத்தேன். நடையில் ஒரு கம்பீரமும் வந்து விட்டது போலிருந்தது. முதலில் நித்யாவைக் காணச் சென்றேன்.

"உண்மையிலேயே....உங்கள விட எனக்குத் தான் சந்தோஷமாக இருக்கு ஜெயந்தன். இனி உங்கள ஆரும் கேலி பண்ண முடியாது தானே!"

அந்த வார்த்தை எனக்குப் பிறவிப் பயனையே அடைந்து விட்ட உற்சாகத்தையூட்டியது. இரவு படுக்க முடியாமல் அந்த வார்த்தை திரும்பத் திரும்பக் காதுகளில் ஒலித்தது. ஒரு வேளை நித்யா கூட என்னை விரும்பக் கூடும். அவ்ளிடம் இது பற்றிப் பேச வேண்டும். ஆனால் நெருங்கிக் கொண்டிருக்கும் பரீட்சைகள் முடியட்டும். இந்த நேரத்தில் நித்யாவைக் குழப்ப வேண்டாம் எனக் காத்திருந்தேன்.

பரீட்சைகள் முடிந்து மாணவர்கள் வீடு களுக்குப் பயணமாகும் நாளும் வந்தது. எந்த

அலுவல்களுக்கும் எனது துணையை நாடிய நித்யாவின் போக்கில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதை படிப்படியாக இந்த இடைக் காலத்தில் அவதானித்திருந்தேன். ரயில் நிலையத்துக்கும் சுந்தரத்துடன் சேர்ந்து வந்திருந்தாள்.

மாணவர்கள் எல்லோரும் ரயிலில் ஒரு தனி கொம்பாட்மென்டில் இடம் பிடித்திருந்தார்கள். நித்யா ஒரு ஓரமாக சுந்தரமூர்த்தியின் பக்கத்தில் அமர்ந்திருந்தாள்.

ஊருக்குப் போகிறேன் என்றதும் எனக்கு வீட்டு நினைவுகள்.... அப்பாவின் கஷ்டங்கள், எப்போது மகன் வருவான் எனக் காத்திருக்கும் அம்மா....ரயில் புறப்பட்டது.

நண்பர்களுக்குப் பரீட்சைகள் முடிவடைந்த மனநிலை. வீட்டுக்குப் போகும் மகிழ்ச்சி. ஆட்டம்....பாட்டு....இவற்றிலெல்லாம் மனம் லயிக்கவில்லை. சப்பாத்துக்களைக் கழற்றி வைத்துவிட்டு ஒரு புத்தகத்தில் ஆழ்ந்தேன்.

நண்பர்கள் சீண்டினார்கள். "எக்ஸாம் முடிந்த பிறகு என்னடா..படிப்பு, வாடா....!" எனக் கையைப் பிடித்து இழுத்தார்கள். நண்பனொருவன் எனது சப்பாத்துக்களிலொன்றை டக்கெனத் தூக்கினான். தலையில் வைத்து ஆடினான். "பாதுகையே துணையாகும்...."

கொம்பாட்மெண்ட் முழுதும் உடைந்து சிரித்தது. எழுந்து கையை நீட்டினேன். "தாடா!" எனது தலைக்கு மேலாக இன்னொருவனிடம் சப்பாத்தை எறிந்தான். நான் அந்தப் பக்கம் போக இந்தப் பக்கம் எறிந்தார்கள். பந்து விளையாடுவது போல ஆளுக்காள் எனக்குப் பிடிபடாமல் எறிந்து....ஏந்தி என்னை ஏய்த்துக் கொண்டிருந்தார்கள். ஒரு கட்டத்தில் நண்பனின் கை தவறியது. "கச்" பண்ண முடியவில்லை. திறந்திருந்த யன்னலினூடாக சப்பாத்து வெளியே விழுந்தது.

ரயில் ஓடிக் கொண்டிருந்தது. நான் ஸ்தம்பித்தேன். என்ன செய்யலாம்? எப்படி எடுப்பது? எனது அருமையான சப்பாத்து எனக்கு இனி இல்லையா? செயினைப் பிடித்து இழுத்து ரயிலை நிறுத்தலாமா? இழுத்தால் நிற்குமா? ஒரு சப்பாத்துக்காக ரயிலை நிறுத்துவது சரியா?

இமைக்கும் நேரத்தில் இந்த எண்ணங்கள் மனதிலோட...மின்னலென ஒரு பளிச். இருக்கையின் கீழிருந்த மற்றச் சப்பாத்தை டக்கென எடுத்து யன்னலினூடாக வெளியே எட்டி முதலில் சப்பாத்து விழுந்திருக்கக்கூடிய இடத்தை நோக்கி எறிந்தேன்.

"என்னடா?" நண்பர்கள் பதறிப் போனார்கள்.

"எனக்குத்தான் கொடுப்பினை இல்ல.... கிடைக்கிறவனுக்காவது பயன் படட்டும்...." என

நிதானமாகக் கூறினேன். எனினும் நித்யாவை இழந்தது போன்றதொரு சோகம் நெஞ்சில்.

❏❏❏❏

வெள்ளவத்தையில்..... வீதியின் மறுபக்கத்தில் போவது நித்யாவைப் போலத் தென்பட்டது. அவள்தானா எனப் பார்க்கும் உந்துதலில் ஓர் அடியெடுத்து வைத்தேன்.

கையில் ஒரு குழந்தையுடன்.....இன்னொரு குழந்தை அவள் பின்னே போக....நடந்து போவது நித்யாதான். இட்ட அடியை மேலும் எடுத்து வைக்காமல் அப்படியே நின்றேன். அவளது நடையில் ஒரு தளர்ச்சி தெரிவது போலிருந்தது. எனக்குக் கவலையாயுமிருந்தது. தளர்ச்சிக்கு குழந்தை சுமை காரணமோ அல்லது வேறு ஏதாவது கஷ்ட நிலையோ......? யாழ்ப்பாணத்தில் யுத்த நெருக்கடி காரணமாக கொழும்புக்கு இடம் பெயர்ந்திருக்கக் கூடும்.

"ஆரைப் பார்த்துக் கொண்டு நிக்கிறீங்கள்....?" என் மனைவி என்னை இந்த உலகத்துக்குக் கொண்டு வந்தாள்.

"நித்யா!"

"அவள் இஞ்ச என்னோட நிற்கிறாளே!"

மனைவி மகளின் கையை பிடித்திருந்தாள்.

"இவளில்லை....இந்தக் கதையில வருகிறாளே.....அந்த நித்யா...."

"ஓஹோ....அது தான் உங்க செல்ல மகளுக் கும் நித்யா என்று பெயர் வைச்சநீங்களோ..?" கள்ளனைப் பிடித்து விட்ட உற்சாகத்துடன் மனைவி என்னை மேலும் சீண்டினாள்;

"அது சரி.....இவ்வளவு காலத்துக்குப் பிறகும்.....என்ன அப்படிச் சொக்கிப் போய் நிக்கிறியள்?"

புன் முறுவலுடன் அவளுக்குச் சொன்னேன்.

"அப்பிடி.. ஒன்றும் இல்ல..., சினிமாக்களில் வருமே...அது மாதிரி அவளைக் கண்டதும் ஒரு ஃபாளாஷ் பாக்..... அவ்வளவு தான்."

(மல்லிகை 1998)

❑

## மனிதர்கள் இருக்கும் இடங்கள்

சோதனைச் சாவடிக்கு மிகத் தொலைவி லேயே வாகனங்களுக்குத் தடை விதிக்கப் பட்டிருந்தது. அந்த இடத்திலிருந்து நடக்க வேண்டும். சனங்கள் பஸ்ஸிலிருந்து குதித்து இறங்கினார்கள். தங்கள் பொருள் பொதிகளை இழுத்துப் பறித்தார்கள். கியூவில் முன்னே இடம் பிடிக்க வேண்டுமென்ற அவசரம் ஒவ்வொருவரிட மும். சுமக்க முடியாத சுமைகளைச் சுமப்பதற்குத் தயாராய் வந்தவர்கள் போலவே எல்லோரும் தென்பட்டார்கள். அந்த அளவுக்குப் பொருள் பண்டங்கள். வட பகுதியில் யுத்த காரணங்களால் தடை விதிக்கப்பட்ட பொருட்கள் மட்டுமின்றி ஏனைய பொருட்களுக்கும் தட்டுப்பாடு. வயோதிபப் பெண்கள் கூடத் தலையில் சுமையுடன்.

அலுவலகங்களில் உடை கசங்காது பணி புரியும் அதிகாரிகள், சில நோஞ்சான் மனிதர்கள் போன்ற எல்லோருமே பாரங்களைச் சுமந்தார்கள்.

வெயில் சுட்டு எரித்தது. எனது முதுகில் ஒரு பொதி. அது வழுகி விழாதவாறு சற்று முன் குனிந்து நடந்தேன். தோள் மூட்டில் ஒன்றைக்

கொழுவிக் கொண்டேன். இரண்டு கைகள் மட்டுமே இருந்தமையால் அவற்றில் இரு பைகளைக் காவினேன். தடைதட்டுப்பாட்டில் படும் கஷ்டங்களை மனைவி குறிப்பிட்டு எழுதுவாள். பிள்ளைக்குப் பால் மாக்கூட கிடைப்பதில்லை. அந்தக் கடிதங்களே லீவு போட்டு விட்டு ஊருக்குப் போக வைக்கும்.

சோதனைச் சாவடிக்கு ரோட்டு இன்னும் நீண்டு கொண்டிருந்தது. முகத்தில் துளிர்க்கும் வியர்வையைத் துடைக்க ஒரு கையும் இல்லாதிருந்தது. நெற்றியிலிருந்து கண்களுக்குள் வியர்வை கசிந்ததும் ஒருவித எரிச்சல் ஏற்பட்டது. பாதை தெரியாமல் மறைந்தது. முதுகிலிருந்த பை கழுத்தை அழுத்தி வலித்தது. அதையெல்லாம் பொருட்படுத்தும் மனநிலை எனக்கில்லை.

பெரிய மரங்கள் வீதியோரத்தில் வெயிலிற் காய்ந்து கொண்டிருந்தன. இளைத்துப் போய் ஒதுங்குபவர்களைத் தங்கள் நிழலில் அணைத்துக் கொண்டன. கிளைகளை அசைத்துச் சிறு தென்றலை வீசிக் கொடுத்து ஆசுவாசப்படுத்தின. அப்பா...என நன்றிப் பெருக்குடன் நிமிர்ந்து பார்த்தால் பழுத்த இலைகளை உதிர்த்து வாழ்த்தின. நல்ல மனம் கொண்டவர்கள் வாழ்த்தினாலும் எங்களுடைய வாழ்க்கை யுத்த பிரதேசங்களுக்குள் சிறையடிக்கப்பட்டிருக்கிறது. அங்கே மரங்கள் இலைகளை உதிர்க்காது.

நிமிர்ந்து பார்த்தால் விமானங்கள்தான் குண்டு வீசுமோ என்ற பயம். குண்டுகள் மரங்களின் பசுமையான இலைகளையெல்லாம் எரித்து விட்டிருக்கின்றன.

எனக்குப் பதற்றமாயிருந்தது. அல்லது ஒரு வித பயம் - இந்த முறை வரும் போது டோர்ச் லைட்டும் பட்டரியும் வேண்டி வாங்கோ..... என மனைவி எழுதியிருந்தாள். “இராவிருட்டிலை ஒன்றுக்கு ரெண்டுக்கு எழும்பிப் போறதென்றாலே ஒரு லைட்டும் இல்லை. ஒரு நள்ளிரவு பிளேன் இரைந்து கொண்டு வந்து குண்டு போடத் தொடங்கியிட்டுது. சாமம். திவ்யாவும் குளறுகிறாள் எழும்பி பங்கருக்கு ஓடலாமென்றால் ஒரே கும்மிருட்டு. நான் விழுந்தும் போனன். திவ்யா தான் தூக்கி விட்டாள். அந்த அவதியிலும்...“நொந்து போச்சோம்மா? நொந்து போச்சோம்மா....?” என்று வயித்தைப் பிடிச்சுப் பிடிச்சுக் கேட்கிறாள். எனக்கு வெக்கமாயும் போச்சு!”

பெறுமாத வயிற்றைச் சுமந்து கொண்டு அவள் இப்படியெல்லாம் இன்னல் படுகிறாளே என்ற ஆதங்கத்தில் எப்படியாவது ஒரு டோர்ச் லைட்டும் பட்டரிகளும் கொண்டு போய் விட வேண்டுமென அப்போதே தீர்மானித்தேன். இப்போது பயம் பிடித்து ஆட்டுகிறது. பத்து பட்டரிகளை எனது உடையில் சுற்றி பாய்க்கின் அடிப்பாகத்தில் ஒளித்து வைத்திருந்தேன். இன்னொரு

பாய்க்கினுள் அவ்வாறே டோர்ச்சையும் மறைத்து வைத்தேன். செக் பண்ணும் போது எப்படி யெல்லாம் உதறிக் கொட்டுவார்கள் என்பதும் எனக்குத் தெரியும். எனினும் ஏதோ ஓர் அற்ப நம்பிக்கை. பிடிபட்டாலும் உண்மையான காரணத்தைச் சொன்னால் இரக்கப்பட்டு விட்டு விடுவார்கள் என என்னையே சமாதானப்படுத்திக் கொண்டிருந்தேன். ஆனால், இராணுவச் சோதனைச் சாவடி நெருங்கிக் கொண்டே வர .. நெஞ்சு பக்....பக்...!

மரங்களின் இலைகளையொத்த வர்ணத்தில் யூனிபோம் அணிந்த சிப்பாய்கள் வீதியின் இரு மருங்கும் கரிய துப்பாக்கிகளின் துணையுடன் நின்றனர். அவர்கள் முகங்கள் இறுகிப் போயிருந்தன. அவர்களிடமிருந்து சிரிப்பையும் மென்மையுணர்வையும் அழித்திருப்பார்களோ இந்த டியூட்டிக்காகப் பயிற்றுவிக்கும் போது?

ஆனால், அபூர்வமாக சிலர் துப்பாக்கிகளின் சுடு முனையை நிலத்தில் குத்தி அதன் பிடியில் கை ஊன்றிக் கொண்டு "ரிலாக்ஸ்" ஆக நின்றார்கள், இனிச் சுடுவதில்லை என்று தீர்மானித்து விட்டது போல! துப்பாக்கிகள் இது போல நல்ல வகையிலெல்லாம் பயன்படுத்தப்படக் கூடியவைதான். அதை விட்டு ஏன் சுட்டுத் தள்ளுகிறார்கள்?

நடு வெயிலில் மக்கள் வரிசை நீண்டிருந்தது. பத்துப் பதினைந்து பேராக அழைக்கப்பட்டு

உதறிக் கொட்டப்பட்டார்கள். தலையை எட்டி எட்டி நோட்டமிட்டேன். தடை செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு வந்து யாராவது பிடிபடுகிறார்களா அல்லது மன்னித்து விடப் படுகிறார்களா என்பதை இங்கிருந்தே கண்டறிய எத்தனித்தேன். மாட்டுப்படப் போகிறேனோ என நினைக்க வயிற்றைக் கலக்கியது. இங்கிருந்தே திரும்பி விடுவோமா என்றும் தோன்றியது அப்படித் திரும்பினாலும் அது சந்தேகத்தைக் கொடுக்குமே! அது வேண்டாம். முன் வைத்த காலைப் பின் வைக்காதே!

என்ன பொருட்கள் தடை செய்யப்பட்டவை எனப் பட்டியலிடப்பட்ட அறிவிப்புப் பலகை முகத்திலடித்தது. அதை மீறுபவர்கள் இன்ன சட்ட பிரிவுப்படி தண்டனைக்கு ஆளாவார்கள் என எழுதப்பட்டிருந்தது. அதே விஷயத்தை ஒலி பெருக்கியும் செகிட்டாவடியைப் பிடித்துச் சொல்லிக் கொண்டிருந்தது.

கியூ ஒழுங்கைக் கவனிக்கும் சிப்பாய் அண்மையில் வந்தால் அவன் என்னையே நோக்கி வருவது போலவும் எனது பைகளைக் கடைக் கண்ணால் நோட்டமிடுவது போலவும் பிரமை! எனது கண்களின் மிரட்சியே காட்டிக் கொடுத்து விடுமோ என்ற எண்ணத்தில் மிக இயல்பாக நிற்பது போல் நிற்பதற்கு முயன்றேன். சினிமாப் பாட்டொன்றை வாயசைத்து முணுமுணுத்துப் பாசாங்கு காட்டினேன். ஆனால், உண்மை

யிலேயே மனசுக்குள் கடவுளைக் கசிந்துருகிக் கொண்டிருநதேன்.

கியூ முன் நகர நான் அதைக் கவனிக்காம லிருந்திருக்க வேண்டும்.... பின்னே நின்றவர் சினப்பட்டு முதுகில் தள்ளினார். முதுகில் குத்தாதவரை சரிதான். "போங்கோ!.... போங்கோ!.... என்ன யோசிச்சுக் கொண்டு நிக்கிறியள்?"

எனது முறை வந்தது.

"கடவுளே!" என்றேன். கடவுள் என ஒருவர் இருப்பது எவ்வளவு முக்கியம் என்பது இப்படியான நேரங்களில்தான் தெரிய வருகிறது.

முதலில் பொருட்களைக் கீழே வைத்து விட்டுக் கைகளை உயர்த்திக் கொண்டு நிற்க உடலெல்லாம் ஸ்பரிசித்துச் சோதிக்கப்பட்டேன். சில இடங்களைத் தொட்ட போது கூச்சமாக இருந்தது. மிக அவதானத்துடன் சிரிப்பை வெளிப்படுத்தாமல் நின்றேன்.

"சரி!...போ!...போ!"

அடுத்து பொருட்கள் செக் பண்ணும் இடத்துக்குப் போக வேண்டும் டக்...டக் ....டக்....டக்....நெஞ்சு துடித்தது.

ஒவ்வொருவருக்கும் இரு சிப்பாய்களாக நின்று "செக்" பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

தப்ப வழியில்லை. பைகளைக் கீழே வைத்து அவர்கள் உத்தரவுக்குக் காத்திராமல் நல்ல பிள்ளையைப் போல ஒன்றைத் திறந்து பொருட்களை வெளியே வைத்தேன்.

மற்றப் பைகளையும் திறக்கும்படி சைகை செய்தார்கள். முதலில் கொட்டப்பட்ட பொருட் களைச் சோதிப்பதில் அவர்கள் கவனமாக இருக்க நான் பட்டரி டோர்ச் ஆகியவை சுற்றப்பட்ட துணியை எடுத்துக் கீழே வைத்து அதன் மேலும் சில உடுதுணிகளைப் போட்டு மறைத்தேன்.

"ஓய்!... என்ன இது"

திவ்யாவுக்காக நான் வேண்டி வந்திருந்த சொக்லேட் பக்கட்டுகள் அவர்களின் கண்ணிற் பட்டு விட்டது.

"லமயாட்ட!... (பிள்ளைக்கு!...) எனப் பதில் சொன்னேன்."

அவனது முகம் முக்கோணமாகியது. "பிள்ளைக்கா....அல்லது.....?" அவன் குறிப்பிட்ட மிருக வர்க்கம் சொக்லட் சாப்பிடுமா என்பது பற்றிச் சரியான ஞானம் இல்லாமையால் அதை ஒரு ஜோக்காகக் கருதிச் சிரிக்க முற்பட்டேன்.

"என்ன சிரிப்பு?....சொக்லட் சாப்பிடா விட்டால் உன்ட புள்ள செத்திடுமா?"

எனக்கு உச்சிக்கு ஏறியது. சொக்லட் உயிரைத் தக்க வைக்கிற பண்டமல்ல. குழந்தை யுத்த பிரதேசத்திலிருந்து காய்கிறாளே....குண்டுச் சத்தங்களினால் அதிர்ச்சி மனநிலையில் இருப்பாளே என்றெல்லாம் எண்ணிக் கலங்குவதுண்டு. இப்படி ஆறேழு மாசங்களுக்கொரு முறை வீட்டுக்குப் போகும் போது ஏற்படுகிற பெற்ற மனத் துடிப்புத் தான்....

"இல்ல....இதெல்லாம் அங்க கிடைக்காது ....அதுதான்" மென்று விழுங்கினேன்.

"இது தடை செய்யப்பட்ட சாமான் என்று தெரியாதா?.... உன்னைப் புடிச்சு உள்ள போடவா?"

இந்தளவு மரியாதையே போதுமென்றிருந்தது. சொக்லட்டுக்கே இந்தப் பாடென்றால்.... பட்டரி பிடிபட்டால்? கடவுளே..... என்னைக் காப்பாற்று!.

சொக்லட் பக்கட்டுக்களை எடுத்துக் கொண்டார்கள். "சரி போ!...போ!.... இனிமே இப்படி செய்ய வேண்டாங்.!"

அது போனால் போகட்டும். இந்த அளவுக்குத் தப்பியதே பெரிய காரியம். மள மளவென்று பொருட்களை எடுத்துப் பைக்குள் திணித்தேன். கையில் நடுக்கம் தெரிந்தது. அதைக் கவனித்திருக்க வேண்டும்.

"என்ன...பயப்படுறதா?.... இதெல்லாம் எங்கட டியூட்டி...பயப்பட வேணாம்...சரியா?" என்றான்.

"சரி" என்றேன்.

"எனக்கென்ன பயம்?..துணிஞ்ச கட்டை" என்பது போன்ற பாவனையில் அவனை நிமிர்ந்து பார்த்தேன். சிக்கலிலிருந்து விடுபட்டாயிற்று என்ற மகிழ்ச்சிதான் அப்படியொரு உசாரைத் தந்தது. ஆனால், அவனது முகத்தின் இறுக்கம் விடுபடாமலிருந்தது. "போ! போ.....!" விர ட்டப்பட்டேன்.

அவ்விடத்திலிருந்து அகன்றுவிட்டாலே போதும் எனும் அவசரத்துடன் மீதமிருந்த துணிமணிகளையும் எடுத்துப் பைகளில் திணித்தேன். அவசரத்தில் அவதானத்தை கை விட்டதால்...."தடக்!" பட்டரிப் பார்சல் நிலத்தில் விழுந்தது. முன்னே நின்றவன் துள்ளி ஓரடி பின் வாங்கினான்.

"என்ன குண்டா?"

எனக்கு மூச்சு நின்றது போலிருந்தது. முழிகள் வெளியே வந்து விடுமோ எனக் கண்கள் இமைக்க மறந்து நின்றேன்.

"பெண்.....பெண்சாதி....பிள்ளைத்தாச்சி.... பெண்சாதி.... பாத்றூம்...பிள்ளைத்தாச்சி!"

சதுரமெல்லாம் நடுங்கியது. வியர்வையில் சேர்ட் நனைந்து முதுகில் ஒட்டியது. பாய்க்கிற்குள் திணித்த பொருட்களெல்லாம் திரும்ப வெளியே கொட்டப்பட்டன. துருவித் துருவி ஆராயப்பட்டன. இரு பக்கமும் துப்பாக்கிகள் எனக்குத் திருப்பப்பட்டன.

துணிப் பார்சலைக் குலைத்து பட்டரிகளை வெளியே எடுத்து அது குண்டல்ல என்பதைக் காட்டினேன். "எதுக்கு இதெல்லாம்?.... பட்டரி குண்டு வெடிக்கவா?"

நான் அழுவாரைப் போல நின்றேன். டோர்ச்சுடன் இரு பட்டரிகளை மட்டும் கொண்டு வந்திருக்கலாம். "ஸ்டொக்" பண்ணி வைத்தால் நீண்ட காலப் பாவனைக்கு உதவும் எனக் கொண்டு வந்து சேர்த்த எனது சாதுரியத்தை அல்லது துணிச்சலை மனைவி மெச்சுவாள் என்ற ஆசையில் பட்டரிகளைக் கொண்டு வந்தது எவ்வளவு தப்பு எனப் பட்டது. இப்போது என்ன சமாதானம் சொல்லித் தப்புவது? உண்மையான காரணத்தைச் சொன்னால் நம்புவார்களா என்ற சந்தேகமான சூழ்நிலை தோன்றியிருந்தது.

"பெண்சாதி ....பெறுமாசப் பிள்ளைத் தாச்சியாயிருக்கின்றாள். ஆளுதவி ஒன்றும் இல்லை. இரவில பாத்றூமுக்கு போறதென்றாலும் லைட் இல்லை."

"என்ன...நோனா புள்ளத்தாச்சியா?"

ஒருவன் கேட்க மற்ற இருவர் சிரித்தார்கள். இதிலென்ன ஏளனம் இருக்கிறது என எண்ணினேன். அல்லது இவர்கள் சிரித்தது நான் நின்ற வெருண்ட கோலத்தைக் கண்டோ தெரியாது. திரும்பவும் அதே கதையைச் சொன்னேன்.

"நோனா புள்ளத்தாச்சி என்றால் றெட்குறோசுக்கு சொல்லுங்க. அல்லது அங்க ஆமிக் காம்புக்கு இன்போம் பண்ணுங்கோ... இங்காலை கொண்டு வர ஒழுங்கு செய்யலாம்."

அது நடைமுறைக்கு சாத்தியமற்றது என்பது எனக்கு மட்டுமல்ல அவர்களுக்கே தெரியும் என்பதால் மௌனம் சாதித்தேன்.

"உங்களையெல்லாம்...சுட வேணும்!" (தம்சலாட்ட வெடி தியன்ன ஓன!)

நடுங்கிக் கொண்டிருந்த எனது மேனி ஒரு முறை உறைந்தது. முயன்று கதைத்தேன்.

"நான் செய்தது பிழையென்றால் மன்னிச்சுக் கொள்ளுங்கோ. (சமாவென்ட!..) நான் குடும்பஸ்தன்...கன நாளுக்கு பிறகு பிள்ளையைப் பார்க்க வீட்டுக்கு போறன்...என்னை விடுங்கோ... பட்டரி வேண்டாம்...கொண்டு போகயில்லை.!"

“விட வேண்டாம்...இவனை லொக்காவிடம் கூட்டிப் போ” என ஒருவன் கூற, மற்றவன் “என்ட” என்றான். நான் போகாமலே நின்றேன்.

இந்தப் பயணம் ஆரம்பித்த நேரமுதல் எத்தனையோ அலைச்சல்களைப் பட்டாலும் மனைவி குழந்தையைப் பார்க்கப் போகிறேனென்ற தொரு நாதம் நாடி நரம்புகளை மீட்டிக் கொண்டிருந்தது. இப்போது சர்வாங்கமும் சோர்வடைந்த...தளர்ச்சி. ஏதாவது பேச வாய் திறந்தால் அழுது விடுவேன் போல விம்மல்கள் வெடிக்கத் தருணம் பார்த்துக் கொண்டிருந்தன.

பொருட்களை அப்படியே விட்டு வரச் சொன்னார்கள். சோதனைச் சாவடியின் ஒரு பக்கத்திலிருந்த அலுவல் அறையை நோக்கி நடத்தப்பட்டேன். பக்கத்திலேயே சிறியதொரு கூடும் உள்ளது. அதனுள்ளேதான் அடைப்பார்களோ! இந்தக் கேவலம் தேவைதானா? நான் செய்தது குற்றமா இல்லையா என்று கூடப் புரியவில்லை. இனி என்ன நடக்குமோ என நெஞ்சிடித்தது. விசாரணை தடை முகாம் என்றெல்லாம் வாழ்க்கை திசைமாறிப் போய் விடுமோ! கவிதா.....உன் பிள்ளைப் பேற்றுக்குக் கூட நான் நிற்க முடியாமற் போகுமோ!

அலுவல் அறைக்கு வெளியே ஒருத்தனின் காவலுடன் நிறுத்தப்பட்டேன். உள்ளே

சென்றவன் மேசையில் பட்டரிகளையும் டோர்ச்சையும் வைத்து விட்டு என்னைச் சுட்டிக் காட்டி முறையிட்டான். ஒரு குற்றவாளியாக நிற்பது கூசியது. மனிதாபிமான கண்ணோட்டத்தில் பார்த்தால் நான் செய்தது தவறு அல்ல. கடைசி முயற்சியாக அந்த அதிகாரியுடனாவது கதைத்துப் பார்க்கலாம் என்றொரு வேகம். ஜன்னலூடு பார்த்து விஷயத்தைச் சொன்னேன். "மனைவி பெறுமாதம், இருட்டில் பங்கருக்கு ஓடியது ....விழுந்தது" என எல்லா நியாயங்களையும் ஒப்புவித்தேன். மனமும் சலிப்படைவது போல் களைத்துப் போனது. அவர் எழுந்து எனக்கு அண்மையாக வந்தார்.

தொப்பியைக் கழற்றி தன் முடியில்லாத தலையைத் தடவிக் கொண்டே என்னைப் பார்த்தார். அது....அவர்....?

அவர்....சோமையாவைப் போலல்லவா தோன்றுகிறது. அந்தக் கறுத்த நெடிய தோற்றம்? பதினாலு வருடங்களுக்கு முன் அவரது தலையில் முடியிருந்தது. இப்போது வழுக்கைத் தலையோடிருந்தவரை மட்டுக்கட்ட முடியவில்லை.

அப்போது நாங்கள் கொழும்பில் குடியிருந்தோம். வெள்ளவத்தையில் வீடு. முதலில் அவ்வீட்டில் நானும் சில நண்பர்களும் இருந்தோம். அவ்வீட்டிலேயே ஒரு பகுதியில் சோமையா குடியிருந்தார். சோமதாச என்பது அவர் பெயர்.

அண்ணா என்ற அர்த்தத்தில் சோமையா என நாங்கள் அழைப்போம். ஒரு வகையில் பார்க்கப் போனால் அவ்வீடு அவருக்குச் சொந்தமானது. இன்னொரு வகையில் பார்க்கப் போனால் அவ்வீடு அவருக்குச் சொந்தமாகுமா என்பதே கேள்விக் குறியாக இருந்தது. உண்மையில் அது அவரது தந்தையின் சொத்து. அவருக்கு ஒரு தம்பியாரும் திணைக்களமொன்றில் உயர் பதவி வகிப்பவர் இருந்தார். தந்தை இறந்த போது வீடு யாருக்கு என்று எழுதி வைக்காமலே போய் விட்டார். தம்பிக்கு ஏற்கனவே ஒரு வீடு தந்தை கொடுத்திருப்பதால் இந்த வீடு தனக்குத்தான் சேர வேண்டுமென சோமையா குடிபோதையிலிருக்கும் நேரங்களில் சொல்லிக் கொள்வதுண்டு. ஆனால், வீட்டை எங்களுக்கு வாடகைக்கு தந்ததும், மாதாந்த வாடகைப் பணம் பெறுவதும் அவரது தம்பியார்தான்.

ஒரு பக்கத்தில் சோமதாச இருக்கட்டும் என அறையொன்றை சட்டரீதியற்ற முறையில் பிரித்துக் கொடுத்திருந்தார். அந்தப் பக்கத்து அறையிலும் பாத்றூமிலும் அவர் பகலெல்லாம் (விழுந்து) கிடப்பார். வெறி முறிந்ததும் மாலை வேளையில் வெளியே போய் மீண்டும் இரவு நல்ல போதையில் வருவார்.

குடிப்பதற்கு இவ்வளவு காசு எங்கிருந்து கிடைக்கிறதோ என நாங்கள் பேசிக் கொள்வோம். "சாப்பாட்டுக்கென கொடுப்பதை குடித்துத் தள்ளுகிறார்...இந்த மனுஷன் ஒரு உதவாக்கரை!" எனத் தம்பியாரும் குறைப்படுவார்.

அவர் எங்களோடு பழகத் தொடங்கியதும் எங்களிடமும் கைமாற்றாகக் காசு கேட்பார். கொடுத்தால் திரும்ப வராது. நண்பர்கள் கொடுக்க மாட்டார்கள்; "இந்தாள் கசிப்பு அடிச்சிட்டு வந்து கத்துறதுக்கா?"

அந்த ஆளோ காசு கொடுக்கா விட்டால் போகாமல் அழுங்குப் பிடியில் நிற்கும். கடைசியில் பத்தோ பதினைந்தோ கொடுத்து அனுப்புவது நானாகத்தான் இருக்கும். இரவு வந்தால் காசு கொடுக்காதவனின் பெயர் விலாசமெல்லாம் இழுத்துக் கிழிக்கப்பட்டும். அவ்வப்போது "தெமளு" என்ற சொல் பிரயோகமும் விழும். நான் கவிதாவை மணமாகி (மனைவி) குடியிருக்க வந்த போது இதுதான் தருணம் என அவர்கள் விலகி விட்டார்கள்.

"இந்த மனுஷன் இருக்கிற இடத்திலை எப்படி மனிசியை வைச்சிருக்கப் போகிறாய்?" என அவர்கள் கரிசனைப் பட்டதுண்டு. எனக்குத் தோதாக வேறு வீடு கிடைக்கவுமில்லை. பழகிய இடமே சிறந்தது என்றும் தோன்றியது.

ஒரு கட்டத்தில் சோமையாவின் தொல்லை தீராத தொல்லையாகத்தான் போய் விட்டது. கவிதாவுக்கு அவரைக் கண்ணில் காட்டவே கூடாது.

"என்ன இந்த மனுஷன்?...எங்கையாவது வேலை செய்து உழைக்கிறதுக்கு.... சோம்பேறி

மாதிரிக் கிடக்குது....குடுத்து வைச்ச மாதிரி காசு கேட்டுக் கொண்டு வருது..." என என் மீது பாய்ச்சல்கள் நடக்கும்.

"என்ன கப்பம் கட்டிக் கொண்டிருக்கிறீங்களோ" என ஏளனத் தொனியிலும் கேட்பாள்.

சோமையா நன்றாக இருக்கும் நேரங்களில் "ஏன் இப்படி குடிக்கிறீங்கள்?... குடிக்கிறது கூடாது!" என்றெல்லாம் கேட்டும், உபதேசித்தும் இருக்கிறேன். ஒன்றும் பேசமாட்டார். சில வேளைகளில் "குடிக்கக் கூடாது தான்!" என ஒரு வார்த்தையில் பதில் சொல்லுவார். "இனிக் குடிக்க மாட்டன்!" என்றும் கூறுவார். ஆனால்! இரவு திரும்பவும் சனியன் பிடித்திருப்பதைக் காணலாம்.

வெறி மயக்கத்தில் வெளிப்படும் புலம்பல்களிலிருந்தும் அவரது தம்பியார் சொன்ன சில கதைகளிலிருந்தும் அவருக்குள்ளும் ஒரு கதை இருப்பதைத் தெரிந்து வைத்திருந்தேன்.

அவர் முன்னர் நல்ல உத்தியோகத்திலிருந்தவர். வேலை செய்யும் இடத்தில் இள நங்கை ஒருத்தியுடன் தொடர்ப்பு - காதல். சோமையாவின் குடும்பம் அந்தஸ்து வசதியில் உயர்ந்தது. அவர்களுக்கு இதைப் பொறுக்கவில்லை. எவ்வளவோ தடைகள் போட்டார்கள். சோமையாவும் தொடர்பைக் கைவிடுவதாயில்லை. அவர் ஊரிலில்லாத தருணம் பார்த்து ஒரு நாள்

அந்தக் குடிசை எரிக்கப்பட்டு விட்டது. சோமையாவின் கிளி பறந்து போனது எந்த இடமென்றே தெரியவில்லை.

"அவளைத் தேடிக் கொண்டே இருக்கிறேன்.... அவளை நினைத்துத்தான் குடிக்கிறேன். அவளைக் கண்டு பிடித்த பிறகுதான் எனக்குக் கல்யாணம், வாழ்க்கை எல்லாம்." என்பார்.

இதை அறிந்த பிறகு எனக்கு அவர் மேல் இன்னும் பரிவு கூடியது. இரவில் வரச் சுணங்கினால் கேற்றடியில் பார்த்துக் கொண்டு நிற்பேன். குடி போதையில் எங்காவது விழுந்து கிடப்பாரோ எனக் கவலையாயிருக்கும். அப்படி நடப்பதுமுண்டு. வந்ததும் சாப்பிட்டாரா என்று கேட்பேன். அவருக்குச் சாப்பாடு கொடுக்கும்படி கவிதாவிடம் சொல்வேன். கவிதா அந்தக் கதைகளையெல்லாம் நம்பத் தயாராயில்லை. என்னிடத்தில் அவர் இடம் கண்டு கொண்டார் என்றுதான் சொல்வாள். அது ஓரளவு உண்மையும் கூட. ஆரம்பத்தில் மாலை நேரங்களில் மட்டும் பணம் கேட்பார். பின்னர் பகலிலும்..."பசிக்கிறது" என வயிற்றைத் தொட்டுக் காட்டிப் பணம் கேட்பார். சாப்பாடு கொடுத்துச் சாப்பிடச் சொன்னால்... "இல்ல..உங்களுக்கு கஷ்டம் தரக் கூடாது.... கடையில் தான் சாப்பிட வேணும்!" எனக் காசுக்காக நாண்டு கொண்டு நிற்பார்.

"இப்ப தருகிற கஷ்டம் போதாதா?" என அவருக்குக் கேட்கக் கூடியதாகவே கவிதா சத்தம் போடுவாள். பசிக்கிறது என்று கேட்ட மனிசனுக்கு எப்படி கொடுக்காமல் விடுவது என்று எனக்குத் தோன்றும். கொடுத்தால் அந்தக் காசுக்கும் குடித்து விட்டு வருவார். இரவில் வந்து கத்தலும் திட்டல்களும் தான். நன்றி கெட்ட மனுஷன் என கவிதா சொல்வாள். "வேறு வீட்டிற்கு மாறி விடலாம்!." என நச்சரிக்கத் தொடங்கியிருந்தாள். அப்போது நாட்டு நிலமைகள் மோசமாக ஆரம்பித்திருந்தன. புதிய இடத்துக்கு...தெரியாத சூழலுக்கு போவதை விட இங்கேயே அஜஸ்ட் பண்ணிக் கொள்ளலாம் என்றுதான் என் மனம் சொன்னது.

எண்பத்து மூன்று ஜுலை!......

மதிய போசனத்தின் பின் வழக்கம் போல அலுவல்களில் ஈடுபட்டிருந்த போது வெளியே கலவரம் வெடித்தது. மாடியிலிருந்து கீழே நடக்கிற தாக்குதல்களை அவதானித்த சிற்றூழியர்கள் தங்கள் மேலதிகாரிகளான தமிழர்களுக்கு அடி உதை என்ற ரீதியில் உள்ளேயும் ஆரம்பித்தார்கள்.

எனக்குக் கவிதாவின் நினைவுதான் முதலில் வந்தது. கவிதா தனிமையில் இருக்கிறாளே! உடனே போய் விட வேண்டும். எப்படிப் போவது? புறக்கோட்டையிலிருந்து வெள்ளவத்தைக்குப் போக எவ்வளவு நேரமாகும்?

இறங்கி வீதிக்கு ஓடி வந்தால்.... நிலைமையின் உக்கிரம் தெரிகிறது. பஸ்கள் வாகனங்களில் போகிறவர்களையெல்லாம் "தெமளுக்கள்" இருக்கிறார்களா என செக் பண்ணி இழுத்துப் போட்டு வெட்டுகிறார்களாம்..... எரிக்கிறார்களாம்.

ஒன்றுக்கும் யோசியாமல் நடக்கத் தொடங்கினேன். வெறும் கட்டை மாதிரி மனதில் ஒரு அசாத்திய துணிவை ஏற்படுத்திக் கொண்டு விறு விறு என நடந்தேன். - பொக்கட்டிலிருந்த ஐடென்ரிட்ரி காட்டைத் தூக்கி வீசி விட்டு கையில் பை.:.லுடன் - அதில் சிங்களத்தில் எழுதப்பட்ட சில தாள்கள் இருந்தன. - அலுவலகத்திலிருந்து வெளியேறிய போது ஒரு தற்பாதுகாப்புக்காக இந்த யுக்தியைக் கையாண்டிருந்தேன்.

பாதையெல்லாம் கோரம். கடைகள் சூறையாடப்பட்டு எரிக்கப்படுகின்றன. லொறிகளிலும் பஸ்களிலும் பொருட்களை அள்ளிக் குவித்துக் கொண்டு போகிறார்கள். "ஜயவேவா!" கண் முன்னே வெட்டி வீழ்த்துகிறார்கள். எனக்கு மரண பயம் ஒரு பக்கம்....கவிதா பற்றிய பயம், அதற்கு மேலாக. சோமதாசவுக்கு ஏற்கனவே கவிதா மேல் ஒரு வித கோபம் இருக்கக் கூடும். என்ன நடந்திருக்குமோ எனக் கலங்கியவாறே நடந்து...... நடந்து......

எப்படியோ வீடு வந்து சேர்ந்து விட்டேன். இருட்டியிருந்தது. வியர்த்து விறு விறுத்தது.

வாசலில் சோமையா!

அவரைக் கண்டதும் என்னையறியாமலேயே கட்டிப் பிடித்தேன். உடைந்து உடைந்து அழுகை வந்தது. பயம், அதிர்ச்சி, அயர்ச்சி, களைப்பு. கவிதாவிற்கு என்ன நடந்ததோ என்ற குழப்பம். "சோமையா....சோமையா....!" அவரை ஒரு சொந்த அண்ணனைப் போல உணர்ந்தேன்.

"பயவென்ட எப்பா!.... (பயப்பட வேண்டாம்) ...... பயவென்ட எப்பா" எனச் சொல்லி என் முதுகில் தட்டினார். "மம இன்னவா....பயவென்ட எப்பா....!" அப்போது தான் நிமிர்ந்து அவர் முகத்தைப் பார்த்தேன்.... "கவிதா?"

"உள்ளே வா சொல்கிறேன்...!"

அவரைத் தொடர்ந்து வீட்டிற்குள் சென்றேன். நிலமை மிக மோசமாக இருக்கிறது என்று சொன்னார். கவிதாவை தனது அறையில் கட்டிலின் கீழே படுக்க வைத்திருக்கிறாராம். என்னையும் அவ்வாறே செய்யச் சொன்னார். தான் இருக்கும் வரை பயப்பட வேண்டாமெனத் தெம்பூட்ட முயன்றார்.

அன்றிரவே வீட்டுக்கு வெளியே ஆரவாரம் கேட்டது. வீட்டுக்குள் இருக்கும் தெமளுக்களை

வெளியே விடு என்ற கோஷம் எங்களது காதுகளையும் கிழித்தது.

"அவங்களெல்லாம் ஓடிட்டாங்கள்.... போங்கடா....!" என சோமையாவின் அதட்டல் சத்தமும் கேட்டது.

"வீட்டுக்குள்ளே எங்களை விடு!... நாங்கள் பார்க்கிறோம்."

"ஒரு நாய் உள்ளுக்குள் வர முடியாது!"

சோமையா குடிக்கிறவரானாலும் அப்போது முப்பத்தைந்து வயது இளைஞன்... வாட்ட சாட்டமாக இருப்பார். அவரது அட்டகாசத்தால் அந்தப் பகுதியில் சண்டியன் என்றும் பெயர் எடுத்திருந்தவர்..... அவருக்கும் சில கையாட்கள் இருந்தார்கள் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

மூன்று நாட்கள் வீட்டின் முன்னே குழுமியிருக்கும் காடையர்கள் போகாமல் ஆள் மாறி ஆள் மாறி நிற்கிறார்களாம். தனது ஆட்களும் நிற்கிறார்கள் பயப்பட வேண்டாம் என சோமையா அவ்வப்போது தகவல் தந்து கொண்டிருந்தார். எங்களுக்கு உயிர் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரிந்து கொண்டிருந்தது.

சோமையா ஒரு திட்டத்தைச் சொன்னார். வீட்டின் பின் பகுதியில் அவரது தம்பியாரின்

தோட்டத்திலிருந்து கொண்டு வந்து போடப்பட்ட தேங்காய்கள் இருந்தன. அவற்றையெல்லாம் மூட்டைகளாகக் கட்டி லொறியில் எடுத்துப் போவாராம். மூட்டையோடு மூட்டையாக நாங்களும்...!

அடுத்த நாள் காலை எல்ப் லொறி உறுமிக் கொண்டு உள்ளே வந்தது. அவர்கள் கண்முன்னே மூட்டைகள் ஏற்றப்பட்டன. லொறியை ஒரு ஒதுக்குப் புறமான இடத்துக்கு ஓட்டிச் சென்று இறக்கப்பட்டோம். சோமையா ஏற்கனவே ரெடியாக வைத்திருந்த உடுதுணிகளை (சிங்கள பாணி) எங்களிடம் தந்தார். நிறையச் சாப்பாடு போட்டார். பிறகு அதே லொறியில் ஏற்றி வந்து அகதி முகாமில் சேர்த்து விட்டார்.

அங்கிருந்து கப்பலில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததெல்லாம் வேறு கதை.

அந்த நேரத்தில் ஒருவித அதிர்ச்சி மனநிலையில் அவருக்கு நன்றி கூடச் சொல்லாமல் வந்து விட்டோமே என நானும் கவிதாவும் அவ்வப்போது நினைவு கூர்ந்து கவலைப்படுவதுண்டு. சில வருடங்களின் பின்னர் அவரைத் தேடி அந்த வீட்டுக்குப் போயிருக்கிறேன். வீடு யாருக்கோ விற்கப்பட்டிருந்தது. அங்கிருந்தவர்களுக்கு சோமையா யார் எங்கிருக்கிறார் என்ற விபரங்கள் கூடத் தெரியவில்லை.

இந்தப் பழைய கதையை உங்களுக்குச் சொல்ல சற்று நேரம் பிடித்திருக்கலாம். ஆனால், பட்டரியைக் கொண்டு வந்ததற்கான காரணத்தைச் சொன்னவுடன் அவர் ஒரு புன்முறுவலுடன் சொன்னார்.

“கொண்டு போங்க...!”

மேசையில் போடப்பட்டிருந்த பட்டரிகளையும் டோர்ச்சையும் எடுத்து என் கையில் தந்தார்.

“அவரைக் கொண்டு போக விடுங்க!”

என்னைக் கூட்டி வந்த சிப்பாய்க்குப் பணித்தார். சிப்பாய்க்கு கோபம். அவரது முன்னிலையிலேயே என்னை ஏசினான். “இனிமேல் இப்படிக் கொண்டு வந்தால் பிடித்து உள்ளே தான் போடுவோம்!”

அவர் திரும்பவும் அதட்டினார். “அவரைத் தொந்தரவு பண்ண வேண்டாம். கொண்டு போக விடு!... உங்கள் குழந்தை நலமாய்ப் பிறக்க எனது வாழ்த்துக்கள்.!”

“தாங்ஸ்” என்றேன். நான் நன்றி சொன்னது இந்தக் காரணத்துக்காக மட்டுமல்ல என்பது அவருக்குப் புரிந்திருக்க வேண்டும் எனப் பிரார்த்தித்துக் கொண்டே எனது பைகள் வைக்கப் பட்டிருந்த இடத்துக்குச் சென்றேன்.

வந்த சிப்பாய் மற்றவனிடம் சொல்வது கேட்டது "இவங்களையெல்லாம் சுட வேண்டும்!" அது கேட்காதவன் மாதிரி அவசரமாக பொருட்களைப் பைகளுக்குள் திணித்தேன். அவற்றைச் சுமந்து கொண்டு நடக்கத் தொடங்கினேன்.

அவர் சோமையா என்பதை நான் கண்டு கொண்டது போல என்னையும் அவர் மட்டுக் கட்டியிருக்க மாட்டாரா? தெரிந்து கொண்டு மற்றவர்கள் முன்னிலையில் இந்த இடத்தில் அதைக் காட்டிக் கொள்ள விரும்ப வில்லையோ! காட்டிக் கொள்ளாவிட்டாலும் பரவாயில்லை....கடவுளே, அவர் என்னை இன்னார் என்று கண்டு கொண்டிருந்தாலே போதும்.

சோமையா தனது காதலியைக் கண்டு பிடித்திருப்பாரா? வாழ்க்கையில் செற்றில் ஆகி இருப்பாரா என்றெல்லாம் எண்ணியவாறு நடந்து கொண்டிருந்தேன். என் மனைவியையும் பிள்ளையையும் காண்பதற்கு முதலில் கிடைத்த பெரிய ஆசீர்வாதம் போல அவரது வாழ்த்துக்கள் நெஞ்சை நிறைத்திருந்தது.

(மல்லிகை 1999)

❑

# புரியாதது

அலுவலகத்திலிருந்து வரும்போது பொழுது பட்டிருந்தது. புவனா ஜன்னலடியில் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். ஃபிளாட்டின் இரண்டாவது மாடியில் வீடு. அங்கிருந்து வீதியைப் பார்ப்பதற்கு வசதியாகவே ஜன்னல் அமைந் திருந்தது. வீடுகளை டிசைன் பண்ணுகிறவர்கள் பரந்த அறிவு படைத்தவர்கள் என்பதற்கு இதுவே நல்ல சான்று.

நான் படியேறி வாசலுக்கு வர, புவனா கதவைத் திறந்தாள். புவனா என் மனைவிதான். புவனேஸ்வரி என்பது இயற்பெயர். ஆனால் அவளுக்குப் பெயர் இட்ட பெற்றோர் முதற் கொண்டு எல்லோருமே புவனேஸ் என்றுதான் அழைப்பார்களாம். மற்றவர்கள் செய்யும் தவறையே நானும் செய்ய விரும்பாது (திருமணமான போது) புவனா எனச் சுருக்கினேன். மன்னிக்க வேண்டும்.....இது என் மனைவியைப் பற்றிய கதையல்ல என்பதை முதலில் உறுதி செய்கிறேன். எனக்கே போரடிக்கிற விஷயத்தை உங்களுக்கு சொல்லிக் கொண்டிருக்கு மளவுக்கு நான் மோசமான ஆளல்ல.

"கனகசுந்தரம் வந்தவர்"

கனகசுந்தரம் எனக்கு அப்படியொன்றும் முக்கியமானவரல்ல. எனினும் வந்ததும் வராததுமாகச் சொல்வதால் ஏதோ முக்கியத்துவம் இருக்கக்கூடும்

"கனகசுந்தரம் பார்த்துக் கொண்டிருந்திட்டு இப்பதான் போறார்!" அவர் காத்துக் கொண்டிருந்ததற்கு அல்லது காக்க வைக்கப்பட்டதற்கு எனது சுணக்கம்தான் காரணம் என புவனா குறைப்படுகிறாளோ எனத் தோன்றியது.

"இருங்கோ....வந்திடுவார் என்று சொன்னனான்...நாளைக்கு வாறன் என்று சொல்லியிட்டுப் போட்டார்."

"ஏனாம்?"

"கை மாற்றாய் ..... காசு பத்தாயிரம் கேட்டவர்!"

எனக்குத் "திக்" என ஒரு அடி அடித்தது. அதிர்ச்சியை வெளிக்காட்டாது எழுந்து அறையுட் சென்று உடையை மாற்றினேன். புவனா, துவாயை எடுத்துத் தர பாத்ரூமுக்குள் நுழைந்தேன்.

கிடைக்கும் சம்பளத்தில் அன்றாடப் பாடுகளைப் பார்ப்பதே பெரும்பாடு. மாதாந்தச்

சம்பள த்தை எதிர்பார்த்து வாழ்க்கை நடத்தும் என் போன்ற அரச ஊழியனுக்கு வேறு கதி இல்லை. துண்டு விழும் தொகை இல்லாமலே சம்பளத்தை எடுத்துச் சரிக்கட்டக் கூடிய நிலை என்றாவது வருமா என்றெல்லாம் எண்ணுவ துண்டு. இந்நிலையில் இப்படி ஏதாவது பணத் தேவை ஏற்பட்டால் முழுசாட்டம் தொடங்கி விடும். கஷ்ட நஷ்டப்பட்ட நேரங்களில் ஒருவருக்கொருவர் உதவி கேட்பதும் உதவி செய்வதும் சாதாரண விஷயம்தான். ஆனால் இல்லாதபோது என்ன செய்வது.

கனகசுந்தரம் நீண்டகாலமாகவே கொழும்பில் உத்தியோகம் பார்ப்பவர். குடும்பம் யாழ்ப்பாணத் திலிருந்தது. யுத்த நிலைமைகளாலும் போக்குவரத்துக் கஷ்டங்களாலும் இரண்டு வருடங்களுக்கு மேலாக ஊருக்கே போகாமலி ருந்தார். காணும் போதெல்லாம் சொல்லி வருத்தப்படுவார். போய் வருவதற்கு போதுமான லீவு தாறாங்களில்லை என மேலதிகாரிகள் மீது பழியைப் போடுவார். போக்குவரத்துக்கே எவ்வளவு செலவு பிடிக்கும் ....அதை அனுப்பி விட்டால் வீட்டுச் செலவு களுக்கு உதவும் என சமாதானமும் சொல்லிக் கொள்வார். கொழும்புக்கே குடும்பத்தை கூட்டி வந்து விடலாமென்றால் முடியாமலிருக்கிறது என நடைமுறைக் கஷ்டங்களைக் குறிப்பிடுவார். பொருளாதார காரணங்களால் அவருக்கு லீவில்

போய் வர முடியவில்லை. குடும்பத்தை கொழும்புக்குக் கொண்டு வந்து சேர்க்கவும் தயங்கிக் கொண்டிருந்தார். கடைசியாக யாழ்ப்பாணம் இன்னும் மோசமாக, குடும்பம் கொழும்புக்கு வந்து சேர்ந்து விட்டது என்பதை அண்மையில் அறிந்தோம். அதையொட்டித்தான் அவருக்கு பணநெருக்கடி ஏற்பட்டிருக்கக் கூடும்.

கனகசுந்தரம் ஒரு போதும் பணத் தேவைக்காக இப்படி வீடு தேடி வந்தவரல்ல. புவனாவின் வழியில் உறவுக்காரரானாலும் அது வெகு தூரத்தில்! அவ்வளவு நெருக்கமான கொண்டாட்டம் இல்லை. ஒருவித கௌரவப் பிரச்சினை கருதி அவர் கடன்படுவது போன்ற தேவைகளை எங்களிடத்தில் தவிர்த்திருக்கலாம். இப்போது வேறு ஒரு வழியுமின்றியே வந்திருப்பார். இந்நிலையில் அவருக்கு எப்படியாவது உதவி செய்ய வேண்டுமெனத் தோன்றியது. சம்பள நாட்களிலெனில் கையிலிருப்பதை மாறிக் கொடுக்கலாம். தேவையெனின் றோலடிக்கலாம். இப்போது எங்கு போவது?

இரண்டொரு நண்பர்களைச் சென்று பார்த்துக் கேட்டு வரலாம் என்று தோன்றியது. யார் யாரைப் பிடிக்கலாம் எனக் கணக்குப் போட்டவாறு கிளம்பினேன்.

முதலில் தேடிப் போனது விக்னேஷிடம். உத்தியோகத்துடன் சைட் பிஸினசும்

செய்கிறவன். கையில் காசு பிழங்கக் கூடிய ஆள்... ஆனால், அவன் வீட்டில் இல்லை. மனைவியுடன் ஏதோ பார்ட்டிக்குப் போயிருக்கிறானாம். வர லேட் ஆகுமென பிள்ளைகளிடமிருந்து பதில் கிடைத்தது.

பின்னர் பரமசிவத்திடம் சென்றேன்.

"வாங்கோ...வாங்கோ என்ன இந்த நேரம்...?"

"சும்மா தான்!... பாத்திட்டு போகலாமெண்டு...!" என எதையாவது சொல்லிச் சிரித்தேன். அந்த ஹாஸ்யத்தில் அல்லது எனது சிரிப்புக்கு மதிப்பளிக்கு முகமாக அவர்களும் சிரித்தார்கள். அது ஹாஸ்யம் அல்லாமல் வேறு என்ன? நேரம் கெட்ட நேரத்தில் வருகிறார். (கழுத்தறுக்க!) பிறகு சும்மாவாம் சும்மா!

பரமசிவத்தின் மனைவி அவசர அவசரமாக குசினிக்குள் நுழைந்தார்.

"வேண்டாம்....ரீ போட வேண்டாம்...!" எனக் குசினிக்குள் குரல் கொடுத்தேன். எனினும் அலைச்சலப்பட்டு வந்ததில் ஒரு தேநீர் அருந்தினால் நன்றாயிருக்கும் போலிருந்தது உண்மை.

பரமசிவம் மிகுந்த பொறுமைசாலி. வந்ததுமே எப்படிக் கேட்பது என்று புரியாமல் சுற்றி வளைத்து

தேவையில்லாத விஷயங்களையெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறேன். அவரும் சுவாரஸ்யமாக (அல்லது அப்படி பாவனை செய்து) கேட்டுக் கொண்டிருக்கிறார். மேலும் அவரது பொறுமை யைச் சோதிப்பது அழகல்ல என எண்ணிக் கொண்டு வந்த காரணத்தைச் சொன்னேன்.

அதைக் கேட்ட அவர் கவலையடைந்தார். அவரிடம் பணம் இல்லை.

"அப்ப நான் வாறன்!".... என எழுந்தேன்.

"என்ன ரீயும் குடிக்காமல் போறீங்கள்?...."

"இல்ல ..... வேண்டாம்... இனிப் போய்த்தான் சாப்பிட வேணும்!"

நான் வெளிக்கிட, "இஞ்சை போட்டிட்டன்!" என அவரது மனைவியின் குரல் குசினியிலிருந்து கேட்டது. தேநீரை குடித்து விட்டுப் போகலாமே எனத் திருப்பவும் அமர்ந்தேன்.

மிஸிஸ் பரமசிவம் சொன்னது சரி...! தேநீருடன் கோப்பையைப் போட்ட சத்தம் கேட்டது. அவசரப்பட்டிருக்கக் கூடும். பரமசிவம் எழுந்து குசினிக்குள் ஓடினார். தேநீர் சூடு மனைவியின் கையையோ காலையோ பதம் பார்த்து விட்டதாம். (நல்ல வேளை எனது வாய் பதம் பார்க்கப்படாமல் தப்பித்துக் கொண்டது.) அநுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டு வெளியேறினேன்.

வீட்டுக்கு வந்து சாப்பாட்டு மேஜையில் அமர்ந்த போது எனது மனம் ஒரு நிலையில் இல்லாதிருந்தது. இனி யார் யாரைப் பார்க்கலாம்.?...... அவர்களை எப்படி வளைத்துப் பிடிக்கலாம்?....எந்த நேரத்தில் சந்திக்க வசதியாயிருக்கும்...? நாளைக்கு ஒ.ஃ.பீசுக்கு லீவ் போடலாமா?......

சாப்பிட்டுக் கொண்டிருந்த போது விசித்திரா இன்னொரு அடி போட்டாள். விசித்திரா எனது இரண்டாவது மகள். (பயப்பட வேண்டாம். இந்தப் பெயரைப் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புக்கள் இங்கு இடம் பெறாது.)

"அப்பா!... எனக்கு நாளைக்கு ஐந்நூறு ரூபா வேணும்.....ரீயூஷன் ஃபீஸ் கொடுக்க!..."

நான் மௌனமாயிருந்தேன். மௌனம் சம்மதத்துக்கு அறிகுறியா இல்லையா என அவளுக்குப் புரியவில்லை. (ஏன், எனக்கே புரியவில்லையே!)

"என்னப்பா.....நான் கேட்கிறன்..... நீங்கள் பேசாமலிருக்கிறீங்கள்?"

"பேசாமல் சாப்பிடு!.... அப்பாவைக் கரைச்சல் படுத்தாதை!" புவனா மகளை அதட்டினாள்.

"சரி அம்மா!...." இது விசித்திரா அல்ல. இது போன்ற பக்குவமான பதிலெல்லாம்

அவளிடத்தில் எதிர்பார்க்கக் கூடாது என்பது இந்த வீட்டில் எழுதப்படாத விதி. சரி அம்மா பணம் தரலாம் என்பது போல அர்த்தப்பட என்னால் விசித்திராவுக்கு சொல்லப்பட்ட பதில் அது.

காலை.

விடியாமலிருக்கலாம். ஆனாலும் விடிந்து விடுகிறது. யாருக்கு என்ன பிரச்சினை இருந்தா லென்ன அவர்கள் என்ன பாடு பட்டாலென்ன என்ற கருணை இல்லாமல் விடிந்து விடுகிறது. இரவு உறக்கம் கெட்டால் அதிகாலையில் இன்னும் படுக்கையில் கிடக்க வேண்டும் போலிருக்கும். ஆனால் மனைவி குசினி அலுவல்களில் ஈடுபடத் தொடங்கி விட்ட சத்தங்கள் ஏற்கனவே அலாரம் அடிக்கத் தொடங்கியிருக்கும். பாத்றூமில் பிள்ளைகள் தண்ணீரைச் செலவு செய்கிற சத்தங்கள் எழுப்பிவிடும்.

அலுவலகத்துக்குப் புறப்பட ஆயத்தமான போது புவனா கேட்டாள். "கனகர் வந்தால் என்ன சொல்லுறது.?" அதே கேள்வியைத் தான் விடிந்ததிலிருந்து எனக்குள்ளும் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

"கைவசம் இல்ல. . . . ஆரிட்டையாவது மாறி ரெண்டொரு நாளைக்குள்ள . . . தரலாமெண்டு சொல்லுங்கோ. . . !"

அலுவலகத்திலிருந்து சிலரிடம் ரெலிபோனில் விசாரித்தேன். சரிவரவில்லை. மாலையில்

ஓவர்டைம் வேலையையும் தியாகம் செய்துவிட்டு சுந்தரேசனையும் சண்முகநாதனையும் சென்று பார்த்தேன். யாரிடமும் கிடைக்கவில்லை.

வீட்டுக்கு சோர்வுடன் வந்தேன்.

"கனகர் வந்தவரோ?"

"வந்தவர்...அவரைப் பார்க்க பாவமாயிருக்கு என்ன அவசரமோ....!"

புவனா கவலைப்பட்டாள். எனக்கும் கவலையாகவே இருந்தது.

இரண்டு நாட்கள் அலைச்சல் பட்டும் பணம் கிடைக்கவில்லை. மூன்றாம் நாள் வேலைக்குப் புறப்பட்ட போது புவனா சொன்னாள்.

"பிள்ளையளின்ரை செயினை அடகு வைச்சிட்டுத் தேவையான காசை எடுத்துக் குடுத்தால் என்ன....?"

கேட்க நன்றாய்த்தானிருந்தது. தலையிலிருந்து ஒரு பாரம் இறங்குவது போல. ஆனால் எப்படி?...அடகு வைத்துப் பணம் எடுத்தால் திருப்பும் போது வட்டியும் சேர்த்துக் கட்ட வேண்டுமே?

"அதுக்கு என்ன செய்யிறது?...கனகருக்கு நிலைமையைச் சொல்லுவம்... அவருக்கு விளங்கும்." புவனா சமாதானப்படுத்தினாள்.

"சரி" என்றேன்.

புவனா அறைக்குள் போனாள்.அங்குதான் பிள்ளைகள் இருவரும் இருந்தார்கள்.

இக்கட்டான நேரங்களில் இது போன்ற "பெறுமதி"யான ஆலோசனைகள் கூறி கணவன்மாரைக் காத்தருளும் மனைவிமாரை நினைத்து நான் புளகாங்கிதமடைந்து கொண்டு நின்றேன்.

அறைக்குள் சத்தம் கேட்டது. சத்தம் என்றால் விசித்திராவிடமிருந்துதான் என்பதை ஊகித்துக் கொள்க.

"என்னம்மா இது?..கொஞ்ச நாள் கழுத்திலை போட்டிருக்கிறது. கொஞ்ச நாள் இல்லாமல் போறது ....ஃபிரண்ட்ஸ் எல்லாரும் கேட்கினம்... இது என்ன சொந்தமா...இரவலா என்று!... நான் தர மாட்டன் போங்கோ."

நான் போக ஆயத்தமானேன். கதவைத் திறந்து எதற்கும் முன்னெச்சரிக்கையாக ஒரு காலை வெளியே வைத்தேன். எனினும் ஒரு கண்ணால் அறைக்குள்ளும் நோட்டமிட்டேன்.

மூத்த மகள் நிலா பரிந்துரைப்பது கேட்டது.

"குடுங்கோ விசி.... அப்பா பாவம் தானே!"

அந்த வார்த்தை ஓரளவுக்கு நம்பிக்கை யளித்தது.

"என்ன...எனக்குத் தெரியாதா?..இது அப்பாவுக்கில்லை. ஆருக்கோ குடுக்கிறதுக்கு ஓடித்திரியிறார்.!"

புவனா விசித்திராவுடன் சமாதான பேச்சு வார்த்தையில் ஈடுபடத் தொடங்கினாள். "ஆருக்கோ இல்லையம்மா....கனகசுந்தரம் அங்கிளுக்கு...அவரும் பாவம் தானே?"

"எங்களுக்கே வழியைக் காணயில்லை... மற்றவையளுக்காக ஏன் கவலைப்படுறீங்கள்?"

உள்ளே போன மனைவி உருப்படியாகத் திரும்பி வரவேண்டும் என்ற கவலை என்னைத் தொட்டது. ஆனால், ஆச்சரியப்படும் படியாக விசித்திராவின் சத்தம் தணிந்து வந்தது. பிள்ளை மனம் இளகி விட்டாள். புவனா அறையிலிருந்து வெற்றிப் புன்னகையுடன் வெளிப்பட்டாள்.

"நகை நட்டென்று இருந்தால் இப்பிடியொரு அவசரத்துக்கு உதவுறதுக்குத்தானே..அதுகளுக்கு விளங்காது, கொண்டு போங்கோ!" என் கையில் நகையை வைத்தாள். நிலைமையைச் சமாளித்த மனைவி அவளது கைங்கரியத்தை எண்ணி நன்றி பெருகியது. அன்றைய நாளின் இனிய ஆரம்பத்தை எண்ணிய வாறு நடை போட்டேன்.

கனகசுந்தரத்துடன் அலுவலகத்துக்கு ரெலிபோனில் தொடர்பு கொண்டு ஈவினிங் வந்தால் பணம் ரெடியாயிருக்கும் எனக் கூறினேன்.

மாலையில் ஒரு பிஸ்கட் பக்கட்டுடன் வீட்டுக்கு வந்தார். "பிள்ளையள் உள்ள இடம் ...நெடுக வெறுங்கையோடை வரக் கூடாது...!" விசித்திராவைப் பார்த்து, "இந்தாம்மா!" என நீட்டினார்.

நான் பயந்தேன். இது யார் எவர் என்று பாராது பாயக் கூடிய சாமான். ஏற்கனவே தனது செயின் அவருக்காக அடகு வைக்கப் பட்ட கோபத்திலிருக்கிறது. அதை அவரிடம் காட்டி விடுமோ என அஞ்சினேன்.

ஆனால் விசித்திரா அடக்க ஒடுக்கமாக வந்து பிஸ்கட்டை அவரிடம் பெற்றுக் கொண்டு "தாங்யூ அங்கிள்" என்றாள். வெளியே மழை பெய்யத் தொடங்கியது.

புவனா கனகசுந்தரத்திடம் பணத்தைக் கொடுத்தாள். கொடுக்கும் போது, பணம் வட்டிக்கு எடுக்கப்பட்டதென்ற விஷயத்தை சற்றுத் தயக்கத்துடனே தெரியப்படுத்தினாள்.

"என்னால....உங்களுக்கு வீண் சிரமம்...!" எனக் கனகசுந்தரம் கவலைப்பட்டார். "தாங்ஸ்" சொல்லிப் புறப்பட்டார்.

பிறகு வெகு நாட்களாகக் கனகசுந்தரத்தைக் காணக்கிடைக்கவில்லை. அவர்கள் வீட்டுக்கு விசிட் பண்ண வேண்டுமென புவனா சொல்லிக்

கொண்டிருந்தாள். புதிதாக குடிவந்திருக்கி றார்கள். போனால் சந்தோஷப்படுவார்களாம். ஆனால் பொழுது விடிந்தால் இருளுவது தெரியாமல் ஏதாவது ஒரு அலுவல் இருந்து கொண்டிருக்கும். ஞாயிறுகளில் என்றால் புவனா இன்னும் சில வேலைகளைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டிருப்பாள். அதனால் அவ்வெண்ணம் கைகூடாமலிருந்தது.

"நீங்களென்றாலும் ஒ.ஃ.பீசால வரயிக்கை அப்படியே...போயிட்டு வரலாம் தானே....?" எனப் புவனா அபிப்பிராயம் தெரிவித்தாள். அதற்கிணங்க ஒரு நாள் ஒ.ஃ.பீசிலிருந்து நேராக கனகசுந்தரம் வீட்டைத் தேடிச் சென்றேன்.

ஃபிளாட்டின் நாலாவது தட்டில் வீடு. படியில் மூச்சு வாங்க ஏறி கோலிங் பெல் ஸ்விச்சை பிரயோகித்தேன். பின்னர் கதவிலுள்ள கண் துளையூடு (உள்ளேயிருந்து வெளியே நிற்பவரைப் பார்க்கக்கூடியதாகத்) தோன்றிக் கொண்டு நின்றேன். எனது முகத்திலும் புன்னகையைத் தோற்றுவித்து, மலர்ந்த முகம் என்பார்களே...அது மாதிரி வைத்திருந்தேன். வந்திருப்பது பேயோ பிசாசோ என்ற பயம் உள்ளே இருப்பவர்களுக்கு ஏற்படாமல் கதவு திறப்பது பற்றிய முடிவை எடுப்பதற்கு இது உதவும் என நம்பினேன். ஆனால் அந்தப் பரீட்சையும் பயனளிக்காத தால்...இனிப் போகலாம் என நினைக்க, கதவு திறக்....

கதவுக்கும் வாசலுக்குமிடையில் கனகசுந்தரத்தின் மனைவி பூங்கோதை!

இப்படியொரு மனைவியை வைத்துக் கொண்டு எப்படி இந்த மனுசன் வருடக்கணக்காக லீவில் போகாமலிருந்தார் என்றதொரு பிரமிப்பு ஒரு கணம் என் மனதில் பட்டு மறையத்தான் செய்தது.

“அவர் வீட்டில....இல்லை....!”

கதவு முழுதாகத் திறக்கப்படாமல் கைகளால் பிடிக்கப்பட்டிருந்ததால்...“வரச் சுணங்குமோ? எத்தினை மணிக்கு வருவார்” போன்ற கேள்வி களைக் கேட்டு மினக்கெட்டவாறு மனசுக்குள் “பூங்கதவே தாள்திறவாய்.....” என்ற பாட்டைப் பராயணம் செய்தேன்.

அதுவும் பலனளிக்கவில்லை.

“அப்ப...நான் வந்தனான் என்று அவருக்கு சொல்லுங்கோ” என்றவாறு திரும்பினேன். கதவு திறக்கப்படாமலிருந்த காரணம் புரியாமலிருந்தது. யோசித்தேன்.... ஒரு வேளை என்னை இன்னார் எனத் தெரியவில்லையோ?.... ஒரு பொறி தட்டியது. வீட்டுக்கு இன்னும் கதிரை தளபாடங்கள் வாங்கிப் போடப்படாமலிருக்கலாம். திருமதியார் அதைக் காட்டிக் கொள்ள விரும்பவில்லை.

அப்போது நண்பன் மோகனசந்திரனின் நினைப்பு வந்தது. அவனிடம் சோ:பா

செற் ஒன்று விற்பனைக்குள்ளது. அவன் புதிய மொடலுக்கு மாறுவதால் பழையதை மலிவான விலைக்கு விற்கத் தயாராயிருந்தான். யாருக்காவது விற்றுத் தரும்படியும் சொல்லி யிருந்தான். அது பற்றிக் கனகசுந்தரத்துக்குச் சிபாரிசு செய்யலா மெனத் தோன்றியது. அடுத்த நாள் திரும்பவும் அவர் வீட்டுக்குப் போனேன். அதன் பின்னரும் இருமுறை போனேன். கனகசுந்தரத்தைச் சந்திக்க முடியவில்லை. ஒவ்வொரு முறையும் வாசலில் நின்றே திருமதியுடன் பேசிவிட்டு வரவேண்டியிருந்தது. "பூங்கதவு" என்ற பாடலிலும் நம்பிக்கையிழந்து விட்டிருந்தபடியால் அந்த உத்தியையும் கைவிட்டிருந்தேன். "நான் வந்தனான் என்று சொல்லுங்கோ. பிறகு வாறன்." எனச் சில வார்த்தைகளைச் சொல்லி விட்டுத் திரும்பி விடுவேன். வேறு எனனத்தைச் சொல்ல?

விற்பனைக்குள்ள அந்தச் சோஃபா பற்றிச் சொன்னாலென்ன? போகக் கிளப்பியவன் நின்று "நீங்கள் வீட்டுக்கு சோஃபா வாங்கியிட்டீங்களா?" எனக் கேட்டேன்.

"ஏன்"

"ஒரு பிரன்டிட்டை விற்க இருக்கு...நல்ல மலிவாய் எடுக்கலாம்."

"தேவையில்லை!" கதவு பூட்டப்பட்டது. முகத்தைத் தடவிக் கொண்டு நடையைக் கட்டினேன்.

அடுத்த முறை கனகசுந்தரம் வீட்டுக்குப் போக முன்னர் மோகன சந்திரனைத் தேடிச் சென்று சந்தித்தேன். சோஃபா செட்டை ஒரு நல்ல விலைக்குத் தீர்மானித்தேன். பணத்தை உடனடியாகக் கொடுக்கத் தேவையில்லாத ஒரு ஒழுங்கையும் செய்து கொண்டேன். தவணை முறையிலும் செலுத்தலாம். இந்தச் செய்தியுடன் மீண்டும் கனகசுந்தரம் வீட்டுக்குப் போனேன்.

நல்ல காலம், கனகசுந்தரம் அன்றைக்கு நின்றார். கதவைத் திறந்து அவர் வரவேற்க எங்கே அமரப் போகிறேனோ என்ற தயக்கத்துடன் உள்ளே நுழைந்தேன். அட, அங்கே ஏற்கனவே ஒரு சோபா செட் போடப்பட்டிருந்தது.

“எப்ப வாங்கினனீங்கள்...?” எனக் கேட்டவாறே அதில் அமர்ந்தேன். முன்னரே வாங்கப் பட்டது எனப் பதில் வந்தது.

வீட்டு வாடகை இவ்வளவு, பிள்ளைகளுக்கு ஸ்கூல் அட்மிசனுக்கு இவ்வளவு கொடுத்தது, வீட்டுக்கு அட்வான்ஸ் இவ்வளவு கொடுத்தது போன்ற விடயங்களையே கனகசுந்தரம் சொல்லிச் சொல்லி மாய்ந்து கொண்டிருந்தார். விடை பெற்ற போது வழியனுப்ப வாசல் வரை வந்தார்.

“நீங்கள் தேடித் தேடி வந்தனீங்கள் என்று மிஸிஸ் சொன்னவ...குறை நினைக்க வேண்டாம். உங்கட காசு கெதி பண்ணித் தந்திடுவன்.” எனக்

கூறிவிட்டு முகத்தைக் குனிந்து கொண்டு நின்றார்.

எனக்குக் கவலை ஏற்பட்டது. நான் வீட்டுக்கு வந்து வந்து போனது கடன் காசுக்காகத்தான் என நினைத்திருக்கிறார்கள். இது அவர்களுடைய தவறா அல்லது என்னுடைய தவறா என்றும் புரியவில்லை. இனி இங்கு வந்து அவர்களை குழப்பக் கூடாது என எண்ணிக் கொண்டேன். வசதிப்பட்ட போது அவர்கள் பணத்தைத் தந்த பிறகு வரலாம்.

ஒரு மாதம் கழிந்திருக்கும். ஒரு நாள் எதிர்பாராத விதமாகக் கனகசுந்தரம் பணத்தைக் கொண்டு வந்து தந்தார். எங்களுக்குப் பணம் தருவதற்காக வேறு யாரிடமாவது கடன் பட்டிருப்பாரோ எனக் கவலையாயிருந்தது.

"இதுக்கு இப்ப என்ன அவசரமென்டு கொண்டு வந்தனீங்கள்?"

"வட்டிக் காசும் வீணாய் ஏறிக் கொண்டிருக்கு அதையும் யோசிக்கத்தானே வேணும்.?" என்றார்.

"அதுவும் சரிதான்."

இதன் பின்னர் நாலைந்து மாதங்கள் கடந்திருக்கும். மீண்டும் கனகசுந்தரத்துக்குப் பண நெருக்கடி. அவருக்குப் பண நெருக்கடியென்றால் எனக்குக் காய்ச்சல் பிடிக்குமளவுக்கு ஏற்கனவே பட்ட அலைச்சல் மனதில் பதிந்திருந்தது.

"அவசரமாய் பத்தாயிரம் ரூபாய் தேவையா யிருக்கு... ஆரிட்டையாவது மாறித்தரேலுமே?"

"பாப்பம்" என்றேன். அவர் போய் விட்டார். எங்கே பார்ப்பது என்று புரியாமல் தலை சுற்றத் தொடங்கியது.

வாரோட்டத்தைத் தொடங்கினேன். அவரைப் பிடித்து இவரைப் பிடித்து என இரண்டு மூன்று நாட்களாக அலைந்தும் ஓரிடமும் பணம் கிடைக்கவில்லை. நகையை அடகு வைத்துப் பணம் எடுக்கும் எண்ணத்தை இரு காரணங்களுக்காக விரும்பாமலிருந்தேன். ஒன்று செயினைக் கேட்கப் போக, அதனால் என்ன குழப்பங்கள் நடக்குமோ என விசித்திரா பற்றிய பயம் மனதிலிருந்தது. இரண்டாவது, கனகசுந்தரம் கணத்தைத் திருப்பிய போது வட்டி கட்டுவதைப் பற்றி கவலைப்பட்டதை நினைத்துக் கொண்டேன். வட்டியின்றி யாரிடமாவது றோலடித்துக் கொடுத்தால் அவருக்கு உதவியாயிருக்கும்.

விக்னேஷ் சில நாட்களாகப் பிடிபடாமல் இருந்தான். அவனைத் தேடிப் போனேன்.

கேட்ட போது அவன் வழக்கத்துக்கு மாறாக "ஏன் உங்களுக்கு காசு? இப்ப என்ன அவசரத் தேவை?" எனக் கேள்வி மேல் கேள்வி கேட்டான்.

"எனக்கொரு தேவை. அதையேன் உனக்கு? இருந்தால் தா!" என மழுப்பலாகப் பதில் சொல்லிக் கொண்டிருந்தேன்.

"சொல்லுங்கோ நான் ஒருத்தருக்கும் சொல்ல மாட்டன்.!" விக்னேஷ் வற்புறுத்திக் கொண்டிருந் தான். சொல்லாவிட்டால் தரமாட்டான் போலிருந்தது. சொன்னால் தரக்கூடும் போலவும் அவன் பேச்சுத் தோன்றியது. சொன்னேன்.

அவன் சிரித்தான்.

"கனகர் ஆட்கள் போன கிழமை எங்கட வீட்டுக்கு வந்தவை. அவர் என்னட்டையும் காசு கேட்டவர். இருந்தால் குடுக்கலாம். இல்லை என்று சொன்னன். அதுக்குப் பிறகுதான் உங்களிட்டை வந்திருப்பார்.." இனி இங்கு நின்று பயனில்லை என்று தெரிந்து விக்னேஷிடமிருந்து புறப்பட ஆயத்தமாக, "ஒரு விஷயம்!" என்றான். நின்றேன். சிரித்துக் கொண்டே கேட்டான்.

"என்ன எங்களிட்டைக் காசு மாறி..... வட்டிக்குக் குடுத்து உழைக்கிறீங்களோ?"

எனக்கு சுருக்கெனத் தைத்தது. விக்னேஷ் மேற் கொண்டு சொன்னான். "கனகசுந்தரம் ஆட்கள் உங்களைப் பற்றி குறை சொல்லுகினம்."

எனக்குள் கேள்வி "என்ன?"

"அவசரத்துக்குக் காசு கைமாற்றாய் கேட்டால்... இல்லை யென்றிட்டு.......... பிறகு வட்டிக்கு எடுத்தது என்று சொல்லி குடுக்கிறீங்களாம்."

அதிர்ச்சியாயிருந்தது.

"விக்னேஷ் இதை நீ நம்புறியா?"

"நம்புறதும் நம்பாததும் ஒரு பக்கம் இருக் கட்டும். நீங்கள் ஏன் தேவையில்லாத வேலைக்குப் போறீங்கள்.?...இருந்தால் குடுங்கோ. இல்லையென்றால் இல்லையென்று சொல்லியிட்டுப் போங்கோவன்.!"

நான் உடைந்து போனேன்.

வீட்டுக்கு வர, புவனா கேட்டாள்.

"காசு கிடைச்சுதா? கனகர் வந்து இவ்வளவு நேரமும் பார்த்துக் கொண்டிருந்திட்டுப் போறார்."

"இல்லை"

அதிகம் பேச முடியவில்லை.

"அதுக்கேன் கவலைப்படுறீங்கள்?..வட்டிக் கெண்டாலும் எடுத்துத் தரச் சொன்னவர் தானே..? பிள்ளையின்ரை செயினை வைத்து எடுத்துக் குடுப்பம்."

ஒரு வித சீற்றம் உச்சிக்கு ஏறியது.

"அந்த வேலையெல்லாம் வேண்டாம் எங்களிட்டை இருந்தால் குடுக்கலாம்! இல்லை யென்றால் இல்லைத்தான்!"

புவனா நடுங்கிப் போனாள். பேச்சற்றவளாய் நின்றாள். அவளைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது. ஏதோ ஒரு வகையில் உறவினர்கள் என்ற காரணத்தாலோ என்னவோ புவனா அவர்கள் மேல் கொண்டிருக்கும் வஞ்சகமற்ற அன்பை நினைத்துப் பார்த்தேன். சற்று நேரம் கண்களை மூடி நிதானித்தேன். விக்னேஷ் சொன்ன கதையை மனதிலிருந்து அழித்தேன்.

"சரி புவனா நகையை வைச்சு காசெடுத்துக் குடுப்பம். ஆனால் காசு வட்டிக்கு எடுத்ததென்று அவையளுக்கு சொல்ல வேண்டாம். திருப்பயிக்கை....நாங்கள் வட்டியை போட்டுக் கட்டுவம்."

புவனா ஒரு கேள்விக் குறியாக என்னைப் பார்த்தாள். அவளுக்குப் புரியவில்லை. புரியாமலே இருக்கட்டும் என எண்ணிக் கொண்டேன்.

(மல்லிகை 1998)

❑

# வேரும் விழுதுகளும்

புது வருடப் பிறப்புக்கு நாட்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன என்பது அவருக்குப் பயமாயிருந்தது. இன்னும் மூன்று கிழமைகளே இருக்கும் நிலையில் நாட்கள் ஒவ்வொன்றாகக் கடந்து போகப் போகப் பயம் அதிகரித்துக் கொண்டிருந்தது. எப்படிச் சமாளிக்கப் போகிறேனோ என்ற முளுசாட்டம். பிள்ளைகளுக்கு புத்தாடை, உடுதுணிகள் வாங்க வேண்டும். ஐந்து பேருக்கும் வாங்குவதானால் எவ்வளவு தேவைப்படும்? அதற்கு எங்கே போவது?

போன வருடத்தைப்போல இந்த வருடமும் கடத்தி விட முடியாது போலிருந்தது. மூத்த மகன் பிரகாஷ் ஏற்கனவே அவருக்குச் சொல்லி வைத்து விட்டான்.

"அப்பா....! எனக்கு இந்த முறை வருடப் பிறப்புக்கு நீல சேர்ட் வாங்கித் தாங்கோ....! ஸ்கூலுக்கும் போடக்கூடியதாய் இருக்கும்!"

வருடப் பிறப்பு என்பது ஒரு சாட்டுத்தான். பிள்ளைகளுக்கு ஸ்கூலுக்குப் போடுவதற்கு உடை தேவைப்படுகிறது. மனைவி சரசுகூட அவருக்கு அவ்வப்போது சொல்லுவதுண்டு.

"ஒரு ஆமான உடுப்பில்லாமல் அதுகள் எப்படி ஸ்கூலுக்குப் போறது?"

அவர் அப்போது மனைவியைச் சினந்து பேசுவார்.

"என்ன சரசு?..... நிலைமை விளங்காத மாதிரி கதைக்கிறீர்...என்னை என்ன செய்யச் சொல்லுநீர்?"

அவளுக்கு நிலமை தெரியும் என்பது அவருக்குத் தெரியும். ஆனால் அவளும் தான் என்ன செய்வது? வேறு யாருக்குப் போய் முறையிடுவது? எனினும் அப்படிச் சத்தம் போட்டால் அவள் திரும்பவும் அந்தக் கதையை எடுக்க மாட்டாள்.

உள்ளது இரண்டு சோடி உடுப்புகள்தான். பாடசாலையால் பிள்ளைகள் வந்ததும் அதைத் தோய்த்துலர்த்தி அடுத்த நாளுக்காக ரெடி பண்ணி வைத்து விடுவாள். உடைகளில் கிழிசல்களுக்குத் தையல் போட்டே அவளுக்கு அலுத்துப் போயிற்று.

அவரது மகள் மீரா இரண்டு நாளுக்கு முன்னர் தான்:

"அப்பா! பார்த்தீங்களா....கிழிஞ்சு போயிருக்கு!.... பிள்ளையள் எல்லாம் பகிடி பண்ணுதுகள்... இது என்ன போஸ்ட் ஒபிஸா....என்று!"

மீரா சட்டைக் கிழியலில் கைவிரலை விட்டு அவருக்குக் காட்டியபோது அது இன்னும் கொஞ்சம் "சர்ர்" எனக் கிழிந்தது.

"ஆ.... ஆ.... கவனமம்மா...கவனம்!" அவர் பதறிப் போனார்.

"பிள்ளைக்கு இந்தச் சட்டையை தைத்துக் குடும்!"

மனைவிக்கு உத்தரவு போட்டார்.

"அப்பா வருடப்பிறப்புக்கு எனக்கு ரெண்டு யூனிபோம் தைப்பிச்சுத் தந்தீங்களென்டாலே போதும்!"

குமர்ப்பிள்ளை....ஒரு நல்ல உடுப்பில்லாமல் இந்த மாதிரிப் போய் வருகிறாளே என்ற கவலை அவரது மனதை வருத்தியது. ஆனால் என்ன செய்வதென்றுதான் புரியவில்லை.

யாழ்ப்பாணத்துக்கு எதிரான இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர வேண்டி வந்தபோது, எடுத்தது பாதி எடுக்காதது பாதியாக ஓடியது. திரும்ப வந்து பார்க்கையில்.... பறிபோயிருந்த பொருட்களுடன் உடுதுணிகளும் போய் விட்டன.

யாழ்ப்பாணத்துக்குள் ஆமி மூவ்பண்ணி வந்த போது சாவகச்சேரிப் பக்கம் போய்த்

தெரிந்த ஒருவரின் வீட்டில் ஒதுங்கினார். ஐந்து பிள்ளைகளுடனும் பல குடும்பங்கள் தங்கியிருந்த வீட்டில் படாத பாடு பட வேண்டியிருந்தது. பிறகு கிளாலிக்கூடாக கிளிநொச்சிப் பக்கம் பயணமாகி நண்பரொருவரின் காணியில் குடிசை (மாதிரி) ஒன்றை அமைத்துக் குடியேறினார்.

"சரியான மறைப்புமின்றிக் குமர்ப்பிள்ளையையும் வைச்சுக் கொண்டு....இது என்ன சீவியம்" என அவருக்குச் சினமாயிருந்தது. சாப்பாட்டுக்கும் ஒரு வழியுமில்லை. நிவாரணம் அது இது என ஒவ்வொரு தேவைக்கும் மற்றவனின் கையை எதிர்பார்த்து அலைந்து திரிவது என்ன வாழ்க்கை? ஏன் இப்படி ஓடித்திரிகிறோம்? உயிரைத் தக்க வைத்துக் கொள்வதற்கா? எப்படியாவது வாழ்ந்து முடிப்பதற்கா? அவரது மனம் குழம்பிப் போகும். அப்போது அவருக்குப் பிள்ளைகளின் நினைவு வரும் – இந்த இளம் பிள்ளைகளை வைத்துக் கொண்டு எத்தனை கொடுமைகளுக்குப் பயப்பட வேண்டியுள்ளது.

ஆமி மூவ் பண்ணி வருகிறது என்றதுமே அவர் நடுங்கிப் போனார். பிரகாஷையும் மீராவையும் நினைத்துத்தான் அந்தப் பயமெல்லாம். "இந்தப் பிள்ளைகள் அவங்களின் கையில் அகப்பட்டால், அதுகளின் வயசு காரணமாகவே ஒரு கேள்வி நியாயம் இருக்குமா? கடவுளே இந்தப் பிள்ளைகளுக்கு ஒன்றும் நேர்ந்திடக்கூடாது.

இதுகளை எங்காவது கொண்டு தப்பிப் போய் விட வேண்டும்."

கிளிநொச்சியிலிருந்த போது....பிள்ளைகள் ஒன்று மாறி ஒன்று காய்ச்சலில் விழுந்தன். மழை...குளிர்...நுளம்பு... மலேரியா! கடைக்குட்டிக்கு நிமோனியா வந்து மூச்செடுக்கவும் அவஸ்தைப் பட்டுக் கொண்டு கிடந்தான். மருந்து மாயங்கள் கூடச் சரியாக இல்லை.

பிள்ளைகள் பட்ட வேதனையை அவரால் தாங்க முடியவில்லை. எதையும் தாங்கிக் கொள்வார். பிள்ளைகளுக்கு ஒன்றென்றால் தாங்க மாட்டார். துடித்துப் போவார்.

யாழ்ப்பாணத்துக்கு ஆட்கள் திரும்பிப் போகிறார்களாம் என்ற கதைகள் அடிபட்டதும் "போய் விடலாமா" எனத் தனக்குள்ளே கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தார். முடிவெடுக்கும் தைரியம் இல்லாதிருந்தது.

"நடக்கிறது நடக்கட்டும்.....வீட்டுக்கே போயிடுவம் வாங்கோ!...இந்தப் பிள்ளைகள் இப்படிக் கிடந்து கஷ்டப்படுகிறதை என்னால் பார்த்துக் கொண்டிருக்கேலாது!" சரசு அழுதாள்.

மனைவியின் அழுகை அவரது நெஞ்சைத் தொட்டு உருக்கியது.

பிள்ளைகளும் நச்சரித்துக் கொண்டிருந்தார்கள்.

"அப்பா வாங்கோ...வீட்டுக்குப் போவம்!...எக்ஷாமும் வருகுது!...கஷ்டப்பட்டு படிச்சதெல்லாம் வீணாய்ப் போயிடும்!" பிரகாஷ் அடம் பிடித்துக் கொண்டிருந்தான்.

பிள்ளைகளின் கல்வி பாழாகிக் கொண்டிருக் கிறதே என்ற கவலை அவரை போட்டு மாய்த்துக் கொண்டிருந்தது. திரும்பவும் யாழ்ப்பாணம் போய் விடலாம் என முடிவெடுத்தார். ஆனால் திரும்பப் போவதை நினைக்கும் போதெல்லாம் நெஞ்சிடி தான். என்ன நடக்குமோ?

இராணுவச் சாவடிகளைத் தாண்டும் போதெல்லாம் அவருக்கு பிறசர் அதிகரிக்கும். பிரகாஷையும் மீராவையும் அவர் தன் கைகளுக் குள்ளேயே பொத்திப் பொத்திக் கொண்டு வந்தார். சில சோதனைச் சாவடிகளில் பிரகாஷையோ மீராவையோ தடுத்து விடுவார்கள். விசாரணையாம்! அவர் அந்த இடத்தை விட்டு நகர மாட்டார்.

"நீங்க அந்தப் பக்கத்துக்கு போங்க!" மிரட்டுவார்கள். அவர் போக மாட்டார்.

"அது என்ர பிள்ளை ஐயா! எப்படி விட்டுட்டுப் போறது? ஒரு சோலி சுறட்டுக்கும் போகாத பிள்ளை! உங்களை கையெடுத்துக் கும்பிட்டன் ....ஒண்டும் செய்யாமல் விட்டிடுங்கோ!" அவர்கள் முன்னிலையில் அழுதே விடுவார்.

பிள்ளைகளுக்காகக் கண்டவன் நிண்டவனை யெல்லாம் கையெடுத்துக் கும்பிட வேண்டியுள்ளது. இந்த பிள்ளைகளுக்காகத்தான் உயிரை வைத்துக் கொண்டிருக்க வேண்டும் போலிருக்கிறது. கடவுளே, நானும் இல்லையென்றால் இதுகளை யார் பார்ப்பார்கள்? இந்த யுத்தமும் பிரச்சினைகளும் எப்ப தீரும்? இதுகள் எப்ப நிம்மதியாக வாழும்? எப்போதும் அவருக்கு மனதுக்குள் இதுதான் பிரார்த்தனை.

தடைகளைத் தாண்டித் தாண்டி வந்து பார்த்தால்....வீடு இடிந்து போய் கூரை நிலத்தைத் தொட்டுக் கொண்டு கிடக்கிறது. வருகிற வழிகளிளெல்லாம் பல வீடுகள் இடியுண்டு, உடைந்து சிதறி, கூரை பிரிந்து...பல விதமான கோலங்களிற் கிடந்தன. அவற்றை யெல்லாம் பார்த்துப் பார்த்துப் பயந்து கொண்டே வந்தார்; "எங்கட வீட்டுக்கு என்ன கதியோ?"

சிறிய வீடுதான். இரண்டு சிறிய அறைகள். முன் விறாந்தை. ஒரு பக்கம் குசினி. அவரது தகுதிக்கேற்றபடி கட்டியிருந்தார். அதில் நிம்மதியாகப் படுத்தெழும்பினார். ஐந்து குஞ்சுகளையும் அந்த வீட்டிலேயே பெற்றெடுத்தார். இடம் பெயர்ந்து பல இடங்களிலிருந்த போதெல்லாம் இந்த வீடு அவருக்குக் கனவுகளில் வந்திருக்கிறது. காதலித்துக் கட்டிய மனைவியைக் கானகத்தில் கைவிட்டு வந்தது போன்ற சோகம்.

அந்தத் திண்ணையில் படுத்தெழும்பும் சுகம் தனக்கு வேறேதும் இல்லையென்றே நினைப்பார்.

சரசு கதறியே விட்டாள். "இதைப் பார்க்கவா இஞ்ச திரும்பி வந்தம்?" பிள்ளைகள் திகைத்துப் போய் நின்றார்கள். "அம்மா!... அழாதை யுங்கோ...!" எனச் சொல்லிச் சொல்லி மீராவும் விம்மலெடுத்து அழத் தொடங்கினாள். அவர் அசையவில்லை. இப்படி எத்தனையோ இழப்புக் களையும் இழப்புக்களிலிருந்து எழுச்சியையும் கண்ட மனத்தைரியம் வாய்க்கப்பெற்றவர் போல நின்றார்.

"ஏனம்மா?...ஏன் அழுறீங்கள்? இப்ப என்ன நடந்திட்டுது? யோசிச்சுப் பாருங்கோ... நாங்கள் போகாமலே இங்க இருந்திருந்தால் என்ன கதி? எங்கட தலையில விழவேண்டிய குண்டை எங்கட வீடு தாங்கி இருக்குது! அழாதையுங்கோ! வர்ற வழியெல்லாம் பார்த்தனீங்கள் தானே? எத்தனை சனங்களுக்கு எத்தனை விதமான இழப்புக்கள்! ...அழுது என்ன செய்யிறது?"

இடிபாடுகளை அள்ளி ஒரு பக்கம் போட்டார். பிள்ளைகளும் கைகொடுத்தார்கள். பொறிந்து போய்க் கிடந்த கூரையைக் கழற்றி எடுத்துச் செப்பனிட்டார். தெரிந்தவர்களிடம் வாங்கி வந்த தென்னங் கிடுகுகளால் வீட்டை வேய்ந்தார். "நாங்கள் வெட்ட வெட்டத் தழைப்போம்!" எனப் பிள்ளைகளுக்கு உற்சாகமூட்டினார்.

அவர் குடும்பத்துடன் திரும்பவும் யாழ்ப்பாணம் வந்து விட்ட செய்தியறிந்து மாணிக்கம் மாஸ்டர் பார்க்க வந்திருந்தார். மாணிக்கம் மாஸ்டர் முன்னர் ஸ்கூலில் அவருக்குப் படிப்பித்தவர். பிள்ளைகளுக்கும் வீட்டுக்கு வந்து பாடம் சொல்லிக் கொடுப்பதுண்டு.

"இஞ்ச...வராமல் வன்னிப்பக்கம் போயிடுவீங்களோ என்று கூட யோசிச்சன்.! இந்த வீட்டை எப்படிக் கோயிலைப் போல வைச்சிருந்தனீங்கள்! அது இடிஞ்சு கிடக்கிறதைப் பார்க்க எனக்கே பொறுக்கயில்லை. அடிக்கடி வந்து பார்த்து விட்டுப் போவன்.... வேற என்னத்தைச் செய்யிறது...இப்ப நீங்கள் வந்து சேர்ந்திட்டீங்கள் என்றதும் ஆறுதலாயிருக்கு!"

மாணிக்கம் மாஸ்டர் ஏதாவது பேச ஆரம்பித்தாலே கேட்டுக் கொண்டிருக்க வேண்டும் போலிருக்கும். குறுக்க பேச மனம் வராது.

"தமிழ்ச்சனங்கள் இந்த நாட்டில் எத்தனை விதமாய் வதைப்பட்டிட்டுதுகள்!... நாங்கள் இதையெல்லாம் பார்த்துப் பயந்திடக் கூடாது. சலித்துப் போகக் கூடாது. இந்த இடத்தை விட்டு ஒரேயடியாய் ஓடியிடக் கூடாது. இது எங்கட மண். எங்கட மூதாதையர் பரம்பரை பரம்பரையாய் வாழ்ந்த மண்"

மாணிக்கம் மாஸ்டர் சொல்வதைக் கேட்க மனசு தெம்படைவது போலுமிருந்தது.

ஆற்றாமையோ அல்லது காரணம் புரியாததொரு கவலையோ உள்ளே புகுந்து நெஞ்சையடைப்பது போலும் ஓர் உணர்வு.

"ஐம்பத்தெட்டில....எழுபத்தேழுல....எண்பத்து மூன்றில...எல்லாம் தெற்குப் பக்கமிருந்த தமிழ்ச் சனங்களுக்கு எவ்வளவு கொடுமைகள் நடந்திது?...பெண் பிரசுகளைக் கேவலப்படுத்தி .... உயிர்களைக் குடிச்சு.....தமிழருக்குச் சொந்தமான வீடு வாசல்கள்....வியாபாரத் தலங்கள்....பக்டரிகள் எல்லாம் கொழுத்தி எரிக்கப்பட்டது.....அப்ப, அடிச்சுக் கலைச்ச போது எங்கட சனங்களெல்லாம்...இஞ்சால ஓடி வந்ததுகள்...பாதுகாப்பா இருக்க வடக்கு, கிழக்குப் பகுதிகள் இருந்திச்சுது....

.....இப்ப என்ன நடக்குது? வடக்கு கிழக்கிலையும் எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை. எத்தனை நாட்கள் பதுங்கு குழிகளுக்குள்ள கிடந்தம்...எத்தனை உயிர்களைப் பறிகொடுத்திட்டம். சமாதானத்துக்கான யுத்தம் என்ற பேரிலே....இந்தப் பக்கம் இருக்கிற வீடு வாசல்கள்.....பொருளாதார வசதிகள் எல்லாம் அழிக்கப்படுகுது....யுத்தம் ஏற்படக்கூடிய நிலைமையை உருவாக்கினது ஆர்?....ஒரு உதாரணத்துக்குச் சொல்லுறன்....எங்கட பிள்ளையளின்ரை படிப்பில கையை வைச்சு முளையிலேயே கிள்ளி எறியலாம் என்று திட்டம் வகுத்தது ...ஆர்?"

பிரகாஷ் ஓ.எல். பரீட்சையில் எட்டும் "டி" எடுத்துச் சித்தியடைந்தான். அவர் பூரித்துப் போனார். திரும்ப யாழ்ப்பாணம் வந்தது நல்லதுக்குத்தான் என்றும் தோன்றியது. குப்பி விளக்கில் கண்கள் பூந்திப் பூந்திப் பார்த்து அவன் படிக்கும் போது அவர் ஏசியும் இருக்கிறார்.

"காணுமடா!...... இனிக் காணும் ....! போய்ப் படு!... இந்த மங்கல் வெளிச்சத்தில படிச்சால்.... கண் பழுதாய்ப் போயிடும்....!"

அவன் போய்ப் படுக்கமாட்டான். அவரும் அவன் படித்து முடித்துப் படுக்கப் போகும் வரை விழித்துக் கொண்டிருப்பார்.

இந்த டியூசனுக்குப் போக பேணும்.... அந்த டியூசனுக்குப் போக வேணும்....என்று பிரகாஷ் சொன்ன போதுகளில் சினந்து விழுந்திருக்கிறார்.

"பள்ளிக் கூடத்தில் ஒழுங்காய்ப் படிக்காதவங்களுக்குத்தான் டியூசன்! அங்க விளையாடித் திரிஞ்சால்.....ரியூசன் தேவை தான்!" என ஒரு நக்கல் போலச் சொல்லியிருக்கிறார்.

அவன் அதற்கு மறு கதை பேசாமல் தலையைக் குனிந்து கொண்டு போயிடுவான். ஆனால் ரியூசனுக்குத் தருவதற்கு அவரிடம் பணமில்லை என்று அவனுக்குத் தெரியும். ரியூசனுக்குப் போய் வரும் நண்பர்களின் வீடுகளுக்குப் போய்ப் போய்க் கேட்டுப்படிப்பான். அவன் படிக்கத்தான் போகின்றானா

அல்லது வேறு ஏதாவது இயக்க நடவடிக்கைளில் ஈடுபடுகிறானா என அவருக்குச் சந்தேகம் வந்ததும் உண்டு. அசுகை தெரியாமல் சில நாட்களில் பிறகால் போய்ப் பார்த்துமிருக்கிறார்.

படிப்பு, படிப்பு, என்று நடந்தே திரிவான். "அப்பா!...ஒரு சைக்கிள் இருந்தால் நல்லது... எவ்வளவு தூரம் நடக்கிறது?...... நடந்து நடந்து....இரவில படுக்கேலாமல்.... கால் உளையுது... சைக்கிள் ஒன்று வாங்கித் தாங்கோ!"

"அந்தக் காலத்தில நான் எப்படிப் பள்ளிக்குப் போய் வந்தவனென்று தெரியுமா? எவ்வளவு தூரம் நடந்து திரிஞ்சிருக்கிறன்!.. உங்களுக்கு இப்ப சொகுசு தேவைப்படுகுது....! கஷ்டப்பட்டுப் படிச்சால்தான் முன்னுக்கு வரலாம்!" என எதையாவது சம்பந்தமில்லாமலும், தன்னை ஒரு சாதனை வீரனைப் போலவும் குறிப்பிட்டு மகனது வாயை மூடிவிடுவார்.

தின்னவேலியிலிருந்து ஹின்டு கொலிச்சுக்கு நடந்தே போய் வருவது அவர் நினைவில் வரும். பலபலத்து விடியுமுன்னரே தோட்டத்துக்குத் தண்ணீர் இறைக்க வேண்டும். தம்பி தண்ணீர் கோல, அவர் துலா மிதிப்பார். ஐயா மர வள்ளிக்கும், மிளகாய் கன்றுகளுக்கும் தண்ணீர் கட்டுவார். பிறகு வெளிக்கிட்டு பள்ளிக் கூடத்துக்கு ஓட்டமும் நடையுமாகப் போனாலும்,

நேரம் கடந்து விடும். பிறேயர் தொடங்கி விடும். இப்போதுள்ள ஆமிக்காரரைப் போல அப்போது பள்ளிக் கூடத்தில் பிறி.'.பெக்ட்மார், லேட்டாக வருபவர்களையெல்லாம் வாசலில் தடுத்து வைத்திருப்பார்கள். பிறேயர் முடிந்து கேனுடன் வரும் பிறின்சிபலிடம் கை நீட்டி அடி வாங்க வேண்டும். "அம்மா!" என உறைக்கும். மாட்டை மேய்ப்பவர்களைப் போல ஏன் வாத்திமார் பிரம்பு வைத்திருக்கிறார்கள், என யோசித்திருக்கிறார். எத்தனை அடி அடித்தாலும் மாடு சுரணை இல்லாமல், ஆனால் தனது கடமையையும் செய்து கொண்டிருக்கிறது. அவரும் தவறாது தோட்டத்துக்குத் தண்ணீர் விட வேண்டும். தவறாது பாடசாலைக்கும் வருகிறார். தவறாது அடியும் விழும்.

"நாங்களெல்லாம் அப்ப...எவ்வளவு கஷ்டப்பட்டுப் படிச்சம்....இப்ப...உங்களுக்கு வசதிகள் கூடிப்போச்சுது...!" மகனுக்கு ஒரே போடாகப் போடுவார். பிரகாஷ் அதற்கு எதுவும் பேசாமல் போய் விடுவான்.

எல்லாம் பொருளாதாரப் பிரச்சினைதான். சீமெந்துத் தொழிற்சாலையில் போர்மனாக வேலை செய்தவர். யுத்தம் தொடங்கிய பிறகு தொழிற்சாலை இயங்காமல் போய் விட்டது. சில காலம் சம்பளமும் இல்லாமல் ஒன்றுமில்லாமல் இழுபறியாய் இருந்தது. பின்னர் ஏதோ ஒரு கொஞ்சம் கையிற் தரத் தொடங்கினார்கள்.

தொழிற்சாலை இயங்கிக் கொண்டிருந்த போதே ஓவர்டைம் வேலை செய்து கைநிறைய உழைத்தாலும் அப்படி இப்படித்தான் சமாளிக்கக் கூடியதாயிருந்தது. இப்போது இந்தப் பிச்சைக் காசை எடுத்து என்ன செய்வது? ஆனால் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் வந்ததே அந்தக் காசையும் நினைவிற் கொண்டுதான்.

இப்போது பிரகாஷ் சிறப்பாகப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பது அவருக்குப் பெருமையளித்தது. தனது கவலைகளையெல்லாம் ஆற்றிவிட்டது மாதிரி ஒரு உற்சாகமும் தோன்றியது.

"....என்ன பாடு பட்டும் என்ர பிள்ளையைப் படிப்பிச்சுப் போட வேணும்!" மனதில் ஒரு வைராக்கியம் போல நினைத்துக் கொண்டார். "நான் சாப்பிடாமல் கிடந்தாலும்... பரவாயில்லை... பிள்ளையைப் படிப்பிச்சுப் போட வேணும்!"

படிப்பித்து விட்டால்?..பிறகு?... அவருக்கு சற்றுக் குழப்பமாயிருந்தது. பிறகு அந்தக் குஞ்சு பறந்து போய்விடுமே...? இப்போது யாழ்ப்பாணத்திலிருந்து படித்தவர்கள் அநேகர் பறந்து போய் விட்டார்களே! படிப்பு ஒரு காரணமாயிருந்து தன் பிள்ளையைத் தன்னிடமிருந்து பிரித்து விடுமோ என்றும் அவருக்குக் கலக்கமாயிருந்தது. பிரகாஷ் தன்னை விட்டுப்

போய் விடுவானா? "அப்பா!... அப்பா...!" என்று ஒரு நாய்க் குட்டியைப் போல கால்களுக்குள் சுற்றி வரும் பிள்ளை ஒரு நாளைக்குத் தன்னைப் பிரிந்து போயே விடுவானா?

அவருக்குத் தனது தம்பியவர்களின் நினைவு வந்தது. அவர்களெல்லாம் படித்து ஆளாகியதும் பறந்து விட்டார்களே! ஆஸ்திரேலியா விற்கு ஒருவன், கனடாவுக்கு ஒருவன் என்று மைகிரேஷன் விசா கிடைத்துப் போய் விட்டார்கள்.

கொழும்பில் இன்னமும் இருக்கும் தம்பிகூட வெளிநாட்டில் இருப்பவன் போல இந்தப் பக்கம் வருவதுமில்லை. அவனும், ஆஸ்திரேலியாவுக்கு, கனடாவுக்கோ மைக்ரேஷன் விசாவுக்கு முயற சிப்பதாகவும், கிடைத்ததும் போய் விடுவேன் என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

போனவர்கள் இனித் திரும்ப வருவார்களா? எப்போது வருவார்கள்? அவர்களுக்குப் பெயர் சூட்டியது நினைவிருக்கிறது. அவர்களைத் தூக்கி விளையாடியது நினைவிருக்கிறது. அவர்கள் மேற்படிப்புக்கு வந்து யூனிவர்சிற்டி என்ரர் பண்ணிய போது சந்தோஷம் பொங்கியது நினைவிருக்கிறது. இப்போது அவர்களெல்லாம் கண்காணாத தேசங்களில்...எங்கோ ஒரு திக்கில்.

அப்போது அவரது தந்தையின் சம்பாத்தியம் அவர்களது படிப்புச் செலவுக்கு ஈடுகொடுக்கு மளவுக்குப் போதாது. அதனாற்தான் அவரும் படிப்பை இடைநடுவில் நிறுத்திக் கொண்டு சீமெண்ற பக்டரியில் வேலைக்குச் சேர்ந்திருந்தார்.

தம்பியவர்கள் பாஸாகியதும் "நீங்கள் படியுங்கோ!...செலவைப் பற்றி யோசிக்க வேண்டாம்!" என உற்சாகமூட்டினார். அவர்களை எப்படியாவது படிப்பித்து ஆளாக்கி விட வேண்டும் எனக் கனவு கண்டார். இராப்பகலாக ஓவர் டைம் வேலை செய்து உழைத்தார்.

தம்பியவர்களிடமிருந்து கடிதங்கள் வரும்...அவர்களது தேவைகளைக் குறிப்பிட்டு எழுதியிருப்பார்கள். "காசு கொஞ்சம் அனுப்பி வையுங்கோ!"

கொஞ்சமென்றால் எவ்வளவு? அது இரு நூறா? இரண்டாயிரமா? அவருக்குப் புரியாது ஆனால், தம்பியவர்கள் அந்தரித்துப் போய் விடக் கூடாதே என்று கவலையாயிருக்கும். தன் கையில் இல்லாவிட்டாலும், யாரிடமாவது மாறிவிடுவார். சில வேளைகளில் பணம் கைக்குக் கிடைக்கத் தாமதமாகி விடும். தபாலில் அனுப்பச் சுணங்கி விடுமோ என றெயினில் பயணமாகி நேரிலேயே கொடுத்து விட்டு வருவார். அப்படிப் போவதற்கு தம்பியவர்களை நேரிலே பார்த்த ஆறுதலும் ஏற்படும் என்பதும் ஒரு காரணம்.

சம்பளமெடுத்ததும் பட்ட கடனெல்லாம் அடைக்க வேண்டும். கை வெறுமையாகி விடும். அக்காவின் திருமணத்துக்குப் பட்ட கடன்... மற்றும் வீட்டுச் செலவுகள் என்று ஐயா ஏற்கனவே கடனாளியாகியிருந்தார். அதையும் ஈடுகட்ட வேண்டும். அக்கா திருமணம் முடித்துப் போய் விட்டாலும்... அவளுக்கும் அன்றாட கஷ்டங்கள், வசதிக் குறைவு இருந்தது. "வீட்டுக்குச் சொல்ல வேண்டாம்... ஏதாவது தந்து உதவி செய்.... தம்பி!" என அவளும் எழுதியிருப்பாள். இவற்றை யெல்லாம் சமாளித்துக் கொண்டு இனி வரும் மாதத்தையும் எதிர் கொள்ள வேண்டும்!

வேலைக்கு வந்தால்... மத்தியான சாப்பாட்டையும் தவிர்த்துக் கொள்ளப் பழகியிருந்தார். பக்டரிக்கு முன்னுள்ள கடையில் அவர், மற்றைய தொழிலாளர்களைப் போல "எக்கவுன்ட்" வைத்திருக்க மாட்டார். அது செலவு அதிகரிப்பதற்கு ஒரு வழி என்ற பயம் அவருக்கிருந்தது. நண்பர்களோடு போய் ரீ....சிகரட் (நண்பர்களுக்கு) அது இது என்று எடுத்துக் கொண்டு கொப்பியில் பதிந்து விட்டு வந்தால்....பின்னர் மாத முடிவில் முழிக்க வேண்டி வரும்.

கடையில் எக்கவுண்ட் இல்லை. கையில் காசுமில்லை. ஆனால் பசிக்கும். பல நாட்களில் பசியோடு எப்படியோ நேரத்தைக் கடத்தி விடுவார். ஆனால் பசி தாங்க முடியாத அளவுக்கு

அவரைப் பல தடவைகள் வாட்டியதுண்டு. கால்களில் ஒரு நடுக்கம் ஏற்படும். நடக்க முடியாமல் தடுமாறும். உடல் சோர்ந்து போகும்.

அது மணியண்ணனுக்குத் தெரிந்து விடும். மணியண்ணை அவரது செக்சனில் அவருக்குக் கீழே வேலை செய்த ஒரு மூத்த மெக்கானிக்.

"என்ன சேர்?..... முகம் வாடிக் கிடக்கு? சாப்பிடயில்லையா?"

அதற்கு அவர் சமாளிப்பாக ஏதாவது கூற முயலுவார். ஆனால் மணியண்ணை விடாப்பிடியாக கேட்டுக் கொண்டு இருப்பார்.

"சொல்லுங்கோ!... சாப்பிட்டனீங்களா.....? சாப்பிட்டனீங்களா?"

மணியண்ணையிடம் கடைசியாக சரணடைய வேண்டி வரும். தனது கஷ்ட நஷ்டங்களை அவர் அவ்வப்போது மணியண்ணையுடன் கதைத்துக் கொள்வதுண்டு. அவரது நிலைமையைத் தெரிந்து வைத்திருந்ததால் போலும், மணியண்ணைக்கு அவர்மேல் ஒருவித இரக்கம். கரிசனையும் இருந்தது. சில வேளைகளில் மணியண்ணை கேட்காமலே....தானாகச் சென்று வாய் விட்டுக் கேட்டிருக்கிறார்.

"மணியண்ணை.....பசிக்குது!... இனியும் தாக்குப்பிடிக்கேலாது...! என்ன செய்வம்?" ஒரு

பகிடிபோல இந்த விஷயத்தை மணியண்ணைக்குத் தெரிவித்தாலும் என்ன செய்வது என்பது மணியண்ணைக்குத் தெரியும். இரண்டு பேருமாக முன் கடைக்குப் போவார்கள். முன் கடையில் மணியண்ணைக்கு "எக்கவுண்ட்" இருந்தது. அங்கு அவர் பாணும் பருப்புக் கறியும் சாப்பிடுவார். அந்தக் கணக்குகளையெல்லாம் குறித்து வைத்து மாதம் முடிய சம்பளமெடுத்ததும் மணியண்ணையிடம் கொடுத்து விடுவார்.

தம்பியவர்கள் யுனிவர்சிட்டியில் பட்டமெடுத்ததும், தான் பட்ட கஷ்டமெல்லாம் வீண் போகவில்லை என்று சந்தோஷமாயிருந்தது. ஆனால்....அவர்களெல்லாம் இப்போது அவருடன் இல்லையே! அவர்களெல்லாம் இந்த மண்ணில் இல்லையே! ஒவ்வொருவராக ஆஸ்திரேலியாவுக்கும் கனடாவுக்கும் குடி பெயர்ந்த போது அவருக்குச் சந்தோஷமாக இருந்ததா? கவலையாக இருந்ததா? அவருக்குப் புரியவில்லை. "எங்கையாவது போய் நல்லாயிருக்கட்டும்.!" என்று மனதார வாழ்த்தினார். இங்கயும் இந்த நாட்டில இருந்து என்னதான் செய்யிறது?

ஒரே வீட்டிலிருந்து ஒன்றாக விளையாடி, ஒருவருக்குக் காய்ச்சல் துன்பம் வந்தால் துடித்துப் போய்.... அம்மா தந்த சாப்பாட்டை வயிறு நிறைய உண்டு, ஐயாவைக் கண்டதும் ஒதுங்கி வாழ்ந்த வாழ்க்கை இல்லையென்றாகி விட்டது. அந்த ரம்மியமான நினைவுகள் மட்டும் மனதில்

உண்டு. இந்த நாட்டில் இனப்பாகுபாடும் யுத்தப் பிரச்சினையும் இல்லாமலிருந்தால்..... இப்படித் திக்குத் திக்காகச் சிதறிப் போகாமல் இங்கேயே இருந்திருப்பார்களோ? எப்படியோ, இங்கிருந்து சீரழியாமல் போன இடங்களிலாவது நிம்மதியாக இருக்கட்டும் என மன ஆறுதலடைய முயல்வார். ஆனால் அவர்களை இனி எப்போது காண்போம்? இனி எப்போது வருவார்கள்? எப்போதாவது வருவார்களா? என்ற கேள்விகள் பிறக்கும்.

ஷெல் விழுந்து வீடு உடைந்து போன விஷயத்தை எழுதிய போது திருத்த வேலைக்கென பணம் அனுப்பியிருந்தார்கள். "காலமெல்லாம் உழைத்துக் கட்டிய வீட்டை நீங்கள் இழந்து நிற்கிறீர்கள், இங்கு நாங்கள் எங்கள் எதிர்கால உழைப்பையெல்லாம் இட்டு (வங்கியில் கடனெடுத்து) வீடு வாங்கியிருக்கிறோம்." என எழுதியிருந்தார்கள்.

சென்ற இடங்களிலெல்லாம் காலூன்றி விழுது விடுவது மகிழ்ச்சிதான். தமிழ் விழாக்கள் கூட நடத்துகிறார்களாம். சென்ற இடங்களி லெல்லாம் எங்கள் தேமதுரத் தமிழைச் சிறக்க வைக்கும் அவர்களின் செயலை அறிய உள்ளம் பூரித்து உணர்ச்சி வசப்படுகிறது. ஆனால் பிறகும் அதே பயம்..... இந்த மண்ணையும் மண்ணடி வேர்களையும் மறந்தே போய் விடுவார்களா? அவருக்குப் புரியவில்லை. தம்பி! நீங்களெல்லாம் ஒரு நாளைக்கு இங்கு வர

வேண்டும். (அல்லது வந்து போக வேண்டும்.) இந்த மண்ணை மறக்கக் கூடாது. உங்களை வளர்தெடுத்த வேர்கள் இங்குதான் இருக்கின்றன.

கனடாவிலும் ஆஸ்திரேலியாவிலும் தம்பி யவர்கள் சொந்தமாக வீடு வாங்கி விட்டார்கள் என்றதும் ஒருவித சந்தோஷம். மீண்டும் அதே கேள்விகள்....அது சந்தோஷமா....கவலையா? இவர்களெல்லாம் அங்கே வீடு வாங்கி விட்டார்கள். குடும்பத்துடன் நிலைத்து விட்டார்கள். திரும்ப இங்கு வருவார்களா? இங்கு அச்சுவேலியிலும், தின்னவேலியிலும் இருந்து கொண்டே ஒரு நல்ல நாள் பெருநாளுக்குக்கூட ஒருவரை ஒருவர் சந்திப்பது கஷ்டமா யிருக்கிறது. ஆஸ்திரேலியாவிலும் கனடாவிலும் இருந்து பிள்ளைகளின் போட்டோக்கள் வருகின்றன. சில வேலைகளில் வீடியோவிலும் பதிவு செய்து அனுப்புவார்கள். "பேர்த்டே பார்ட்டி" அது இது என்று. டெக் வாடகைக்கு எடுத்து வந்து தன் பிள்ளைகளோடு கூட இருந்து பார்ப்பார். அந்தப் பிள்ளைகளை எப்போது நேரில் காண்போம் எனப் படங்களைப் பார்த்துக் கொண்டே உள்ளம் குமுறுவார். அல்லது அந்தப் பிள்ளைகளைக் காணமுதலே காலம் வந்து போய்ச் சேர்ந்து விடுவேனோ? அவர்கள் பெரியவர் களானதும் ஒரு வேளை இந்தப் பக்கம் வருவார்களோ? வரும் போது இந்த நாடு யுத்தமில்லாமல் இருக்குமா? வந்தாலும்

அவர்களுக்கு தன்னை ஞாபகமிருக்குமா? பாசமிருக்குமா? "பெரியப்பா....தஸ்....புஸ்....கிஸ்..." என ஏதாவது ஆங்கிலத்தனமாக தங்களது கடமையை முடித்துக் கொண்டு போய் விடுவார்களோ....? ஐயோ!...அப்படி இருக்கக் கூடாது.

பிரகாஷ் பரீட்சையில் எட்டும் "டி" எடுத்த விஷயத்தை எழுதியதும் அவர்களுக்குப் பரம சந்தோஷம். அவர்களது கைப்பட பிரகாஷுக்குக் கடிதம் எழுதினார்கள். படிப்புச் செலவுகளுக்கு என்று பணமும் அனுப்பியிருந்தார்கள். "நீ படிச்சு ஒரு டொக்டராக வரவேணும்...அப்பாவின் கஷ்டங்களை நீதான் தீர்க்க வேணும்.!"

அவருக்கு அது வருத்தமாயிருந்தது. இந்தச் சிறுவனின் மனசுக்கு சுமையை ஏற்றுவதுபோல அந்த வாக்கியம் அமைந்திருந்தது. அதை அவர் விரும்பவில்லை.

"மகன்!....என்ர கஷ்டங்களை நீ யோசிக்க வேண்டாம் அப்பன்! நீ படிச்சு நல்ல நிலைமைக்கு வந்தால்...அதே போதும் எனக்கு...!"

யுத்தம் தொடங்கிய காலத்திலிருந்தே அவர் வேலையுமின்றி வேறு எந்த பிழைப்புக்கும் வழியுமின்றி இருந்தபோது தம்பியவர்கள் அவ்வப்போது பணம் அனுப்பி வைப்பார்கள். வாழ்க்கை கட்டையிலேறி விடாமல் ஓரளவேனும்

ஓடிக் கொண்டிருப்பதற்கு அவர்கள்தான் காரணம். தாங்க முடியாத காலகட்டங்களிலெல்லாம் அவர்கள் விழுதுகள் போலத் தாங்கி நின்றதை நன்றியுடன் நினைத்துக் கொள்வார். இப்போது அவர்களிடம் கேட்டுப் பார்த்தால் என்ன? "வருடப் பிறப்பும் வருகிறது. பிள்ளைகளுக்கு சரியான உடுதுணிகூட இல்லை. ஏதாவது பார்த்து அனுப்பி வையுங்கோ" என எழுதிப் பார்க்கலாமா? அவருக்கு கூச்சமாயுமிருந்தது. தம்பியாவர்கள் தானென்றாலும் ஒரு அளவு இல்லையா? எப்போதும் கையேந்திக் கொண்டு போனால் அவர்கள் என்ன செய்வது? அவர்களும் குடும்பம், பிள்ளை குட்டிகள் என்று ஆகி விட்டவர்கள். செலவுகள் அதிகரித்திருக்கும். அவர்களைக் கஷ்டப்படுத்தக் கூடாது. தன் இயலாமையில் எப்போதாவது எழுதிவிடுவதுண்டு. அவர்களும் எந்த அளவுக்குத் தான் உதவி செய்து கொண்டிருக்க முடியும். வேறு யாரிடமாவது கடனாகக் கேட்டுப் பார்க்கலாம். யாரிடம் கேட்பது? கேட்கக் கூடியவர்களிடமெல்லாம் ஏற்கனவே வேண்டியவை இன்னும் திருப்பிக் கொடுக்கவுமில்லை. இப்போது அவரைக் கண்டதும், இவர் கடன் கேட்டு விடுவாரோ என முன்னெச்சரிக்கையாக ஒதுங்குபவர்களே அதிகம்!

தனக்கு இது ஒரு ராசியோ என எண்ணிப் பார்த்திருக்கிறார். உழைக்கத் தொடங்கிய காலத்திலிருந்தே தன்னிறைவு கண்டதில்லை. ஏதாவது ஒரு தேவைக்காக கடன்பட வேண்டி

வந்துவிடும். கை நிறைய உழைத்திருக்கிறார். ஆனால் அதையும் மீறிய தேவைகள். அதனால் கடன் பட்டு....கடன் பட்டு....கடனைச் செலுத்த இங்கு பட்டு அங்கு செலுத்தி...அங்கு பட்டு இங்கு செலுத்தி, கடனாளியாக இல்லாது நிம்மதியாக இருக்கிற ஒரு நாள் வருமா என ஏங்கியிருக்கிறார். வேண்டாம் மற்ற யாரிடமும் போக வேண்டாம் தம்பியவர்களிடமே கேட்கலாம். "எப்பவாவது என்ர மகன் பிரகாஷ் நல்லாய் வந்தால் நீங்கள் செய்த உதவிகளையெல்லாம் மறக்க மாட்டான். வருடப் பிறப்பும் வருது...கொஞ்சம் அனுப்பி வையுங்கோ."

தேவராசா அண்ணன் கொழும்புக்குப் போவதாகச் சொன்னவர். அவரிடமே கொழும்பி லிருக்கும் தம்பியிடம் கொடுக்கும்படி கடிதத்தைக் கொடுத்து விடலாம். அவன் மற்றவர்களுடன் ரெலிபோனில் கதைப்பான். அவர்களது காசு வரச் சுணங்குமானால் இவனையே அனுப்பி வைக்கும்படி எழுதலாம். பின்னர் அவர்களது காசு வந்ததும் எடுத்துக் கொள்ளட்டும்.

"விடிஞ்ச நேரமுதல்....என்ன இதிலை யிருந்து யோசிச்சுக் கொண்டிருக்கிறியள்...? எந்தக் கோட்டையைப் பிடிக்கிறதுக்கு? எழும்புங்கோ! எழும்பிப் பார்க்கிற அலுவலைப் பாருங்கோ!"

சரசு அதட்டுவது போலத்தான் பேசுவாள். ஆனால் அதட்டலல்ல. அன்புக்கட்டளை என்று எடுத்துக் கொள்ளலாம். தான் ஒரே இரையாக இருந்து யோசிப்பது அவளுக்கு சங்கடமா யிருக்கிறது. இந்த மனுசனுக்கு இப்படி இருந்து யோசித்து யோசித்தே ஏதாவது ஆகிவிடுமோ என்ற பயம் அவளுக்கு என்பது அவருக்குத் தெரியும்.

இருந்த இடத்தை விட்டு எழுந்தார். குளித்து விட்டு வந்து சாமி படத்துக்கு முன்னால் போய் நின்று திருநீறு பூசினார். "கடவுளே" என மன முருகி வேண்டினார். தனது தந்தையையும் தாயையும் நினைத்தார்.

மனைவியை, பிள்ளைகளை, தம்பியவர்களை அவர்களது குடும்பம் பிள்ளைகளை எல்லோரை யும் நினைத்து எல்லோருக்காகவும் பிரார்த்தனை செய்தார். எல்லோரும் ஒரு தொல்லையுமில்லாமல் இருக்க வேணும் இந்த யுத்தம் கெதியில முடிய வேணும். எல்லோரும் ஒன்று சேர வேணும். இன்றைய பிரார்தனையில் ஒரு விஷேட அம்சத்தையும் வேண்டுகோளாக விடுத்தார். கைக்கு எப்படியாவது பணம் வந்து சேர வேணும். பிள்ளைகளுக்குப் புது வருடத்துக்குப் புத்தாடை வாங்கக் கூடிய வசதி பிறக்க வேணும்.

தன்னால் இயலாது என்ற கட்டம் வந்ததும் கடவுளிடம் விட்டு விடுவார். இலகுவாக தப்பிக்க

இது ஒரு வழியாயுமிருந்தது. கடவுளிடம் அபார நம்பிக்கையுமிருந்தது. கடவுளும் ஏதோ ஒரு வழியில் அவரது பிரார்த்தனைகளுக்கு செவி சாய்ப்பதுண்டு. இல்லாவிட்டால் எப்படி அவருக்குத் தனது தந்தையின் கடன்தனிகளைத் தீர்த்திருக்க முடியும், தம்பியவர்களைப் படிக்க வைத்திருக்க முடியும்? பிள்ளைகளை இந்த அளவுக்கு வளர்த்திருக்க முடியும்? கடவுளும் அவரது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்காத நேரங்களில் அல்லது கடவுளுக்கும் இயலாமற் போன தருணங்களில் அதற்கொரு நியாயம் கற்பித்து அஜஸ்ட் பண்ணிக் கொள்ள பழகியிருந்தார். இப்ப காலம் சரியில்லை... நல்ல காலம் வந்தால் எல்லாம் நல்லதாய் நடக்கும்!

நல்லகாலம் எப்போது வரும் என அவருக்கு ஏக்கமாயிருக்கும். இந்த நாடு எப்போது சீரடையும்? எப்போது யுத்தம் ஒரு முடிவுக்கு வரும்? எப்போது எங்களுடைய பிள்ளைகள் சுதந்திரமாக நடமாட முடியும்? பிள்ளைகளை வெளியிலே விடுவதானால், பெண் பிள்ளை களுக்கு மட்டுமன்ற ி ஆண் பிள்ளைகளுக்கும் இப்போது துணை போக வேண்டியுள்ளது. வெளியே போன பிள்ளைகள் திரும்ப உருப்படியாக வந்து சேர்வார்களா என்ற பயம் உலுக்கிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான செய்திகள் வருகின்ற ன. சீருடையில் வந்தவர்கள் வானில் ஏற்றிக் கொண்டு போனார்களாம். பிறகு பிள்ளை எந்த இடமென்று இல்லை. பெற்றவர்கள் நெஞ்சு குமுற

அலைந்து திரிகிறார்கள். இது என்ன சீர்? பொழுது பட்டால் எப்போது விடியுமென்று நெஞ்சிடிக்கிறது. மூச்சு விடுவதற்கே பயந்து பயந்து சீவிக்க வேண்டி யுள்ளது. பிள்ளைகள் தும்மினால் இருமினால் கூட சரசு பதற்றமடைகிற ாள். "மெல்ல....மெல்ல.... சத்தம் போடாதேயுங்கோ!" இரவில் வீடடங்குச் சட்டம்.

கொலைகள் ஒரு புறம். கொள்ளையர் பற்றிய பயம் இன்னொரு புறம். மூலைக்கு மூலை தொடங்கப்படும் கேடு கெட்ட சினிமாக்கள், கசிப்பு வியாபாரம்...இப்போது மற்றவித போதை வஸ்துக்களும் புளங்கத் தொடங்குகின்றன என்ற கதைகளும் அடிபடுகின்றன. மாணிக்கம் மாஸ்டர் சொல்வது போல திட்டமிட்டே எங்களுடைய கலாச்சாரம் சீரழிக்கப்படுகிறதா? இதிலெல்லாம் எங்களுடைய பிள்ளைகள் சிக்கித் தொலைந்து விடுவார்களோ என்று பயமாயிருக்கிறது. இங்கு திரும்ப வந்தது சரியா என அவருள் கேள்விகள் பிறக்கின்றன. இங்கு வராமல் வேறு எங்கு போவது? ஏன் போக வேண்டும். தப்பிப் பிழைப்பதற்கா? வாழ்க்கை என்பது தப்பிப் பிழைத்து உயிர்வாழ்வது மட்டுமா? எத்தனை இடர் வரினும் இந்த மண்ணை விட்டு ஓடாது, இதில் வேர் பாய்ச்சி எங்களுடைய பிள்ளைகளிடம் ஒப்படைத்து விட்டுப் போவது உன்னதமான வாழ்க்கை ஆகாதா? சரசு சொல்லுவாள்; "நாங்களும் எங்கையாவது ஒரு நாட்டுக்குப் போயிருக்கலாம். இந்த தலையிடியள் இல்லாமல்

நிம்மதியாக சீவிக்கலாம். இந்தப் பிள்ளையளின்ர எதிர்காலமாவது நல்லாய் வந்திருக்கும்." அவர் அதற்குப் பதில் பேச மாட்டார். சரசுக்கு விசர் என நினைத்துக் கொள்வார். பின்னர் மனைவியை சமாதானமடையச் செய்ய வேண்டுமென எண்ணிக் கொண்டு "வசதியுள்ள ஆட்கள் போகினம்.... நாங்கள் எங்க போறது?" என ஒரு எதிர்க் கேள்வியைப் போடுவார்.

அவருக்குத் தெரியும், பிள்ளைகளின் எதிர் காலத்தை எண்ணிக் கொண்டே ஒவ்வொருவரும் தங்களுடைய புத்திக்கு எட்டியவாறு ஒவ்வொரு இடங்களிலும் போய் தஞ்சமடைகிறார்கள். அல்லது யாழ்ப்பாணத்திலேயே தங்கி விடுகிறார்கள்.

மீரா பாடசாலைக்குப் போக ஆயத்தமாகி வந்து நின்றாள். "அப்பா ரெடி... வாங்கோ போகலாம்!"

பிரகாஷையும் அழைத்துக் கொண்டு அவர் புறப்பட்டார். அவரவர் பாடசாலைகளில் அவர்களை விட்டு விட்டு அவர் கையெழுத்திடப் போக வேண்டும். சீமெந்து தொழிற்சாலை அலுவலகம் தற்காலிகமாக ஓரிடத்தில் இயங்குகிறது. கையெழுத்திட்டுப் பெறும் (சம்பளப்) பணத்தில் தான் சாப்பாட்டுப் பிரச்சினை ஒருவாறு சரிக்கட்டப்படுகிறது. இது கூட சரியா என அவரை யோசிக்கத் தூண்டியிருக்கிறது. ஆனால்

வேறு வழியில்லை. அப்போதும் மாணிக்க மாஸ்டரின் ஞாயங்கள் தான் நினைவில் வரும். "மறைமுகமாக நாங்கள் இப்படியொரு நிலைமைக்குள் தள்ளிவிடப்பட்டிருக்கிறம். உலருணவு....நிவாரணம் என்று எல்லாத்துக்கும் வேற கையைத்தான் எதிர்பார்த்து நிக்க வேண்டியிருக்கு...பார்த்தியளே!"

கையெழுத்திட வந்த ஏனைய நண்பர்கள் சிலரைக் கண்ட போது மனதில் சபலம் தட்டியது. சற்று பேதலித்தது. இவர்கள் யாரிடமாவது கேட்டுப் பார்த்தால் என்ன? அவருடைய நிலைமை தெரிந்த நல்ல மனம் கொண்ட நண்பர்கள் சிலர் உள்ளனர். பல தடவைகள் உதவி செய்தவர்கள். கேட்டுப் பார்க்கலாம். தந்தாலும் தரக் கூடும். இப்போது பணம் கிடைத்தால் பிள்ளைகளுக்கு தேவைப்படும் உடைகளைப் பார்த்து வாங்கு வதற்கு அவகாசமிருக்கும். பின்னர் தம்பியவர் களிடமிருந்து காசு வந்ததும் இதைத் திருப்பி விடலாம்.

காசு கிடைத்து பிள்ளைகளுக்கு புத்தாடை வாங்கிக் கொடுத்து அவர்கள் குதூகலிப்பதை மானசீகமாக நினைத்துப் பார்த்தார். அவரது உள்ளமும் குதூகலித்தது. புதிய ஆடை யென்றால் யாருக்குத்தான் சந்தோஷமிருக்காது? அவருக்குக் கூட புதிதாக ஒரு சேர்ட் போட்டுப் பார்க்க ஆசைதான். மணமுடித்த ஆரம்ப காலங்களில் திருமணநாள் நினைவாக, மற்றும் அவரது பிறந்த நாள் என்று சரசு அவருக்கு சேர்ட்

வாங்கித் தருவாள். சேர்ட் கைக்கு வந்த உடனேயே அதைப் போட்டுக் கண்ணாடியில் அழகு பார்த்து விடுவார். கொஞ்சக் காலம்தான் இதெல்லாம் தடல்புடலாக நடந்தது. அதன் பிறகு சரசுவுக்கும் அலுத்துப் போயிருக்கக் கூடும்! அல்லது அவளது தலையையும் அழுத்திய பொருளாதாரப் பிரச்சினை காரணமாயிருக்கலாம். இப்போது மண நிறைவு நாளும் பிறந்த நாளும் வருவதும் போவதும் தெரியாமல் போய் விடும்.

காசு கிடைத்தால், இந்த வருடப் பிறப்புக்கு தனக்கும் ஒரு சேர்ட் வேண்டினாலென்ன என்று அவருக்கு ஆசையாயிருந்தது. "கந்தலைக் கசக்கிக் கட்டி" என எங்கேயோ ஒரு பாடல் பார்த்த ஞாபகம் இருக்கிறது. அது போலத்தான் தனது நிலைமையும் போய்க் கொண்டிருக்கிறது. வருடப் பிறப்புக்கு புத்தாடை அணிந்து அயலிலுள்ள பிள்ளைகளின் உடைகளுடன் ஒப்பிட்டு "இது நல்லது" என மகிழ்ந்த காலம் இன்னும் நினைவிருக்கிறது. தனது பிள்ளைகளுக்கும் அது போலத்தானே ஆசை இருக்கும்? புத்தாடையைக் கண்டு பிள்ளைகள் துள்ளிக் குதிப்பதை நினைக்கும் போதே நெஞ்சில் ஒருவித இதம் வருடியது.

அந்த ஆர்வத்தில் ஒரு சில நண்பர்களிடம் அணுகிக் கேட்டுப் பார்த்தார்.

"உங்களுக்கு இதொரு விளையாட்டாய்ப் போச்சுது! நெடுகலும் கடன்....கடன் என்றால்

நாங்கள் எங்க போறது? உங்களைப் போலத்தான் எங்களுக்கும் கஷ்டம்" என்பது போன்ற பதில்கள் தான் கிடைத்தன.

சுமாரான வருமானம் உள்ளவர்களுக்கும் இங்கு வாழ்க்கையைக் கொண்டு நடத்துவது கஷ்டம் என்பது உண்மைதான். பொருட்கள் எதைக் கேட்டாலும் தடை....தட்டுப்பாடு. கிடைக்கக் கூடியதாயிருந்தால் கொடுக்க முடியாத விலை. இந்த விசித்திரத்தில் அன்றாடம் சீவியத்தைக் கொண்டு நடத்துவது எப்படி?

சரி, தம்பியவர்களிடமிருந்து பணம் வரும்வரை பொறுமையாயிருக்கலாம் என மனதைக் கட்டுப்படுத்த முயன்றார். எனினும் சில வேளைகளில் மனம் கேட்க மறுக்கிறது. கொழும்புக்குப் போன தேவராசா அண்ணன் பத்து நாட்களில் வருவதாகச் சொல்லியிருந்தார். எப்போது அந்த நாள் வரும் என எண்ணிக் கொண்டிருந்தார்.

விற்கக் கூடியதாக ஏதாவது இருக்கிறதா என்றும் அவரது சிந்தனை ஓடியது. நகை நட்டு என்று ஒன்றும் இல்லை. வீட்டில் சமையல் பாத்திரங்களையும் சாப்பாட்டுக் கோப்பைகளையும் கூட சரசு அவர் கண்ணில் பட விடுவதில்லை!

நாலைந்து கோழிகள் வீட்டில் நிற்கின்றன. அவற்றை விற்று விட்டால் என்ன? அந்தக் கதையை கேட்டதும் சரசு அடிப்பது போல வந்து விட்டாள்.

"அதுகள் நிக்கிறதும்....உங்கட கண்ணுக்கை குத்திப் போட்டுதா?....அதுகள் நிக்கிற புண்ணியத்தில தானே... பிள்ளையள் இடைசுகம் முட்டை சாப்பிடுதுகள்? பிள்ளையளுக்கு வேறு என்ன சத்தான சாப்பாடு குடுக்கிறம்?"

பிள்ளைகளுக்குப் போஷாக்கான சாப்பாடு இல்லை என்ற கவலை அவருக்கும் உண்டு. மினுக்கென்று இருக்க வேண்டிய பருவத்தில் எலும்பும் தோலுமாகிக் கொண்டிருக்கிறார்கள்.

தேவராசா அண்ணன் வந்திருப்பாரா என இடையிடையே அவரது வீட்டுப்பக்கம் போய் பார்த்து வந்தார்.

"போனவரை இன்னும் காணயில்லை...அது தான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறன்...."

"வந்திடுவார்!...யோசியாதையுங்கோ! தெரியாதா......கொழும்புப் பயணம்.... போக்குவரத்து பெமிசன் எடுக்கவே....அலைய வேண்டியிருக்கும்." தேவராசா அண்ணனின் மனைவிக்கு அவர் ஆறுதல் கூறிவிட்டு வருவார். ஆனால் வருடப்பிறப்புக்கு முன் அண்ணன் வந்து விட வேண்டுமே என்ற ஏக்கம் இவருக்கிருக்கும்.

வருடப்பிறப்புக்கு இன்னும் ஒரே ஒரு நாள் மட்டும் உள்ளது என்ற நிலையில் அவருக்கு காய்ச்சலே பிடித்து விடும் போலிருந்தது.

இன்றைக்கும் தேவராசா அண்ணன் வரவில்லையென்றால் என்ன செய்வது? பிள்ளைகளிடமென்றால் இன்னும் எதிர்பார்ப்பு இருக்கிறது. இன்றைக்கு காசு வந்துவிடும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தேவராசா அண்ணன் வீட்டுக்கு ஒரு முறை போய் பார்த்து வரலாம் என்று தோன்றினாலும், நெடுகலும் போய் அலைவதை அவர்கள் எப்படிக் கருதுவார்களோ என ஒருவித சுயகெளரவம் தடுத்தது. மாலை வரை தாமதித்துப் பார்த்து விட்டுப் போகலாம்.

ஆனால், ஒரு அற்புதம் நிகழ்வதைப் போல தேவராசா அண்ணன் வீடு தேடி வந்தார். தம்பி கொடுத்து விட்டதாக அந்த என்வலப்பையும் தந்தார் பிரகாஷும், மீராவும் அவருக்குப் பக்கத்தில் ஓடி வந்து விட்டனர். அவர் வந்தவரோடு கதைத்துக் கொண்டிருக்க பிள்ளைகள் அவர் கையிலிருந்த என்வலப்பை பிடித்துப் பிடித்துப் பார்த்தார்கள். அவருக்கு அதை அந்தக் கணமே உடைக்க வேண்டும் என்று ஆவல். ஆனால் தேவராசா அண்ணன் தனது கொழும்புப் பயணத்தில் ஏற்பட்ட இடைஞ்சல்களையும், தனது சாதுரியத்தால் இவ்வளவு கெதியாக வர முடிந்ததையும் ஒரு சாதனை போல சொல்லிக் கொண்டிருந்தார். போன பிறகு உடைக்கலாம் என பொறுமையைக் கடைபிடித்தார். தனது கைவிரலால் மெதுவாக என்வலப்பின் உள்ளடக்கத்தை உணர்ந்து பார்த்தார். தடிப்பாகத் தான் இருக்கிறது.....எவ்வளவு அனுப்பியிருப்பார்கள்?

என்வலப்பை உடைத்த போது ஐந்தாறு தாள்களில் பக்கம் பக்கமாக எழுதப்பட்ட கடிதம்! பணம் இல்லை! சரியாகக் கவனிக்க வில்லையோ எனத் தாள்களை ஒவ்வொரு ஒற்றையாகத் திருப்பித் திருப்பிப் பார்த்தார். இல்லை, பணம் இல்லை, கலவரத்துடன் கடிதத்தைப் படித்தார், சாராம்சம் இதுதான்.

நீங்கள் எழுதியிருந்த பண விஷயமாக அவர்களுடன் ரெலிபோனில் கதைத்தேன். உடனடியாக அனுப்புவதற்கு வசதியில்லையாம். பின்னர் அனுப்புவதாகச் சொல்லச் சொன்னார்கள். தங்களுக்கும் குடும்பப் பொறுப்புக்கள் இருக்கிறது. இப்படி நெடுக அண்ணைக்கு அனுப்பிக் கொண்டிருக்கேலுமா? தன்னுடைய குடும்பத்தைக் கவனிக்கிற பொறுப்புணர்வு அண்ணைக்கு இருக்க வேணும்....நெடுகலும் தங்களுடைய கையை எதிர் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாதாம்.! அவையள் எப்ப அனுப்புவினமோ தெரியாது.... அதை நம்பி என்ர கையில உள்ள கொஞ்ச நஞ்ச காசையும் உங்களுக்கு அனுப்பி விட்டு நான் என்ன செய்யிறது? கொழும்புச் சீவியத்தைப் பற்றித் தெரியும் தானே...?

இந்த விஷயத்தை நோகாமல் சொல்லு வதற்காக ஆறோ ஏழோ தாள்கள் செலவளிக்கப் பட்டிருந்தன. ஆனால் அவருக்கு நொந்தது.

கைகளை அகல விரித்துத் தழைத்த மரமொன்றின் அடிவேரை வெட்டிவிட்டது போல சதுரமெங்கும் ஆடியது.

பக்கத்தில் நின்ற மீரா கேட்டாள்.

"காசு அனுப்பவில்லையா அப்பா?"

"இல்லை அம்மா!"

"ஏன்?"

அவர் பதிலளிக்கவில்லை. சில கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாது. அல்லது பதில் தெரியாது. வாழ்க்கையில் பதில் சொல்லப்படாத, பதில் அறிய முடியாத நிறையக் கேள்விகள் இருக்கின்றன. அந்தக் கேள்விகள் நினைவில் வந்தால் அவரை இராப்பகலாய் வருத்துவதுண்டு.

கடிதத்தை மீராவின் கையில் கொடுத்தார். அதிலிருந்த வாக்கியங்கள் திரும்பத் திரும்ப நினைவில் வந்து அவரை அடித்துப் போடுவது போன்றிருந்தது. மனதை ஒரு நிலைப்படுத்தி நிதானிக்க முயன்றார். தனது இயலாத் தன்மையால் தம்பியவர்களையும் கஷ்டப்படுத்தி விட்டேனோ என்ற குற்ற மனப்பான்மைக்கு உட்பட்டவர் போலானார். நீண்ட நேரம் யாருடனும் எதுவும் பேசாமலிருந்தார். மனைவி அவரை ஆறுதல் படுத்தினாள்.

"அதுக்கேன் கவலைப்படுறீங்கள்... அவையளுக்கும் என்ன கஷ்டமோ...? ஆருக்குத் தெரியும்? கடவுள் விட்ட வழி!"

இருள் வந்து மெல்ல மெல்ல மூடிக் கொண்டிருந்தது. வேளைக்கே படுக்கைக்குப் போனார். ஆனால் உறக்கம் வரவில்லை. சரசு வந்து படுத்து அடித்துப் போட்டது போல உறங்கி விட்டாள். பகல் முழுதும் மாய்ச்சல் படுகிற தேகம் போலும். படுத்ததும் உறங்கி விடுவாள். அது அவளுக்கு ஒரு கொடையென நினைத்திருக் கிறார். அதுவும் நல்லது தானே? மனக் கவலை களுக்கு தூக்கத்தை விட வேறு மருந்து ஏது? ஆனால் அவர் எத்தனையோ இரவுகள், எத்தனையோ கவலைகளில் தூங்காமலே கிடந்து உளன்றிருக்கிறார்.

இந்தா...இந்தா என்று சொல்லிக் கொண்டு புது வருடம் பிறந்து விட்டது! அது அவருக்குத் தெரியவில்லை. இன்னும் படுக்கையை விட்டு எழாமலே கிடந்தார்.

"வருஷப் பிறப்பு நாளும் அதுவுமாய்....இப்படி படுத்திருக்கிறார்." மனைவி சத்தமிட்டு சொல்லிக் கொண்டிருக்கும் சத்தம் கூட அவருக்குக் கேட்கவில்லை. "அப்பாவைப் போய் எழுப்பம்மா!" என மகளை அனுப்பினாள். மீரா ஓடி வந்து அப்பாவை எழுப்ப அவர் அசையாமல் கிடந்தார். அவரைத் தொட்டு அசைத்தாள். "அப்பா!... எழும்புங்கோ! எழும்புங்கோ!..." அவர் துடித்துப் பதைத்துக் கொண்டு எழுந்தார்.

"விடிஞ்சிட்டுதாம்மா!"

"ஓமப்பா!"

எவ்வளவு அருமையான வார்த்தை! விடியல்! இந்தப் புதுவருடம் இங்கு எல்லோருடைய வாழ்க்கையிலும் அந்த விடியலைக் கொண்டு வராதா? இந்த வருடமாவது குண்டுச் சத்தங்கள் ஓய்ந்து போகாதா?

மகளைத் திரும்பிப் பார்த்தார். அவள் நின்ற கோலம் அவருக்கு அழுகையைக் கொண்டு வந்தது.

வருடப் பிறப்பு எவ்வளவு சந்தோஷமான நாள். அதிகாலையில் எழுந்து குளித்து கோயிலுக்குப் போய் வந்து அறுசுவை உணவருந்தி.....

பிள்ளைகளுக்கு இன்றைக்கு விசேடமான சாப்பாடு செய்து கொடுக்கக் கூட ஒரு வழியும் இல்லையே... அவ்வளவு ஏன்..இன்றைய வயிற்றுப் பாட்டுக்கே என்ன வழியோ தெரியாது ...சரசுவுக்குத்தான் அந்தப் புதிருக்கு விடை தெரியும். சாமான் சக்கட்டு வேண்டும். கனகு கடையில் கடனுக்கு மேல் கடன் ஏறி விட்டது. மாதாந்தம் எடுக்கிற சொற்ப சம்பளத்தில் சுமாரான தொகையை கனகு கடைக்குக் கொடுத்தாலும் கடனை முற்றாகத் தீர்த்துச் சரிகட்ட முடிந்ததில்லை. ஏதாவது சாமான் கேட்டுப் போனால் "இல்லை"....."முடிஞ்சு போச்சு" என ஏதாவது சொல்லித் திருப்பி விடுகிறான். நின்று மன்றாட்டமாகக் கேட்டுப்

பார்த்தால், "இருக்கிற கடனைக் கொடுத்திட்டு ...பிறகு சாமான் வேண்ட வாங்கோ!" என முகத்திலடிக்கிறான்.

"என்னப்பா யோசிக்கிறீங்கள்....?"

"ஒன்றுமில்லையம்மா!....ராவுமுழுக்க நித்திரையில்லை....விடியப்புறமாய் அயந்திட்டன் போல... அதுதான் எழும்பாமல் கிடந்திட்டன்."

"கவலைப்படுறீங்களா....அப்பா? எங்களுக்கு புது உடுப்பு வேண்டாம்....இருக்கிறது போதும்.!..... நீங்கள் கவலைப்பட வேண்டாம்.!"

அவர் தன் கைக்குள் மீராவை அணைத்துக் கொண்டு நெஞ்சுக்குள் விம்மினார்.

எழுந்து வெளியே வந்தார். குளிக்கும் போதும் யோசனை ஓடிக் கொண்டே இருந்தது. கொஞ்சக் காசாவது கையில் கிடைக்குமானால்? இப்படியொரு நல்ல நாள் பெருநாளிலாவது பிள்ளைகள் வாய்க்கு ருசியாக ஏதாவது சாப்பிட வேண்டாமா?

வாழை மரங்களைப் பார்த்தார். இன்னும் வெட்டப் படாமல் புதிதாக விரிந்திருக்கும் இலைகளைக் கணக்கிட்டுப் பார்த்தார். நாற்பது ஐம்பது ரூபா தேறினாலும் பரவாயில்லை. அவற்றை வெட்டி எடுத்துக் கொண்டு சந்தைக்குப் போனார்.

தின்னவேலிச் சந்தையில் சனங்கள் குறைவாயிருந்தனர். இலைகளை அப்படியே ஒரு வியாபாரிக்கு விலை பேசிக் கொடுத்தார். பணம் கைக்கு வந்ததும் சற்றுத் தெம்பு. புறப்படலாம் எனத் திரும்பிய போது....சற்றுத் தொலைவில் மணியண்ணை!

சுமார் இருபது வருடங்களுக்கு முன் பெக்டரியிலிருந்து ஓய்வு பெற்றவர் மணியண்ணை. இப்போது வயோதிபம் வந்து விட்டது. மட்டுக் கட்ட முடியவில்லை. வயோதிபம் எல்லோருக்கும் தான் வருகிறது. எவ்வளவு திடகாத்திரமாக இருந்த மனுசன். இப்படித் தளர்ந்து போய் விட்டாரே! வயோதிபம் காலத்தோடு வருகிறதா? கஷ்டத்தோடு வருகிறதா?

ஓய்வு பெற்ற பிறகு மணியண்ணையை இரண்டொரு முறை காண நேர்ந்திருக்கிறது. இவரது இடம் மயிலிட்டி என்ற படியால் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்ததில்லை. இப்போது இடம் பெயர்ந்து யாழ்ப்பாணப் பக்கம் வந்து விட்டார் போலிருக்கிறது. ஓய்வு பெற்ற போது பெற்ற பணத்தில் தனது மகளுக்கு மணமுடித்துக் கொடுத்தாராம். அவரது மகளும் இரண்டு மகன்களும் ஐரோப்பிய நாடுகளில் குடிபோய் விட்டார்களாம். "செலவுக்கு காசு அனுப்பி வைப்பார்கள்....இப்படியே காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறன்.!" என முன்னர் கண்ட போது மணியண்ணை சொன்னது ஞாபகம் வந்தது.

அவரது மனதில் பளிச்சென ஒரு வெளிச்சம். மணியண்ணையிடம் கேட்டுப் பார்க்கலாம். நிச்சயம் உதவி செய்வார்.

அவரது மனம் ஒரு துள்ளுத் துள்ளியது. மணியண்ணையை நோக்கி நடந்தார். மணியண்ணையும் அவரை அடையாளம் கண்டு கொண்டு வந்தார்.

"மணியண்ணை!"

கையைப் பிடித்தார். மணியண்ணை கை நடுங்கி நடுங்கி அவரைத் தழுவிக் கொண்டார். கண்ணீர் முந்திக் கொண்டு வந்தது.

"மணியண்ணை எப்படியிருக்கிறீங்கள்...?"

"காலையில இருந்து ஒரு தேத்தண்ணி கூடக் குடிக்கயில்லை.... வயிறு புகையுது......பத்து ரூபாயென்றாலும் இருந்தாத் தாங்கோ!"

வாழையிலை விற்ற காசு கையிலிருந்தது. அதை அவர் அப்படியே மணியண்ணையின் கையில் கொடுத்தார்.

(மல்லிகை 1999)

❑

# மனக்கணிதம்

தாமரா வீட்டை விட்டுப் போய் பத்து நாட்களாகிறது! இன்றைக்கு வருவாளோ, இன்றைக்கு வருவாளோ என எண்ணி ஏமாந்த பொழுது களைப் போலவே இன்றைய நாளும் போய் விடுமோ என்ற ஏக்கம் மனதை ஆக்கிரமித்திருக்கிறது. சோகம் அவனைக் குப்புறப் போட்டு அழுத்தியது. படுக்கையிலிருந்து எழவும் மனதில்லை. அழவேண்டும் போன்றதொரு உணர்வு தொண்டையை அடைத்துக் கொண்டிருக் கிறது. அழுகை எதற்காக? அல்லது யாருக்காக? தாமராவுக்காகவா?

தாமரா வீட்டை விட்டுப் போன நாளிலிருந்து அவனுக்கு, தான் தனிமைப்பட்டுப் போனது போன்றதொரு விரக்தி மனதை எரித்துக் கொண்டிருக்கிறது. தன் உணர்வுகளை அவள் புரிந்து கொள்ளவில்லையே என மனம் வெதும்புகிறது. அப்படி அலட்சியப்படுத்தினால் அதற்கு அழுகை ஏன்? தாமரா தனக்கு யார்? என்ன உறவு? உறவு ஏதுமில்லையெனில் ஒன்றுமே இல்லையென்றாகி விடுமா? அவனுக்குப் புரிய வில்லை. எனினும் அழுகை தேவைப்படுகிறது. எதற்காகவோ யாருக்காகவோ என்று காரணம்

தெளிவாகாவிடினும் அழுது தீர்க்க வேண்டும் போலிருக்கிறது.

ஜன்னலுக்கு வெளியே பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. பறவைகள் விதவிதமான தொனிகளில் பாடுகின்றன. இதமான அவற்றின் கீதங்களை படுக்கையை விட்டு எழாமலே கேட்டுக் கொண்டிருக்க அவனுக்கு விருப்பம். ஆனால் இப்போது அவனுக்கு இரவுகள் மிக நீண்டு கொண்டிருந்தன. கனவா நனவா என்று புரியாத இடை மன நிலைகளில் தாமரா கற்பனைக் கதைகளில் வருவது போல வருகிறாள் கனவுகளில் லயித்துப் போகும் வேளைகளில் விழிப்பு வந்து விடுகிறது. மீண்டும் உறங்க, கதை தொடருகிறது. தடைப்பட்ட உறக்கம் அதிகாலையில் அசதியை ஏற்படுத்தி, பறவைகளின் கீதங்கள் கூட ஏதோ மாய லோகத்தில் ஒலிப்பது போன்ற மயக்கத்தைத் தருகிறது.

அன்று காலைச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு வேலைக்குப் புறப்படும் வேளையிற் தான் அவள் அந்த விஷயத்தைச் சொன்னாள்.

"பொழுது பட நீங்க... வீட்டுக்கு..... வர்ற நேரம்...நான் வீட்டில....இருக்க மாட்டன்!"

அவனுக்கு சிறு அதிர்ச்சி ஏற்பட்டது போலத் தான் இருந்தது. அதைக் காட்டிக் கொள்ள வில்லை. திரும்பி அவள் முகத்தைப் பார்த்தான்.

"மாமா வீட்டுக்குப்.... போகப் போறன்."

அவன் அதற்கு எவ்வித பதிலும் பேசாமலே புறப்பட்டு விட்டான். இப்படி திடுதிப்பென்று எதற்காக மாமா வீட்டுக்குத் தாமரா போகிறாள் என உள்ளே யோசனையாய் இருந்தது. தனக்கு ஏற்கனவே அவள் அது பற்றிக் கூறாமல் விட்டது, தன்னைப் பொருட்படுத்தாதனால் தானே என ஒரு கோபம் கூட மூண்டது. கோபம் தாமரா மேலா அல்லது அவள் தன்னை விட்டுப் பிரியப் போகிறாளே என்ற ஆற்றாமையாலா என்றும் புரியவில்லை.

ஏன் போகிறாய், எப்போது திரும்ப வருவாய் என ஒரு கேள்வியையாவது அவளிடம் கேட்டிருக்கலாம். தாமராவும் அதை அவனிட மிருந்து எதிர்பார்த்திருக்கக் கூடும். அப்படிக் கேட்காமல் விட்டது அவளுக்கு ஏமாற்றமாகக் கூட இருந்திருக்கும். அதனாற்தான் அவள் மேற கொண்டு எதுவும் பேசவில்லையோ? கேட்காமல் விட்டது மடைத்தனம்தான். மாமா வீட்டுக்குத் தானே போகிறாள், இரண்டொரு நாட்களில் திரும்பி விடுவாள் என அலட்சியமாக இருந்து விட்டேனே என இப்போது கவலையாயிருந்தது. ஒவ்வொரு நாட்களும் வெறுமனே கழிந்து கொண்டு போக அவள் எப்போது வருவாள் என மனம் ஏங்குகிறது.

இப்படி எவ்வளவு நேரம்தான் அவள் நினைவு களுடன் கிடப்பது என அவனுக்குத் தன் மேலேயே

சினம் ஏற்பட்டது. படுக்கையை விட்டு எழுந்தான். தாமராவையும்.... அவள் நினைவு களையும் மறந்து விட வேண்டும். நேரத்தோடு வெளிக்கிட்டு பஸ் நிறுத்தத்துக்குப் போய் விட வேண்டும். இல்லாவிட்டால் நேற்றையைப் போலவும்...அதற்கு முன்தினம் போலவும் பஸ்சைத் தவற விட்டு வேலைக்கு லேட்டாகப் போக வேண்டி வரும்.

குளித்து ரெடியாகி வந்த போது மேசையில் சாப்பாடு தயாராயிருந்தது. அவசர அவசரமாகக் குளித்து உடையணிந்து வந்ததால் உடல் வியர்த்தது. நெற்றி வியர்வையைக் கை விரலினால் துடைத்த போது தாமராவின் நினைவு வந்தது....

இது போன்ற ஒரு காலைப் பொழுதில் தாமரா பக்கத்தில் நின்று உணவு பரிமாறிக் கொண்டிருந்தாள். நெற்றியில் துளிர்த்திருந்த வியர்வையை புறங்கையினால் துடைத்தபடியே அவன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அதைக் கவனித்த தாமரா சட்டெனத் தனது தாவணியைக் கையிலெடுத்து அவனது முகத்தில் துளிர்த்திருந்த வியர்வையைத் துடைத்து விட்டாள். அப்போது அவள் தன்னோடு அணைந்து கொண்டு நின்றது போலவும் அவனுக்கு ஒரு ஸ்பரிசம் கிடைத்தது. அது ஒருவித பரவசத்தையும் ஏற்படுத்தியது. பதட்டமுமடைந்தான்...

"அம்மா....அம்மா....வந்தால்...?"

"வந்தால் வரட்டும் பயமில்லை....!"

தாமரா அப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அம்மா குசினியிலிருந்து வெளிவரும் அசுகை தெரிந்தது. இமைக்கும் கணத்தில் தாமரா அவனை விட்டு விலகி நல்ல பிள்ளையாக நின்றாள். அவனுக்குப் படபடப்பு அடங்காமல் இன்னும் அதிகமாக வியர்த்தது. அம்மா மீண்டும் குசினிக்குள் போக, அவன் சற்று ஆசுவாசமாக மூச்செடுக்க முயல்கைளில் தாமராவின் கை அவனது காதைப் பிடித்து முகத்தைத் தன் பக்கம் திருப்பியது. தாவணியைக் கையிலெடுத்து வியர்வையைத் துடைத்து விட்டு... "எப்படி?" என்பது போலக் கண்களைச் சிமிட்டினாள்.

இப்படி ஏதாவது நினைவு வந்து விடுகிறது. தாமராவை மறக்க வேண்டும் என மனதில் ஒரு வைராக்கியம் எடுத்தால் அதை அவளது குறும்புத்தனங்கள் நினைவில் வந்து அழித்து விடுகிறது.

சாப்பாட்டை கையிலெடுத்தபோது சாப்பிடத்தான் வேண்டுமா என உள்ளே ஒரு மனம் பிரேக் அடித்துக் கேட்டது. சாப்பாடு வயிறு மட்டும் சம்பந்தப்பட்ட விஷயமல்ல, அது மனமும் சம்பந்தப்பட்டது என்பது இது போன்ற வேளைகளிற் தான் புரிகிறது.

தாமரா வீட்டில் இல்லாத குறை கண் பட்ட இடமெல்லாம் தென்பட்டது. பாத்திர

பண்டங்க ளெல்லாம் அவற்றுக்குரிய இடங்களுக் குப் போகாமல் போட்ட போட்ட இடங்களில் இடக்குப் பண்ணிக்கொண்டு கிடந்தன. தண்ணீர்க் குழாய் கூட தாமரா இல்லையெண சிணுங்கி வடிந்து கொண்டிருந்தது. எழுந்து அவன் அந்தக் குழாயை இறுக்கமாக மூடினான்...ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வீணாகச் சிந்துவது தாமராவுக்குப் பிடியாது.

"ஏன் தம்பி...சாப்பிடயில்லையா..."

"இல்லையம்மா...எனக்குப் பசியில்லை...."

தாமராவின் தாயாரை அவன் அம்மா என்று தான் அழைப்பான். ஆறு வருடங்களுக்கு முன் இந்த வீட்டில் ஓர் அறையை வாடகைக்கு எடுத்துக் குடியிருக்க வந்த நாளிலிருந்தே ஒரு பெற்ற தாயைப் போல அவரது அன்பையும் பரிவையும் பல சந்தர்ப்பங்களில் உணர்ந்திருக்கிறான். படிப்பு முடிந்த பின், முதலிற் கிடைத்த உத்தியோகத்துக் காக காலித் துறைமுகத்துக்கு அண்மிய இந்தப் பகுதிக்கு வரவேண்டியிருந்தது. தங்குவதற்கு ஓர் இடம் தேடிய போது அவன் யுத்த பிரதேசத்தி லிருந்து வந்தவன், அதிலும் இளம் இளைஞன் என்ற காரணத்துக்காக அறையொன்று கிடைப்பது பெரும் பாடாயிருந்தது. அப்போது பெரு மனசுடன் தங்குவதற்கு இடம் தந்து உதவியவர் அம்மா. "பசியில்லாட்டில்....பார்சல் பண்ணித் தரட்டா....தம்பி?"

"வேண்டாமம்மா....நான் கடையில.... பார்த்துக் கொள்ளுறன்."

அரைகுறையாகப் பதில் சொல்லிக் கொண்டே புறப்பட்டான். இல்லாவிட்டால் அம்மா, சாப்பாட்டை பார்சல் பண்ணிக் கையிற் தந்தே விடுவாள். அவன் கடைகளிற் சாப்பிடமாட்டான் என்பது அம்மாவுக்குத் தெரியும். அவன் தாவர பட்சிணி. கடைச் சாப்பாடுகள் ஒத்து வராது.

ஆரம்பத்தில் தங்குவதற்கு அறை தந்த போது "சாப்பாட்டை வெளியில் வைத்துக் கொள்ள வேண்டும்... அதுக்கெல்லாம் எங்களுக்கு வசதிப்படாது" என அம்மா சொல்லியிருந்தாள். தொழிலகத்துக்கு அண்மையில் சைவச் சாப்பாடு சாப்பிடக்கூடிய உகந்த கடை வசதி இல்லை. கடைகளிற் போய் அமர்ந்ததும் மச்சக் கறியின் மணம். அவனுக்குக் குமட்டிக் கொண்டு வரும். அதனால் மதியச் சாப்பாட்டுக்காகக் கடைகளுக்குப் போவதைக் கூடியவரை தவிர்த்துக் கொண்டான். இது தெரிய வந்ததும் அம்மா கவலைப்பட்டாள். "பசி... கிடக்க வேண்டாம்." வீட்டிலேயே சாப்பிட்டுவிட்டு மதியத்துக்கு பார்சலும் எடுத்துப் போகும்படி கூறினாள். அவன் அதற்குச் சம்மதிக்கவில்லை. மறுப்புத் தெரிவித்து விட்டு வேலைக்குப் போயிருந்தான். ஆனால் அன்றைய தினம் வேலைத்தலத்துக்குச் சாப்பாட்டு பார்சல் தேடி வந்தது. மதிய வேளைக்கு வரும் பஸ்சில் அனுப்பியிருந்தார்கள். அவனுக்குத் தெரியும்....

தாமராவின் வேலைதான் அது. தாமரா அவனது பெயரை சாப்பாட்டு பார்சலில் எழுதியிருந்தாள். அதற்கு ஏதோ சக்தியிருந்து தன்னை ஈர்ப்பது போல தாமராவின் கையெழுத்து... தனது பெயரை அவள் கைப்பட எழுதியது அவனுக்குள் ஒரு குளிர்ச்சியை ஏற்படுத்தியது. தனது புலனுணர்வுகளை தாமரா மெல்லத் தட்டியசைக்கத் தொடங்கியிருப்பதை அவன் உணரத் தொடங்கினான். இதிலிருந்து விடுபட முடியாம் போகுமோ என அவனுக்குள் அவ்வப்போது கேள்விகள் எழத் தொடங்கின.

மாலையில் வீட்டுக்கு வந்ததும் அம்மாவிடம் சொன்னான்.

"என்னால் ஏன் உங்களுக்கு வீண் சிரமம்? சாப்பாடு அனுப்ப வேண்டாம் அம்மா."

"இதில....என்ன கஷ்டம் தம்பி?...நீங்களும் எனக்கு ஒரு பிள்ளை மாதிரித்தான்."

அப்போது தாமராவின் குரல் குசினிக் குள்ளிருந்து கேட்டது.

"வேலைக்குப் போறவர் பசி கிடக்க நாங்கள் எப்படி இங்கை சாப்பிட்டுக் கொண்டிருக்கேலும்.?"

இப்படித்தான் தாமரா மெல்ல மெல்ல அவன் நெஞ்சுக்கு அருகில் வந்தாள்.

அம்மாவிடமாவது கேட்டுப் பார்த்திருக்கலாம். தாமரா ஏன் போனாள், எப்போது வருவாள் என அம்மாவிடம் கேட்கலாமா என்ற கேள்வி பலமுறை அவனுள் எழுந்து வந்திருக்கிறது. பின் அதே வேகத்திலேயே அடங்கிப் போகும். அம்மாவிடம் இந்த விஷயத்தைக் கேட்கும் துணிவு அவனுக்கு இல்லை. அது அம்மாவுக்கு ஏதாவது சந்தேகத்தைக் கொடுக்குமோ என்ற தயக்கம். அல்லது அப்படி ஒரு சந்தேகத்தினாற்தான் அம்மாவாகவே தாமராவை அனுப்பியிருப்பாளோ என்றும் சில வேளைகளில் குற்ற மனப்பான்மை உறுத்துகிறது. இதனால் அம்மாவுடன் இயல்பாக முகம் நிமிர்த்திப் பேச முடியவில்லை. இந்த விசித்திரத்தில் தாமராவைப் பற்றி எப்படி அம்மாவிடம் கேட்பது? அம்மாவுக்கு முன் நின்று "தாமரா...." என்று ஏதாவது பேசத் தொடங்கினாலே நாக்குத் தடுமாறும் என அவனுக்கு நிச்சயமாகத் தெரிகிறது. வேண்டாம்....அந்த வில்லங்கம்.

பஸ் நிறுத்தத்தில் காத்து நின்று தனக்குரிய பஸ் வருகிறதா என இடையிடையே திரும்பிப் பார்த்தான். அறிந்த தெரிந்த சிலர் அவனைக் கண்டு முகஸ்துதிச் சிரிப்பு செய்த போது அவன் ஏதும் பேசாமல் நின்றான். அவர்கள் முகம் மாறித் திரும்பியதும்..."அட... என்ன நினைத்திருப்பார்களோ" என உணர்வில் உறைத்தது. இந்தக் குழப்பம் இனி வேண்டாம் என மனதுக்கு எச்சரிக்கை செய்து கொண்டு நின்றான். இன்னும் சிலர் வந்த போது தானே

முந்திக் கொண்டு "ஹலோ..." என்பது போல முகத்தை மலர்த்தினான். அவர்களுக்கு அவனைத் தெரியவில்லை? அவர்கள் விழிக்க! அவனுக்கு அசடு வழிந்தது. எல்லாம் குழம்புகிறது அவனுக்கு. தாமரா மட்டும் நினைவில் நிறைந்து போயிருக்கிறாள். "தாமரா இன்றைக்கு வந்து விடுவாள்." எனத் தன் மனதைத் தேற்றினான். அது உண்மையானால்? மாலையில் வீட்டுக்கு வரும் போது தாமரா வீட்டில் நிற்பாளானால்? அவனது உள்ளம் ஒருமுறை விம்மலெடுத்தது அது நடக்குமா? தாமரா இன்று வீட்டுக்கு வருவாளா?

தாமரா ஒரு போதும் இவ்வளவு அதிக நாட்கள் வெளியிற் போய் தங்கியதில்லை. எதாவது முக்கிய காரணத்துக்காகப் போயிருக்க லாம். இன்று வந்து விடுவாள் என மனதைச் சமாதானப் படுத்த முயன்றான். இன்னுமின்னும் தன்னைப் போட்டு வருத்தாமல் அவள் இன்றைக்காவது வந்து விட வேண்டுமென்று விரும்பினான். வருவாளா?

அவனுக்குரிய பஸ் வந்து நின்று சிலரை ஏற்றிக் கொண்டு கடந்து ஒரு உறுமலுடன் போனது. அப்போது தான் அதைக் கவனித்தான். ஓடிச் சென்று பஸ்சில் தொற்றிக் கொள்ளும் கலையில் அவனுக்குப் பயிற்சியும் இல்லை.. இஷ்டமுமில்லை. பஸ் போகும் திசையையே பார்த்துக் கொண்டு நின்றான். தாமராவின் நினைவுகள் தன்னை எப்படியெல்லாம் போட்டு

அழுத்துகிறது என வியப்பாயுமிருந்தது. அவள் வீட்டிலிருந்த நாட்களை விட பிரிந்து போன பின்னர்தான் அந்த அழுத்தத்தின் தாக்கம் தெரிகிறது. தாமரா....இப்படிப் போட்டு வருத்தாதே... வந்து விடு! இன்றைக்காவது வருவாயா?

பக்கத்தில் நின்றவர் திரும்பி அவனை விநோதமாகப் பார்த்தார்.

"மட்ட மொனவா ஹறி கியூவாத?" (எனக்கு ஏதாவது சொன்னீர்களா?)

அவனுக்கு அதிர்ச்சியாயிருந்தது. "இல்லையே..மங் மொக்குவத் கியூவ நே...." (ஒன்றும் சொல்லவில்லை.)

"ஏதோ சொன்ன மாதிரிக் கேட்டிச்சு..."

அவன் சட்டென ஒரு பாட்டை முணு முணுத்தான். தான் நோர்மலாகவே பாட்டுப் பாடிக் கொண்டிருப்பது போல பாசாங்கு செய்து கொண்டு பார்வையை வேறுபக்கம் திருப்பினான்.

தொழிலகத்தில் வேலை ஓடவில்லை. எதையாவது கடமைக்குச் செய்ய வேண்டியிருந்தது. "என்ன முகம் வாடியிருக்கு?" என நண்பர்கள் சிலர் கேட்டார்கள். "இல்லையே நல்லாய்தான் இருக்கிறேன்." என ஒவ்வொருவருக்கும் சொல்ல வேண்டியிருந்தது. தான் நன்றாக இருப்பதாகக் காட்டுவதற்கு மிக

முயன்றான். ஆனால் அவனது ஒவ்வொரு செய்கையிலும் வித்தியாசம் இருந்து காட்டிக் கொடுத்தது.

"இப்ப சில நாட்களாக நீ யாருடனும் சரியாகப் பேசுவதில்லை... ஊரில ஏதாவது பிரச்சினையா?" என அனுதாபப்பட்டார்கள். சில சமயங்களில் அவனுக்கு அவர்கள் மேல் எரிச்சல் கூட ஏற்பட்டது. ஏன் தன்னைத் தன் பாட்டில் விடாமல் தொல்லை தருகிறார்கள் என நினைத்தான். லீவு போட்டு விட்டு வீட்டுக்குப் போய் விடலாமா என்றும் தோன்றியது. லீவில் வீட்டுக்குப் போனால் அம்மாவுக்கு தனது வித்தியாசம் பிடிபட்டு விடும். அல்லது வீட்டுக்கும் போகாமல் அலுவலகத்திலும் நிற்காமல் எங்காவது கடற்கரைப் பக்கமோ... வேறு தனிமையான இடங்களுக்கோ செல்லலாம். அவனுக்குத் தனிமை தேவைப்பட்டது. தாமராவின் நினைவுகளில் கரைவதற்கு அதுதான் சரி. மனதுக்கு ஓய்வு தேவைப்படுவது போலுமிருந்தது. ஓய்வு எப்படிக் கிடைக்கும் என்பது அவனுக்குத் தெரியவில்லை. இரவு தூக்கம் கெட்டதால் அசதியாயுமிருந்தது. நெற்றியைக் கைகளாற் தேய்த்து விட்டு எழுந்து நடந்து முகத்தைக் கழுவி, இப்படி எதையாவது செய்து அலுப்பைப் போக்க முயன்றான்.

"என்ன ....லவ்... பிரச்சினையா?" என கூட வேலை செய்யும் ஜயந்தி கேட்டாள். அவன் அதிர்ந்து போனான்.

"இவளுக்கு எப்படித் தெரியும்?"

அவள் சும்மா விளையாட்டுக்குக் கேட்டிருப்பாள் என்பதை அவனால் ஊகிக்க முடியாதிருந்தது. எதோ அசுகை தெரிந்துதான் கேட்கிறாளோ எனக் குழம்பினான்.

ஜயந்தியை அணுகி..."உங்களுக்கு தாமராவைத் தெரியுமா?.." எனக் கேட்டான்.

"தாமராவா...? யார் அது?" ஜயந்தி வியப்புடன் சிரித்தாள். தான் உளறுகிறேன் என்பது அப்போதுதான் அவனது புத்தியில் தட்டியது.

ஜயந்தி விடவில்லை. இன்னுமின்னும் கேள்விகளால் அவனைத் துளைத்தாள். உளறாமல் இருக்க வேண்டுமென மனதுக்குள் பிரார்த்தித்துக் கொண்டு தடுமாறினான்.

ஆனால் ஜயந்திக்கு அந்தச் சிறு தகவலே போதுமானதாயிருந்தது. அலுவலகத்திற் பெண்கள் எல்லாம் சேர்ந்து கதைப்பது போல அவனுக்குப் பிரமையாயிருந்தது. தன்னை அவர்கள் சற்று வேடிக்கையாகப் பார்ப்பது போலவும் தங்களுக்குள் கலந்துரையாடிச் சிரிப்பது போலவும் கூச்சமாயிருந்தது. அல்லது அது தனது கற்பனையோ என நினைத்தான்.

"என்ன.... ஆளே...மாறியிட்டீங்க? அப்பிடி என்ன கவலை? சும்மா... கவலைப்பட வேண்டாம்.

நாங்களெல்லாம் ...இல்லையா?" - மல்லிகா வந்து இப்படிக் கேட்டது தன்னைத் தேற்றுவதற்கா அல்லது இன்னும் கதை பிடுங்கும் விளையாட்டா என்று குழப்பமாயிருந்தது. அவன் மௌனம் சாதித்தான். "நாங்களெல்லாம்... இல்லையா..?" என மல்லிகா சொன்னது ஏதாவது உள்ளர்த் தத்துடனாயிருக்கக் கூடுமோ? இவர்களெல்லாம் தாமராவின் இடத்துக்கு வரமுடியுமா என அவனால் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாது. யாரும் யாருக்கும் சமனல்ல. யாரையும் யாருடனும் ஒப்பிடவும் முடியாதுதான். அவரவர் வரையில் அவரவர்க்கு ஏதாவது விசேடம், உசத்தி உண்டு. ஆனால் ஒரு பெண் உள்ளத்தில் இடம் பிடித்து விட்டால், பிறகு அவள்தான் எல்லாமாகி விடுகிறது. தாமரா ஓர் அழகிய ஓவியமாய் இதயத்திற் பதிந்து போயிருக்கிறாள். அவளைச் சுற்றிய வட்டத்துக் குள்ளேயே அவனது உலகம் சுருங்கிப் போய் விட்டது.மதியம் சாப்பிட போகும் நேரம் மல்லிகா மீண்டும் வந்து அவனிடம் கேட்டாள்.

"கேவத?" (சாப்பிட்டீங்களா?)

"இல்ல....பிறகு சாப்பிடலாம்."

ஜயந்தியும் கூட வந்து நின்று அவனைச் சாப்பிட வருமாறு வற்புறுத்தினாள். தங்களது சாப்பாட்டுப் பார்சலை அவன் முன்னே வைத்தார்கள்.

"படகினியென் இன்ட எப்பா. (பசி கிடக்க வேண்டாம்.)" என்றார்கள். பெண்களின்

இயல்புதான் இது. "நாங்கள் இல்லையா?" என அவர்கள் கேட்டது கூட துன்பம் வரும்போது பக்கத்திற் துணையிருப்போம் எனும் உதவியுணர்வுடன் தான். தனக்காக அவர்கள் இரக்கப்படுவது அவனது மனதைத் தொட்டது. எனினும் அது அவனுக்கு வெட்கமளித்தது. யாருடைய இரக்கமும் தனக்கு வேண்டாம். மற்றவர்களுடைய இரக்கத்தைச் சம்பாதிக்கிற அளவுக்குத் தனது நிலைமை ஆகிவிடக் கூடாது என எச்சரிக்கை யடைந்தான். மற்றவர்களின் கேலிப் பேச்சுக் குரியவனாகும் அளவுக்கு நிலைமை போய் விடுமோ எனப் பயமாயுமிருந்தது. நிதானித்து நிதானித்து இயல்பு நிலையடைய முயன்றான். ஆனால் தாமரா தன்னை விட்டுப் போய் விட்டாள் என்ற நினைவு வந்து அடித்துப் போட்டு விடுகிறதே...என்ன செய்ய?

"யாரோ ஒருத்திக்காக உடலை வருத்த வேண்டாம்... பிரச்சினை என்னவென்றாவது சொல்லுங்க....தீர்க்கிற வழி பற்றி நாங்களும் கலந்து யோசிக்கலாம்." அவர்கள் சற்று கோபப்பட்டுத் தன்னுடன் பேசுவது போலவே அவனுக்குப் பட்டது. அவர்களது கோபம் நியாயமானதாயிருக்கலாம். எனினும் தாமராவைப் பற்றி விமர்சிக்க இவர்கள் யார்? தாமரா தனக்கு யாரோ ஒருத்தியா?

"நீங்க போங்க...என்ர அலுவல் பார்க்க எனக்குத் தெரியும்... நீங்க போங்க..."

மல்லிகாவும் ஜயந்தியும் சட்டென விலகிப் போக அவனுக்கு "சுருக்" எனத் தைத்தது. இப்படியொரு சீற்றம் எங்கிருந்து வந்தது எனக் கவலை மேலிட்டது. இயல்பாகவே தான் கோபமான சுபாவக்காரனல்ல. எல்லாவற்றுக்கும் தாமராதான் காரணம். உள்ளே நின்று ஆட்டி வைப்பதும் அவள் தான்... அவளுடைய நினைவுகள் தான்.

பட்டினி கிடப்பதும் தாமராவுக்காகத்தான். தாமரா போன நாளிலிருந்தே மதியச் சாப்பாடு இல்லை. வழமையாக அதிகாலையில் எழுந்து சமையல் செய்து சாப்பாட்டுப் பார்சல் தந்து விடுவாள் தாமரா. அந்தக் கரிசனை இப்போது எங்கே போனது? அதற்காகத்தான் தண்டனை. "வேலை செய்யிறவர் சாப்பிடாமல் கிடந்தால்.... நாங்கள் எப்படிச் சாப்பிடுறது." என நீதானே கேட்டாய் தாமரா? இதோ பார்...என் வயிற்றைத் தொட்டுப் பார்... காலையிலிருந்து ஒன்றுமில்லை. எனக்குப் பசிக்கிறது. இப்போது என்ன செய்வாய்?

கூட வேலை செய்யும் நண்பர்கள் ஒருவர் மாறி ஒருவராக வந்து அவனுடன் பேச்சுக் கொடுத்தார்கள். தன்னை ஆறுதல் படுத்துவதற்காகவே அவர்கள் வந்து பேசினாலும் அவனுக்கு எரிச்சலாயிருந்தது. "என்னைத் தனிய விடுங்கள்" எனக் கத்த வேண்டும் போலிருந்தது. "அவனைத் தனிய விட வேண்டாம்" என அவர்கள் பேசிக் கொள்வது காதிற் பட்டது. தனிமை

யிலிருந்தால் ஏதாவது மனக்கோளாறு தனக்கு ஆகிவிடும் எனக் கருதுகிறார்கள் போலிருக்கிறது. நேரத்துடனேயே வீட்டுக்குப் போய் விடலாமோ என நினைத்தான்.

வீட்டுக்குப் போவதா? வேண்டாம். அங்கு போய் அறையிற் கிடந்து என்ன செய்வது? அழுது தீர்ப்பதா? இது அழுது தீர்க்கக்கூடிய கவலையா? எந்தக் கணமும் அழுகை உடைத்துக் கொண்டு வரக்கூடும் என்றதொரு பயமும் அவனுள் ஏற்பட்டிருக்கிறது. இங்கே நிற்க வேண்டாம். போய் விடுவோம் - யார் கண்டது? இன்றைக்கு ஒரு வேளை நல்ல நாளாயிருக்கலாம். தாமரா ஏற்கனவே வந்து வீட்டில் நிற்கக் கூடும். ஆ...அப்படியானால் எவ்வளவு நன்றாயிருக்கும். ஷோர்ட் லீவ் போட்டு விட்டு வந்த போது வீடு முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்தது. பூட்டிய கதவின் முன்னால் நின்று "என்ன செய்யலாம்..." என ஒரு கணம் யோசித்தான். தாமரா நின்றால் தட்டாமலே கதவு திறந்து கொள்ளுமல்லவா? பேசாமல் திரும்பிப் போய் விடலாம் என வெறுப்பாயிருந்தது. சில சமயம்.... பஸ்சில் வந்த அலுப்பில் தாமரா உள்ளே அறையிற் படுத்திருப் பாளோ?...

கதவைத் தட்டினான். உள்ளேயிருந்து கதவைத் திறந்து அவனைக் கேள்விக் குறியுடன் பார்த்தாள் அம்மா.

"என்ன தம்பி.... நேரத்தோட?"

சற்றுத் தடுமாறினான். "தலையிடி..."

"தலையிடியா..?" பதில் கேள்வியில் அம்மா அனுதாபத்தைக் காட்டினாள். "போய் கொஞ்ச நேரம் படுங்க...சுகமாகும்."

"தலையிடியில்லை...என்...தலைவிதி" என எண்ணிக் கொண்டான்.

"தாமரா...இன்னும்...வரயில்லையா?" அம்மாவிடம் கேட்பதற்கு மனம் உந்தியது. இதென்ன கேள்வி? தாமரா வீட்டில் இல்லையென கண்கூடாகத் தெரிந்த பிறகும் மனம் நம்ப மறுக்கிறதா? ஒரு நப்பாசைதான்... அம்மாவின் வாயிலிருந்து தாமராவைப்பற்றி எதாவது எடுக்க முடியாதா என்று!

அறைக்குள் சென்று படுக்கையில் விழுந்தான். சற்று உருண்டான். எதிர்ச் சுவர்க் கொளுவியில் மாட்டப்பட்டிருந்த சேர்ட், லோங்ஸ் இத்யாதி ஆடைகள் கண்ணில் பட்டன. இன்னும் தோய்த்துலர்த்தப்படாமல் பல நாட்கள் கிடக்கும் குறையை அவை சொல்லின. சினத்துடன் எழுந்தான். ஆடைகளை எடுத்துக் கொண்டு பாத்றூமுக்குள் நுழைந்தான். சோப்பில் போட்டு ஊறவைத்து அவற்றை ஒவ்வொன்றாகக் கையிலெடுத்து உரஞ்சினான்.

கண்ணீர் உகுத்து வந்து கைகளில் கொட்டியது. உடைத்துக் கொண்டு வருவது

போல சகல புலன்களின் கட்டுப்பாட்டையும் இழந்து கண்ணீர் கொட்டியது. அழுகையை அவனால் அடக்க முடியவில்லை. பூட்டிய பாத்றூமிலிருந்து கண்களைத் துடைத்துத் துடைத்து அழுதான். கை ஆடைகளைக் கழுவும் வேலையைச் செய்து கொண்டிருந்தது.

தாமரா நின்றால் இந்த வேலை அவனுக்கு இல்லை. ஆடைகளை அவளே தோய்த்துலர்த்தி ரெடியாக வைத்து விடுவாள்.

வீட்டுக்கு வந்த ஆரம்ப நாட்களில், வார விடுமுறை நாட்களில் அல்லது சில இரவுகளில் வேலைமுடிந்து வந்த பிறகு ஆடைகளைக் கழுவும் வேலைகளைச் செய்வான். உலர்ந்த பின் அவற்றை மடித்து தலையணையின் கீழ் வைத்துக் கொண்டு படுத்தால் ஓரளவுக்கு அயன் பண்ணியது போன்ற திருப்தியைத் தரும். தாமரா ஒரு நாள் அதுபற்றி அவனிடம் கேட்டாள். "என்ன இது? அயன் பண்ணி வடிவாய்...போட்டிட்டுப் போகாமல்..? சேர்ட் கசங்கியிருக்குது... சரியில்லை."

"அதுக்கு எனக்கு நேரமுமில்லை..வேலை முடிஞ்சு வந்தால் அலுப்பு ஒருபக்கம். கூலி குடுத்துச் செய்யுமளவுக்கு ...நான் பெரிய சம்பளக்காறனுமில்லை...."

அன்று மாலை வந்து அறையுள் நுழைந்த போது கட்டிலில் புதிய கோலம் - தோய்த்

துலர்த்தப்பட்டு அயன் பண்ணப்பட்டு அழகாக அடுக்கப்பட்டுள்ள அவனது ஆடைகள்....

"தாமரா....என்ன இது...?"

அவனது கோபத்தைப் பொருட்படுத்தாது அவள் அழகாகச் சிரித்தாள். "எனக்கு ஒரு அண்ணா இருந்தால் செய்யமாட்டேனா?... அது போல வைச்சுக் கொள்ளுங்க... ஏன் வீணாய் இதுக்குப் போய் கனக்க யோசிச்சு தலையை உடைக்கிறீங்க?"

தடுத்தும் தாமரா கேட்கப் போவதில்லை. சரி அவள் விருப்பப்படியே செய்யட்டும் என விட்டிருந்தான். பல வருடங்களாக இப்படியொரு வேலை தனக்கு இருக்கிறதென்பதே அவனுக்கு மறந்து போயிருந்தது. அதைப் பெரிதுபடுத்து வதுமில்லை. இப்போது தாமராவின் உதவிகள் மனதைத் தொட்டு வருத்தியது.

குளித்து முடித்து அறைக்கு வந்து தலையை துவட்டியவாறு தனது சிறிய ரேடியோவை ஓன் பண்ணினான். "மன்னவனே அழலாமா... கண்ணீரை விடலாமா"- சில வேளைகளில் மன நினைவுகளுக்கும் நடைமுறைக்கும் ஏதோ தொடர்பு இருப்பது போல அர்த்தபூர்வமாக ஏதாவது நிகழ்ந்து விடுகிறது. அல்லது மனம் அப்படித் தொடர்பு படுத்திப் பார்த்து ஆறுதற் படுகிறது. "உன்னுயிராய் நானிருக்க...என்னுயிராய்

நீயிருக்க..." - தாமராவே தன்னை அவ்வாறு தேற்றுவது போலக் கற்பனை செய்தான். அது உண்மையாயிருக்குமானால், அதுமட்டும் போதும். தாமரா எங்கிருந்தாலும் பரவாயில்லை. தான் அவளை நினைத்து ஏங்குவது போல தாமராவும் தன்னையே நினைத்துக் கொண்டிருப்பாள் என்ற நினைவே ஒரு சுகமான வருடலாயிருந்தது.

தாமரா குறும்புகள் கொண்ட ஒரு விளையாட்டுப் பெண்ணாகத்தான் அவனோடு பழகிவந்தாள். அவனுக்கு, கூடப் பிறந்த சகோதரிகள் யாருமில்லை. அந்த இடத்தை அவள் நிரப்புவது போல சில சமயங்களில் அவனுக்குத் தோன்றியிருக்கிறது. ஒரு நல்ல சினேகிதியாக அவளை உணர்ந்திருக்கிறான். இப்போது பார்த்தால்...அதெல்லாம் பழைய கதைபோலப் படுகிறது. ஒவ்வொரு மூச்சும் ... தாமரா.....தாமரா....என்றே தியானிக்கிறது. கூட வேலை செய்யும் நண்பர்கள் "இவனுக்கு ஏதாவது ஆகிவிடுமோ" எனக் கருதியது போல இப்போது அவனுக்கே அந்தப் பயம் தொட்டு விட்டது. தனக்கு ஏதாவது ஆகிவிடுமோ...

அறையில் அடைந்து கிடக்காமல் வெளியே போவது நல்லது. லைபிரரிப் பக்கம் போகலாம். எதையாவது வாசிக்கலாம். யாராவது தெரிந்தவர் களைக் கண்டால் சற்று நேரம் வேறு விஷயங்கள் கதைக்கலாம்... தாமராவை மறக்கலாம்.

அறையை விட்டு வெளியேறிய போது அம்மா கடிந்து கொண்டாள். "என்ன தம்பி தலையிடி

என்று சொன்னீங்க...பிறகு... எங்க போறீங்க? படுத்து றெஸ்ற் பண்ணியிருக்கலாமே?"

"இல்லையம்மா...முக்கியமான ஒரு அலுவல் இருக்கு."

கால்கள் வெளியேறி நடந்தன. அவை அவனைத் தம் போக்கிற் கொண்டு சென்றன. அட, லைபிரரிக்குப் போக வேண்டுமென்று தானே வெளிக்கிட்டு வந்தது? இப்போது பஸ் நிலையத்துக்கு வந்து சேர்ந்திருப்பதை உணர்ந்தான்.

பஸ்கள் வருகின்றன, போகின்றன. சனங்கள் யார் யாரையோ தேடுகிறார்கள், ஓடுகிறார்கள். எதாவது ஒரு பஸ்சில் தொற்றிக் கொள்கிறார்கள். தங்களுக்குத் தேவையானவர்களைக் கண்டு முகம் மலர்ந்து பேசுகிறார்கள். தாமரா எந்த பஸ்சில் வருவாள் என அந்த றூட் நம்பரைத் தேடினான். அவள் வந்து இறங்கும் போது ஓடிப்போய் அவள் முன் நிற்க வேண்டும்..."தாமரா!".. அவளுக்கு ஆச்சரியமாகக் கூட இருக்கலாம். அவள் மீது பொய்க் கோபம் கொள்ள வேண்டும். "ஏன் இவ்வளவு நாளும் என்னை விட்டுப் போயிருந் தாய்?" அவள் அசந்து போய் விடுவாள். "அட இந்த ஆளுக்குக் கோபிக்கக் கூடத் தெரியுமா?" எனக் கண்களை அகல விரிப்பாள்.

சுமார் அரைமணித்தியாலத்துக்கு ஒரு தடவை அந்த றூட் பஸ் வந்து கொண்டிருந்தது. ஆனால்

தாமராதான் வரவில்லை. சரியான கர்வக்காரி போலிருக்கிறது. ஏன் அவளுக்குத் தன்மேல் அவ்வளவு கோபம்? அவள் மனம் நோகும்படி நடந்து கொண்டது என்ன? எவ்வளவுதான் எண்ணி எண்ணிப் பார்த்தாலும் ஒன்றும் பிடிபடவில்லை.

பஸ் வந்து நின்று ஆட்கள் இறங்கும் போது கடைசியாக ஆவது தாமரா இறங்கி வருவாள் எனக் காத்து நின்றான். தாமரா பாவம், முட்டியிடித்துக் கொண்டு மற்றவர்களுடன் இறங்க மாட்டாள். ஒதுங்கி நின்று கடைசியாகத் தான் இறங்கி வருவாள் எனத் தன்னையே தேற்றிக் கொண்டு ஒவ்வொரு முறையும் எதிர்பார்ப்புடன் நின்றான். ஆனால் ஒரு பஸ்சிலேனும் தாமரா வரவில்லை. பொறுமை இழந்து எரிச்சல் வந்தது. கடைசி ஆள் இறங்கும் வரை காத்து நிற்க முடியாது. இனி உள்ளே ஏறிச் சென்று பார்க்க வேண்டியது தான். பஸ் வந்ததும் இறங்குபவர்களையும் தள்ளிக் கொண்டு கண்டக்டரின் கத்தல்களையும் பொருட்படுத்தாது ஏறிவிடுவான். ஒவ்வொருவரையும் விலத்தி விலத்தி ஒவ்வொரு இருக்கையாகப் பார்த்துப் பார்த்து . . . "தாமரா . . . தாமரா" . . . இல்லை அவள் வரவேயில்லை! எனினும் மனம் தளராது வந்து பெஞ்சில் உட்கார்ந்து விடுவான். அடுத்த பஸ் எப்போது வரும் எனக் கண்கள் வழியை வழியைப் பார்க்கும்.

"யாரையாவது பார்க்க வெயிட் பண்ணு நீங்களா?"

அவன் திடுக்குற்று கேள்வி கேட்டவரை திரும்பிப் பார்த்தான். "ஓம்...இல்லை... இல்லையே." - தடுமாறினான்.

அவரது பார்வை மாறியது. அவனைச் சற்று வினோதமாகப் பார்த்தவாறு பக்கத்தில் நின்ற வருக்கு ஏதோ சொன்னார். அவனுக்குக் கூச்சமாயிருந்தது. பயமாயுமிருந்தது. குண்டு வைக்க வந்தவனென்று பொலீசில் மாட்டி விடவும் கூடும். அவர்களது பார்வையிலிருந்து ஒழித்து வேறு இடம் போய் நின்றான்.

அந்த றூட் நம்பர் பஸ் அடுத்தது எத்தனை மணிக்கு வரும் என அடிக்கடி ரைம் கீப்பரிடம் விசாரித்தான். ஒரு கட்டத்துக்கு மேல் ரைம் கீப்பர் பொறுமை இழந்து கத்தினார்.

"இது தான் கடைசி பஸ்..இனி வராது..போ...போ...யனவா...யன்ட...!"

சரி இனி அறைக்குப் போக வேண்டியது தான் எனத் தோன்றினாலும்.."ரைம் கீப்பர்...சும்மா கோபத்தில் கத்தியிருப்பான் இன்னும் கொஞ்ச நேரம் இருந்து பார்க்கலாம்." என நினைத்துக் கொண்டு அமர்ந்தான்.

அப்படி எவ்வளவு நேரம் இருந்தானோ... பொழுது இருளைக் கொண்டு வந்து மெல்ல மெல்ல அன்றைய நாளை மூடத் தொடங்கியது.

எழுந்து அறைக்கு நடந்தான். அறையும் தன் மகிழச்சிகளையெல்லாம் இழந்து கிடந்தது. என்ன செய்யலாம் என்று தோன்றவில்லை. மேசையில் சில புத்தகங்கள் கிடந்தன. ஏதோ ஒரு புத்தகத்தைக் கையில் எடுத்தான். வாசிக்க மனம் மறுத்தது. ஓரிரு பக்கங்கள் வாசித்த பின்னரும் என்ன வாசித்தேன் என்பது மனதில் பதியா மலிருப்பதை உணர்ந்தான். வாசித்த பகுதியை திரும்ப வாசித்தான். இது வேண்டாம் என மூடி வைத்து விட்டு இன்னொரு புத்தகத்தைக் கையிலெடுத்தான். அதிலும் மனம் லயிக்கவில்லை. தெருவில் யாராவது நடந்து வரும் காலடி ஓசை கேட்கும் போதெல்லாம் இருப்புக் கொள்ள முடியவில்லை. "அது தாமராவாக இருக்குமோ..." ஜன்னலூடு எட்டிப் பார்த்தான் – ஒரு வேளை தாமரா பயணம் செய்த பஸ் தாமதமாக வந்திருக்கக்கூடும்.

தாமராவின் காலடி ஓசை அவனுக்குப் பரிச்சயமானதுதான். அவள் நடந்து வருகையில் அந்த ஓசையைக் கொண்டே இது தாமரா எனத் தெரிந்துவிடும். இப்படித் தெருவில் போவோர் வருவோரையெல்லாம் அது தாமராவாக இருக்குமோ என்று பார்க்கத் தேவையில்லைத் தான். ஆனால் அதை மனசு கேட்க வேண்டுமே.

"தம்பி சாப்பிட வாங்க..." – அம்மாவின் குரல் வெளியே கேட்டது. கனவுகள் கலைந்தவன் போல் எழுந்தான். இன்று முழுதும் சாப்பிட வில்லை. சில நாட்களாக சரியான சாப்பாடும்

உறக்கமும் இல்லாததனாலோ என்னவோ அயர்ச்சியாயிருக்கிறது. உடல் தளர்ச்சியடைந்து காய்ச்சல்காரனைப் போல சோர்வாயிருக்கிறது. ஒரு பாட்டு நினைவில் வந்தது. குடிப்பதற்கு ஒரு மனமிருந்தால் அவளை மறந்து விடலாம். குடித்தால் தாமராவை மறந்திருக்கலாமா? அவனுக்குத் தெரியவில்லை. தாமராவை மறக்க முடியுமானால் இந்த வேதனைகள் அற்று இருக்கலாமா? அது எதுவும் தெரியவில்லை.

அம்மாவின் குரல் மீண்டும் அழைத்தது. சாப்பிட்டு விட்டு பனடோல் போடலாம் என எண்ணிக் கொண்டு எழுந்தான்.

சாப்பாட்டு மேசையில் அமர்ந்திருந்த போது அம்மா ஒரு புதிய செய்தியைச் சொன்னாள்.

"நாளைக்கு நான் அண்ணன் வீட்டுக்குப் போறன்...திரும்ப வாரதுக்கு ராவாகும்...."

அவன் எதிர்பாராத செய்தி அது. அண்ணன் வீடு என அம்மா குறிப்பிடுவது தாமராவுக்கு மாமா வீடு. அவனுக்கு உற்சாகம் பொங்கியது.

"ஏன் அம்மா...தாமராவைக் கூட்டி வரவா போறீங்கள்?" அந்தக் கேள்வியைக் கேட்டிருக்கக் கூடாது - தனது தவிப்பை அம்மாவுக்குக் காட்டிக் கொடுத்த மாதிரியாகி விட்டது. இந்த மனது அவசரக் குடுக்கை மாதிரி தன்னிச்சயைாகச் செயற்பட்டு விட்டது.

"தாமராவைக் கூட்டி வரத்தான் வேணும்... தம்பி!...அவளில்லாமல் எனக்கும் ஒரு கை முறிஞ்ச மாதிரித்தான் கிடக்கு...அங்க கோயில்ல திருவிழா நடக்குது... நாளைக்குத் தேர்... போனால் தேரையும் பார்த்திட்டு பிள்ளையையும் கூட்டிவரலாம்."

தாமரா போன பின்னர் தன்னில் ஏற்பட்ட மாற்றத்தை அம்மா கவனித்திருப்பாள் போலிருக்கிறது என நினைத்தான். "எனக்கும் கை முறிஞ்ச மாதிரி" என அம்மா குறிப்பிட்டது அந்த அர்த்தத்தில் தான் போலும். அம்மாவுக்கு எந்த வித்தியாசத்தையும் காட்டாமலிருக்க முயன்றதெல்லாம் தோல்வியிற்தான் முடிந்திருக்கிறது.

எது எப்படியோ தாமரா வரப்போகிறாள் என்ற செய்தியொன்றே போதும். நீண்ட நாட்களாகத் தண்ணீரைக் காணாதிருந்த செடியொன்று எதிர்பாராமல் வந்த மழையில் நனைந்தது போன்ற உயிர்ப்பும் சிலிர்ப்பும் ஏற்பட்டது. தாமரா விட்டுப் போனது ஏனென்று புரியாமல் தனக்குத் தானே எத்தனைக் காரணங்களைக் கற்பித்துக் குழம்பியிருக்கிறான். ஆனால் தாமரா கோயிற் திருவிழாவுக்குத் தான் போயிருக்கிறாள் என்பதை அறிந்ததும் மனம் இலகாகி விட்டது. தாமரா தனது குறும்புத் தனத்தை இந்த விஷயத்திலும் காட்டி விட்டாள் என ஒரு பொய்க் கோபமும் தோன்றியது. அவள் தன்னைச் சோதித்துப் பார்ப்பதற்குத் தான் இப்படியொரு வேடிக்கையைச்

செய்திருப்பாளோ? ஏற்கனவே சில சந்தர்ப்பங்களில் தாமரா தன்னை ஆழம் பார்க்க முயன்றது அவனுக்கு நினைவில் வந்தது. ஆனால் அவளுக்கு எதுவும் பிடிபடாமற் போயிருக்கும். அப்போதெல்லாம் மிக அவதானமாகத் தன்னைக் காட்டிக் கொள்ளாமலிருந்திருக்கிறான். தான் ஏன் அப்படி நடந்து கொண்டேன் என்பது அவனுக்குத் தெரியவில்லை. அல்லது அவனுக்குத் தன்னை இப்போது தான் புரிந்திருக்கிறது. அப்படிப் புரியப்படுத்தியது தாமராவின் பிரிவுதான். தாமரா அவனுக்கு வேண்டும். தாமரா இல்லாமல் அவன் இல்லை. தாமரா வந்ததும் இது பற்றியெல்லாம் பேச வேண்டும். ஒழித்துப் பிடிக்கிற விளையாட்டு இனியும் வேண்டாம். மனம் திறந்து பேசுவோம். "இது தான் நான். இது தான் என் மனசு" எனத் தாமராவுக்கு காட்ட வேண்டும்.

படுக்கையில்..கண்களை மூடிக் கொண்டு உறங்காமலே கனவுகளில் மிதந்தான். தாமரா வரும்போது அவளோடு எப்படிப் பேசுவது, எப்படிப் பொய்க் கோபம் கொள்ளலாம்...ஒரு நாளைக்காவது அவளோடு பேசாது முகத்தை உம்மென்று வைத்திருக்க வேண்டும். இந்த நினைவுகள் எல்லாமே இனிமையாயிருந்தது. மனதுக்குள் ஒரு மௌனகீதம் மீட்டப்பட்டுக் கொண்டிருக்கும் சுகம் கிடைத்தது.

டண்...டண்....டண்..

இத்தால் சகலருக்கும் அறியத் தருவது யாதெனில் தாமரா மீண்டும் வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டாள். அப்படியொரு சந்தோஷம் அவனுக்கு! காண்பவர்களிடமெல்லாம் அதைச் சொல்லி மகிழ வேண்டும் போல மனதுக்குள் ஒரு குதுாகலம் பிறந்திருந்தது. அது யாரைப் பார்த்தாலும் முகத்தை மலர்த்திப் புன்னகைக்க வைத்தது.

தொழிலகத்தில் சில நண்பர்கள் கேட்டார்கள்; "முகம் வெளிச்சிருக்கு...என்ன விஷேசம்?" அவன் ஏதும் பேசவில்லை. யாரிடமும் வாய் திறக்கவில்லை. ஒரு புன்னகையை மட்டும் கேட்டவர்களுக்குப் பதிலாகக் காட்டினான். சொல்லாமல் மனதுக்குள் பூட்டிக் கொண்டு திரிவதும் ஒருவித சுகம் தான். மல்லிகா நேரடியாகவே கேட்டு விட்டாள். "என்ன வீட்டுக்காரி வந்தாச்சா..? முகத்தில எல்லாம் தெரியுது."

அவன் முகம் சிவந்து கூச்சமடைந்தான். மல்லிகா இரட்டை அர்த்தத்தில் வீட்டுக்காரி எனக் குறிப்பிட்டது மகிழ்ச்சியளித்தது. தாமராவை இப்போதெல்லாம் தன் வீட்டுக்காரியாக.. மனைவியாக...கற்பனை செய்து பார்க்கத் தொடங்கியிருந்தான்.

அவனுக்கு வீட்டுக்குப் போக வேண்டும் போலிருந்தது. தாமராவுடன் காலையில் சரியாகப் பேசாமல் வந்தது மனஉளைச்சலைத் தந்தது.

தாமரா அதிகாலையிலேயே எழுந்து குளித்து முகமலர்ச்சியுடன் அவன் அறையிலிருந்து வெளிப்பட்டபோது எதிர்ப்பட்டாள். அவன் அதைக் கண்டு கொள்ளாதவன் போல குளியலறைப் பக்கம் போய் விட்டான். சாப்பாட்டு மேசையில் அவள் பேச எத்தனித்த போதெல்லாம் அவன் அவளை அலட்சியப்படுத்தினான். வேலைக்குக் கிளம்பிய போது அவள் சாப்பாட்டுப் பார்சலைக் கொடுத்தாள். அவன் "நான் கடையில பார்த்துக் கொள்ளுறன்....தேவையில்லை." எனப் புறக்கணித்து வந்து விட்டான். அவளை மனம் நோகச் செய்வதில் ஒரு விளையாட்டுத்தனம் இருந்தது. மாலையில் வந்து அந்தக் கோப மெல்லாம் சும்மா விளையாட்டு எனத் தெரியப் படுத்தும்போது திறில்லாயிருக்கும்.

ஆனால் இப்போது கவலை மேலிட்டது. ஒருவேளை தாமராவும் கவலையில் சாப்பிடாமலே பார்த்துக் கொண்டிருப்பாளோ? மனம் சஞ்சலப் பட்டது. தாமராவிடம் நிறையப் பேசவேண்டும். "நீயில்லாமல் நான் எப்படித் தவித்துப் போனேன் தெரியுமா?" என அவளுக்குப் பக்கத்தில் இருந்து கதை கதையாகச் சொல்ல வேண்டும். நாளைக்கு லீவ் போடலாமா?

"உங்களோட....ஒரு....விஷயம்..பேசவேணும்."

அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. எப்படி அவளிடம் அந்தக் கதையை ஆரம்பிப்பது என்று

புரியாத தவிப்பு அவனிடமிருந்தது. தாமரா முந்திக் கொண்டு விட்டாள். அவளும் அதே போன்ற மன நிலையில் இருந்திருக்கிறாள். எனவே தனது பிரச்சினை மிக ஈஸியாக முடியப் போகிறது என்ற நம்பிக்கை துளிர்த்தது அவனுக்கு.

"அதை..எப்படிச் சொல்லுறதென்று.. தெரியாமலிருக்கு!"

தாமரா பேசுவதை நிறுத்தி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"சொல்லுங்கோ..தாமரா!"

"எனக்கு...எல்லாம் ஒரே...குழப்பமாயிருக்கு .. எப்படி முடிவு எடுகிறதென்றே தெரியல்ல..அது தான் உங்களிட்டையே கேட்கலாம் என்று நினைச்சன்."

அவனது மனம் இறக்கையை விரித்துப் பறந்தது. மிதந்து பறக்கும் சுகத்தை அனுபவித் தான். "எனக்குத்...தெரியும்...தாமரா... கிட்டத்தட்ட..என்ர நிலைமையும் அது தான்!"

தாமரா அவசரப்பட்டாள், "முதல்ல நான் சொல்லுறதைக் கேளுங்க.." எனினும் சொல்லாமலே மௌனம் காத்தாள். பின் தொடர்ந்தாள்... "மாமாவின் மகனை உங்களுக்கு நினைவிருக்கா?... இங்கை வீட்டில ஒரு முறை வந்து போனவர்..ரஜீவன்?" எதிர்பாராத ஒரு

கொந்தளிப்பு. பறக்கவும் முடியாது இறக்கை வலித்தது.

"நினைவிருக்கு...சொல்லுங்கோ.."

"இன்ஜினியரிங்..ஸ்கொலசிப் கிடைச்சு.. அமெரிக்காவுக்குப் போனவர்.. நாலு வருசத்துக்கு முதல்ல...பயணம் சொல்ல வந்த நேரம் தான்... இங்க வீட்டில கொஞ்ச நாள் நின்றவர்.. போய்...கொஞ்ச காலத்தில் எனக்கு ஒரு கடிதம் போட்டிருந்தார் – தனிமை..ஹோம் ஸிக்...... விரக்தி..இப்பிடிக் கனக்க எழுதி. தனக்கு அடிக்கடி கடிதம் எழுதச் சொல்லி.."

"நீங்கள் ..எழுதினீங்களா?" – அவன் முகம் பரிதாபகரமாக மாறியது.

"நான்...எழுதயில்ல... பிறகு அடிக்கடி அவற்றை கடிதங்கள் வந்தது..பாவம் தூர தேசத்தில் தனிய இருக்கிறவர்.. ஆறுதலா யிருக்கட்டுமென்று எழுதினன். காலப்போக்கில அவரது கடிதங்களில் தொனி மாறி வந்தது. அவர் என்னை விரும்புகிறாராம்...எனக்குக் குழப்ப மாயிருந்தது. கடிதம் எழுதாமல் விட்டன். ஆனால் அவர் விடயில்லை.. இப்ப என்னவென்றால்... தான் ஃபைனல் எக்ஸாம் எடுக்க மாட்டன் என்று முரண்டு பிடிக்கிறார். கடிதத்துக்கு மேல கடிதமாய் வருது... நான் நல்ல முடிவு சொன்னால் தான் பரீட்சை எழுதுவாராம்...."

அவனது குரல் அடங்கிப் போய் வெளிப் பட்டது "நீங்க...என்ன பதில் எழுதினீங்க?"

"ஒன்றும் எழுதயில்ல...அதுதான் உங்களைக் கேட்கிறன். உங்களை மறந்திருக்கலாமோ என்று பார்க்கத்தான் மாமா வீட்டில போய் நின்றன்..."

பறவை சுடப்பட்டு விழுந்தது. இதயம் துடிதுடித்தது...இன்னும் உயிரைத் தக்க வைத்திருக்க முடியுமா எனத் தத்தளித்தது. அவன் பேயறைந்தவன் போல தாமராவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"நீங்கள் இதுக்கு ஒரு முடிவு சொல்ல வேணும்."

நிதானித்து கண்களை மூடி, மூச்சை ஆழமாக இழுத்து, இலகு நிலைக்கு வர முயன்றான்.

"தாமரா..நீங்கள்..ரஜீவனை..விரும்பு நீங்களா?"

"இல்ல...அப்படியொன்றும் இல்ல.." – அவளிடமிருந்து சட்டெனப் பதில் வந்தது.

சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தான். ரஜீவனின் முரட்டுத்தனமான அன்பும், உண்மை யிலேயே பரீட்சை எழுதாமல் விட்டால் ஏற்படப் போகும் இழப்பும் ஒரு கணம் நினைவில் வந்து போயின. பின்னர் கேட்டான். "சரி இதுக்குப்

பதில் சொல்லுங்கோ..ரஜீவன் உங்களை ஆழமாகக் காதலிக்கிறார்...நீங்கள் விரும்பயில்ல ...என்று சொன்னால் அது அவரை ஏதாவது விதத்தில்... பாதிக்கக் கூடும். அவரது வாழ்க்கை மோசமாய்ப் போய் விடவும் கூடும்...அதை உங்களால் தாங்கிக் கொள்ள முடியுமா?"

"இல்ல..தாங்க முடியாது..அவரை நினைச்சாலும் பாவமாய்த்தானிருக்கு.."

"அப்ப....உங்கடை மனசில அவருக்காகவும் ஒரு இடம் இருக்கு"

தாமரா அவன் கூறுவதை மறுக்க முடியாதவள் போல மௌனித்திருந்தாள். பின்னர் ஒரு பெருமூச்சுடன் சொன்னாள். "நான் என்ன செய்யேலும்? என்னால யாரும் ஹேர்ட் பண்ணுப்படக்கூடாது..அது தான் என்ட கவலை..."

அவன் தாமராவையே சற்று நேரம் வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்தப் பார்வையில் இரக்கம், கருணை... கவலை..ஏக்கம்...ஏமாற்றம்.

தனக்கு ஒண்ணே ஒண்ணு... கண்ணே கண்ணு என்று.. அது தாமரா தான் என்று.. அவனது காதல் உணர்வுபூர்வமாயிருந்திருக்கிறது. ஆனால் தாமரா காதலை அறிவுபூர்வமாய்

அணுகியிருக்கிறாள். ரஜீவனைத் தெரிவு செய்வதால் அவளது வாழ்க்கை இன்னும் சிறப்பாக அமையக்கூடும். அவளது மனதில் இவரா ...அல்லது..அவரா என்ற சொய்ஸ் இருந்திருக்கிறது. எனவே முடிவெடுப்பதும் அவனுக்கு மிக ஈஸியாயிருந்தது. இதுவும் ஒரு வித மனக்கணிதம் தான். தாமராவைக் கடைசி முறையாகப் பார்ப்பது போன்ற சோகத்துடன் பார்த்துச் சொன்னான்.

"எக்ஸாமை...எழுதச் சொல்லி... ரஜீவனுக்குக்...கடிதம்..எழுதுங்கோ."

(மல்லிகை 2000)

❑

# மரநிழல் மனிதர்கள்

அக்கா சற்று சந்தோஷமான மன நிலையில் இருப்பது போலத் தென்பட்டது. இன்று ஷெல்லடிச் சத்தம் இல்லை. இடம் பெயர்ந்தவர்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பலாம் என்ற அறிவித்தலும் வந்திருக்கிறது. சொந்த இடங்களைப் போல் சொர்க்கம் வேறேது?

இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்த உறவினர்கள், நண்பர்கள், தெரிந்தவர்கள் என்ற ஒரு தொகைப் பேர் பூரணி மாமி வீட்டுக்கு வந்து சேர்ந்தனர். இவ்வளவு சனத் தொகையையும் மாமி வீடு தாங்காது என்று சகலருக்கும் தெரியும். ஆனாலும் வேறு வழியில்லை. மாமி முகம் கோணாது எல்லோரையும் ஆதரித்தாள். வேளாவேளைக்கு சாப்பாடு போட்டாள்.

ஒரு ஷெல்லடிச் சத்தம் கேட்டாலே வயிற்றுக் குழப்பம் வருகிற கேஸ் அக்கா. இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் ஷெல் பொழிந்த போது உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடி வந்தவர்களில் அக்காவும் ஒருத்தி. சனங்கள் வீதியில் மூச்சு விட முடியாத

நெருக்கத்தில் ஓட....ஓட.... பாதையின் இருமருங்கும் ஷெல்கள் விழுந்து வெடித்தன. உயிரிழந்தவர்களையும், கை கால்கள் தலைகள் துண்டிக்கப்பட்டு துடித்துக் கொண்டிருக்கும் உடன் பிறப்புக்களையும் அந்தந்தப்படியே விட்டு ஓடி....ஓடி... ஷெல்கள் செய்த கொடுமைகளை பேசிப் பேசியே அக்கா மாய்ந்து போனாள். வந்து இரண்டு நாட்களாக ரொய்லெட்டும் ஆளுமாகத் திரிந்தாள். "பிள்ளை சரியாகப் பயந்து போனாள்." என அம்மா அடிக்கடி கவலைப் பட்டாள். அக்கா இன்று நோர்மலாயிருக்கிறாள் என்பதை திரும்பவும் நான் சொல்ல வேண்டியிருக்கிறது.

அக்காவைச் சுற்றி சில பழசுகளும், ஒரு சில இளவட்டத்தினரும், குஞ்சுகுருமான்களும் என ஒரு கூட்டம் சேர்ந்திருந்தது. விளக்கு வசதி குறை வானபடியால் வேளைக்கு சாப்பாட்டை முடித்துக் கொண்டு....பின்னர் இப்படி சுற்றியிருந்து கதையளக்க நிலா வெளிச்சம் உதவி செய்யும். இந்த இரண்டொரு நாட்களிலேயே தனது பேச்சு வல்லமையால் அக்கா வந்தவர்களிடம் செல்வாக்கு பெற்றிருக்கிறாள் என்பதையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

அக்கா தொண்டையை சற்று செருமி சரிபார்த்துக் கொண்டாள். பேசுவதற்கு முன் மைக் ரெஸ்ரிங் செய்வது போல முன்னெச்சரிக்கை யாக அங்குமிங்கும் பார்த்து "தம்பி இருக்கிறானா?"

என்பது போல நோட்டமிட்டாள். நான் அவள் கண்களில் படாமல் ஒதுங்கியே இருந்தேன். எனக்கு முன்னால் எப்போதுமே அவள் அடக்கி வாசிப்பாள். அவளது பேச்சுக்கு நான் ஏதாவது அபிப்பிராயம் சொன்னால் "இவனுக்கு வயசுக்கு மீறின வாய்" என முறைப்படுவாள். எனக்கு வாய் பெரிசல்ல. ஆனால் சில வேளைகளில் சமயா சந்தர்ப்பம் தெரியாமல் அக்கா பேசுவதை கேட்க எரிச்சல் வரும்.

"உங்களுக்குத் தெரியுமா?... இந்த உலகம் ஒரு பேரழிவிலை இருந்து தப்பியிருக்குது. எந்த நேரமும் அழியக் கூடிய உலகத்திலதான் நாங்கள் இருந்து சீவிக்கிறம்... அடிபடுகிறம்."

அக்கா இன்றைக்கு ஒரு சமயப் பேருரை நிகழ்த்தப் போகிறாளோ என எனக்குச் சந்தேகம் தோன்றியது.

அக்காவின் பேச்சுக்கு எதிர்க் குரலாக;

"அடிபடுகிறது சீவிக்கிறதுக்காகத்தானே?" என ஒரு குஞ்சின் குரல் எழுந்தது.

"வாயைப் பொத்திக் கொண்டு சொல்லுகிறதைக் கேளடா." தனது மகனை அடக்குமுறை செய்தார் சின்ராஸ் அண்ணர். அவருக்குக் கதை கேட்கிற சுவாரஸ்யம்.

"தம்பி சொல்லுறது சரி. இந்த உலகத்திலை உள்ள உயிரினங்களெல்லாம் சீவிக்கிறதுக்காக

அடிபட வேண்டித்தான் இருக்கு. பறவைகள் மிருகங்கள் கூட இப்படித்தான், தங்கட இனத்தைக் காப்பாற்ற...தற்பாதுகாப்புக்காக மற்ற விலங்குகளோடை அடி படுகுது."

ஆரம்பத்திலேயே எழுந்த எதிர்புக் குரலை அக்கா சாதுரியமாகச் சமாளித்து விட்டாள்.

"என்றாலும் தங்கச்சி.....வாயோரியாய் இதென்ன கதை? நாலு பக்கத்தாலையும் ஷெல் அடிக்கிறாங்கள்....நீயும் அழியப் போகுது அது இதென்டு கொண்டு?...வேறை ஏதாவது நல்ல கதை சொல்லு"

"பயப்படாதையுங்கோ ஆச்சி. இதுவும் நல்ல கதைதான் கேளுங்கோ!" சொர்ணம் ஆச்சியைச் சமாதானப்படுத்தி விட்டுத் தொடர்ந்தாள் அக்கா.

"இந்த அண்டவெளியில கோடானு கோடி விண்கற்கள் சுற்றிக் கொண்டிருக்கு. அவை சின்னஞ் சிறிய குறுனிக் கற்கள் போன்ற அளவுகளில் இருந்து மிகப் பிரமாண்டமான அளவுகளிலையும் இருக்கு. சிலவற்றை உபகோள்கள் என்றும் சொல்லுகினம். அந்த அளவுக்கு மிக மிகப் பிரமாண்டமானவை.

".....சில வேளைகளில் இவை பாதை விலகி பூமியை நோக்கி வந்து மோதவும் கூடும். தற்செயலாகத்தான்! அப்படி மோதினால்.... முடிஞ்சுது கதை!... எல்லாரும் ஒரேயடியாய் போக வேண்டியது தான்!.

"என்னடி தங்கச்சி...இவங்கள் அடிக்கிற ஷெல்லை விடப் பெரிய சாமானே.....?"

"பெரிசென்றால் குட்டிச் சந்திரன்கள் என்று சொல்லக்கூடிய அளவுக்கு பெரிய விண் கற்கள்...அஸ்ற்றொய்ட் என்று இங்கிலிசில சொல்லுவினம்...."

"....இது பூமியில சன சந்தடியுள்ள இடத்திலை மோதினால் உடனடியாய் ஐம்பது மில்லியன் ஆட்கள் செத்துப் போவினம். எரிமலைகள், பூகம்பம் ஏற்படும். கடலில் மோதினால் பத்துப் பதினைந்து மைல் உயரத்துக்கு தண்ணீர் கொந்தளித்து எழும்பும்...புயல் காற்று வீசும். பூமிக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் கிளம்புகிற தூசித் துணிக்கைகள் பூமியைச் சுற்றி மூடிக் கொள்ளும். சூரிய வெளிச்சம் தடுக்கப்பட பூமியை இருள் சூழும். கடுமையான குளிர் ஏற்படும். ஆயிரக்கணக்கான வருஷங்களுக்குத் தொடர்ந்து அமில மழை பொழியும். உயிரினங்களெல்லாம் வாழ முடியாது அழிஞ்சு போகும்."

"கடவுளே!" என்று பெருமூச்செறிந்தாள் சொர்ணம் ஆச்சி. பிறகு சொன்னாள். "தங்கச்சி எல்லாருமாகச் சேர்ந்து கோளறு திருப்பதிகம் பாடுவம்....வேயுறு தோழிபங்கன்....விடமுண்ட கண்டன்....மிக நல்ல வீணைதடவி....."

"ஆச்சிக்கு விசர்! பிறகேனணை ஷெல் அடிக்கிறாங்கள் எண்டு ஓடி வந்தனீ....?

வீணையைத் தடவிக் கொண்டு அங்கையே இருந்திருக்கலாமே?" சின்ராஸ் அண்ணரின் மகன் ஆச்சிக்கு பகிடி விடுகிறானா...அல்லது சினப்படுகிறானா என்று புரியாமல் இருந்தது.

"ஓமடா தம்பி!.... இந்த யாழ்ப்பாணத்துச் சனங்கள் எவ்வளவு விரதம் இருக்கிறதுகள்? கோயில் குளமென்று திரியிறதுகள். அதுகளுக்குத் தானே இந்த சோதனைகள் எல்லாம்?" பொறுக்க முடியாதவள் போல இப்போது வாயைத் திறந்து பேசியவள் திலகம் அன்ரி.

"சோதனைகள் தற்காலிகமானவை. கடவுள் எங்கடை உறுதியைச் சோதிக்கிறார். இருந்து பாருங்கோ...தர்மம் தான் கடைசியிலை வெல்லும்."

சற்று நேரம் மற்றவர்களைப் பேச விட்டு மௌனமாயிருந்த அக்கா "சரி எங்கட கதைக்கு வருவம்" என அவர்களது கவனத்தைத் திருப்ப முயற்சித்தாள்.

நான் இன்னும் அக்காவின் முன் தோன்றி அவளது கவனத்தைத் திருப்ப முயலாமல் சுவர் மறைவிலிருந்து சகலதையும் கேட்டுக் கொண்டிருந்தேன். உலகம் அழிவது பற்றி அக்கா மேற்கொண்டு சொல்லப் போகும் சங்கதிகளை கேட்கும் ஆர்வம் எனக்கு உள்ளூர இருந்தது.

உலகம் அழியும் என்ற கதை புலுடா என்று தான் நான் முன்னர் எண்ணியிருந்தேன். உலகம்

நிரந்தரமானது, அழிவற்றது என எல்லோரையும் போலவே நானும் நினைத்திருந்தேன். சின்னஞ் சிறுவனாக இருந்த போது .... உலகம் ஒரு நாள் இருள் சூழ்ந்து அழியப் போகிறது ...புயல் காற்று பூகம்பம் வந்து எல்லா உயிர்களும் அழிந்து போகும் என்று சொல்லப்பட்ட வேறு வேறு கதைகளைக் கேட்டிருக்கிறேன். அவை அப்போது ஒரு விதப் பயத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றன. உலகம் அழிந்தால் அம்மாவும் செத்துப் போவாளே!...கடவுளே உலகம் அழியக் கூடாது..... நாங்களெல்லாம் சாகக் கூடாது!

.....அம்மா சாகக் கூடாது!.........என அம்மாவை நினைத்து நினைத்து அழுதிருக் கிறேன்.

"அம்மா உலகம் அழிஞ்சு போகுமா?... நாங்களெல்லாம் செத்துப் போவமா....?"

"ஆரப்பு சொன்னது இப்படி?....நாங்கள் ஒரு காலும் சாகமாட்டம். ஆரோ உன்னை பயப்படுத்திறதுக்குச் சொல்லியிருக்கினம்... நம்பாதை.....!"

அம்மா சொன்னதை அப்படியே நம்பினேன். மனசில் தைரியம் வந்தது. ஆனால் இப்போது அக்கா என்ன புதுக் கதை சொல்லுகிறாள்...? தனது கையாலும் கூடக் குறையப் போட்டுச் சொல்லக்கூடிய வல்லமை படைத்தவள் அக்கா

என்ற ரகசியமும் எனக்குத் தெரியும். அதனால் அதிகம் அலட்டிக் கொள்ளாமல் இருந்தேன் நான். எனினும் அக்கா சொல்வதைத் தொடர்ந்து கேட்டேன்.

"ஆதிகாலத்தில உலகத்தில டைனோசர் என்ற பயங்கரமான பிரமாண்டமான விலங்குகள் வாழ்ந்தன. இவையெல்லாம் ஒரேயடியாய்ச் செத்து அழிஞ்சு போனதுக்குக் காரணம் இது போல ஒரு விண்கல் பூமியில மோதி, அதனால் தொடர்ந்து ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு அமில மழை பெய்து உயிர் வாழ முடியாத நிலமை ஏற்பட்டது தான் என்று சொல்லுகினம். பிறகு காலப்போக்கில தோன்றிய புதிய விலங்குகள் தான்....நாங்கள்.

"அந்த நிலமை எங்களுக்கும் வரக்கூடும் என்பது தான் விஞ்ஞானிகளின்ர கவலை... சில வருஷங்களுக்கு முந்தி ஒரு பெரிய விண்கல் பூமியை நோக்கி வந்தது. இந்தா கதை முடியப் போகுது என்று நினைக்கிற தருணத்திலை பூமியில இருந்து ஒரு நானுற்றைம்பது மைல் வித்தியாசத் திலை விலத்திக் கொண்டு போட்டுது. அதனாலை தப்பிப் பிழைச்சம்."

"என்ன தங்கச்சி தப்பிப் பிழைச்சம் என்டு சொல்லுறாய்....இஞ்சாலை இவன்கள் கண்மண் தெரியாமல் ஷெல் அடிக்கிறான்கள். ஆரார் இருப்பமோ ஆரார் போகப் போறமோ...? இப்பிடி அலைஞ்சு திரிஞ்சு இடி பட்டு சாகிறதை விட

அப்படி எல்லோரும் ஒரேயடியாய் போய் சேர்ந்திருக்கலாம்." திலகம் அன்ரி இனியும் ஆத்தாத சோகத்தில் கதைத்தாள்.

"கவலைப்படாதையுங்கோ அன்ரி...இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் அடிக்கப் போகிறான்கள்?.... இருந்து பாப்பம்..!" ஷெல் என்ற சொல் கேட்டாலே வயிற்றைக் கலக்குகிறது என்று சொல்லுகிற அக்காவே இப்படிச் சொன்னது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அல்லது திலகம் அன்ரியை ஆறுதல் படுத்துவதற்காக அப்படிக் கதைத்தாளோ தெரியாது.

சொர்ணம் ஆச்சி ஈனஸ்வரமான குரலில் மெல்லக் கேட்டாள்.

"தங்கச்சி.....அந்த விண் கல்லோ...விண் கில்லோ....அது விலத்திக் கொண்டு போட்டுது தானே....இனிப் பயமில்லைத்தானேணை?"

"இல்லையென்டு சொல்லேலாது ஆச்சி. இதே மாதிரி திரும்பவும் நடக்கக் கூடும் இப்பிடி ஒரு பேரழிவு ஏற்படாமல் தடுக்கிறது எப்படி யென்டு உலகத்திலையுள்ள விஞ்ஞானிக லெல்லாம் தலையைப் போட்டு உடைச்சுக் கொண்டிருக்கினம்."

"அவங்கள் என்னவும் செய்யட்டும் தங்கச்சி...நாங்கள் கோளறு திருப்பதிகம்

பாடுவம்...முந்தியொருக்கால் எட்டுக் கிரகங்கள் சேர்க்கையின் போது உலகம் அழியப் போகுது எண்டுதானே சொன்னவை!... நாங்களெல்லாம் வீடு வீடாய் இருந்து கோளறுதிருப்பதிகம் பாடினனாங்கள். ஒரு வில்லங்கமும் நடக்க யில்லைத்தானே..... பத்தோ பன்னிரண்டு நாட்களுக்கு கடுமையான மழை பெய்திச்சுது அவ்வளவு தான்.....!"

"என்னணை அமில மழையோ....?" எனக் கேட்டு விட்டு சிரித்தான் சின்ராஸ் அண்ணரின் மகன்."ஆச்சி உப்பிடித் தேவாரம் பாடி அகிம்சை முறையிலை போராடி எங்கட ஆட்கள் களைச்சுப் போச்சினம். கண்ட பலனும் ஒன்டுமில்லை. முள்ளை முள்ளாலைதான் எடுக்க வேணும். கீதையிலை கிருஷ்ண பரமாத்மா என்ன சொல்லுறார் தெரியுமா?.... அக்கிரமங்கள் தலைதூக்கும் போது அவற்றை அழிப்பதற்காகப் பாவிக்கப்பட வேண்டிய ஆயுதம் பலாத்காரம் தான்."

"அட....!" எனக்கு இன்னொரு முறை ஆச்சரியம் - சின்ராஸ் அண்ணரின் மகனைப் பார்த்து! கீதை என்பது பகவானைப் பற்றிய பக்தி சிரத்தையான புத்தகம் என்றுதான் நினைத்திருக்கிறேன். அதில் இப்படியெல்லாம் தத்துவங்கள் இருக்கிறதா?... அதை இவனும் அறிந்து வைத்திருக்கிறானே! ஆச்சியின் பாசையிலேயே சொல்லி மடக்கி விட்டானே என்றும் தோன்றியது.

ஆச்சிக்கு எரிச்சல் போலும்; "தம்பி...இளம் கன்று பயமறியாது...உனக்கு நான் சொல்லுறது பகிடியாயிருக்கோ?" என்றாள்.

"தம்பி சொல்லுறது சரிதான்." என அக்கா நிலைமையைச் சமாளித்தாள்.

"விஞ்ஞானிகள் அது போல ஒரு முடிவைத்தான் எடுத்திருக்கினம். விண்கல் பூமியை நோக்கி வரயிக்கை அதை எதிர்த்து ஏவுகணை போல ஒன்றை அனுப்பிறது. அது அண்ட வெளியிலை அந்த விண் கல்லை உடைச்சுச் சிதறடிக்கும். அதிலையும் சில கற்கள் .... உடைஞ்ச சிதறல்கள் .... பூமியை நோக்கித் தான் விழும். என்டாலும் அதாலை பெரிய பாதிப்பு இராது. இன்னொரு விஷயம், இப்பிடி ஒரு கல் பூமியை மோதப் போகுது என்டு கடைசி நேரத்திலை... நாப்பத்தெட்டு மணித்தியாலத்துக் குள்ளதான் தெரிய வரும். அதுக்குள்ள நடவடிக்கை எடுக்க வேணும்."

"கடவுளே!...." என்றாள் சொர்ணம் ஆச்சி....

"எடி தங்கச்சி...அதுகும் இந்த ஷெல்லைப் போலையெல்லோ இருக்குது....சொல்லாமல் பறையாமல் இருந்தாப் போல சத்தம் கேட்குது. வந்து விழ முதல்...என்ன செய்யிறது.... எங்கை ஓடுறது என்டே முடிவெடுக்கேலாமல் இருக்கு..."

"பயப்படாதயுங்கோ ஆச்சி...அப்படியொரு விண்கல் பூமியில மோதுறதுக்குரிய சந்தர்ப்பம் எத்தனையோ மில்லியன் வருசத்தில ஒன்று தானாம். சொல்லப் போனால் இன்னும் கோடி வருஷங்களுக்கு இப்படி நடக்கவே மாட்டுது. விஞ்ஞானிகள் சொல்லுகினம் அப்பிடி நடந்தாலும் அது மோத விடாமல் தடுக்க தங்களாலை நடவடிக்கை எடுக்கேலும் என்டு."

இப்போது பூரணி மாமியின் குரல் கேட்டது. "நானொரு விஷயம் கேட்கிறன்...இவ்வளவு கோடி வருஷங்களில ஒருகால் தற்செயலாக நடக்கக் கூடிய பேரழிவிலை இருந்து மனிச இனத்தை எப்பிடிக் காப்பாத்திறது என்டு உலகத்திலை உள்ள விஞ்ஞானிகள் எல்லாம் யோசிக்கினம். அது எனக்கு விளங்குது. மனிச உயிர், மனிச வாழ்க்கை அவ்வளவு மகத்துவ மானது. ஆனால் உந்த உலகத்திலை உள்ளவை க்கு இஞ்ச யாழ்ப்பாணத் திலை நடக்கிற சங்கதியள் தெரியாதோ?.... மக்கள் குடியிருப்புக்களை நோக்கித்தானே ஷெல் அடிக்கிறாங்கள். குழந்தை குட்டிகளோடை குடல் தெறிக்க ஓட..ஓட... ஷெல் விழுந்து எல்லாரை யும் அழிக்குது?..." அக்கா பதில் பேச முடியாதவள் போல் மௌனித்திருப்பது தெரிந்தது.

சின்ராஸ் அண்ணர் சொன்னார். "உலகத்திலை உள்ளவையெல்லாம் இந்த

நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கினம் என்டு தானே செய்திகளிலை போடுகினம்" அவர் எரிச்சல் பட்டுப் போய் நிற்கிறார் என்பதை அவரது குரல் தெரிவித்தது. "இந்த நிரந்தர மில்லாத அழிஞ்சு போகக் கூடிய உலகத்திலை இருந்துதானே சில பேர் உங்கட உரிமையைத் தரேலாது அது இது என்டு சொல்லுகினம். ஷெல் அடிக்கினம். அழிச்சொழிக்கப் பாக்கினம்." இதற்கு அக்கா பதில் சொல்லவில்லை.

"அதுதானே தங்கச்சி....எவ்வளவு சனங்கள்...மரநிழலிலையும் தாவாரங்களிலையும் சீவிக்குதுகள். உந்த ஷெல் செய்கிற அநியாயம் தானே அதுகள் வீடு வாசலுக்குப் போகேலாமல் இருக்கு. அப்போதை பாத்தன்... ஒரு மனிசி றோட்டுக் கரையில் மரத்துக்குக் கீழே இருந்து பிள்ளைக்குப் பால் குடுக்குது. மற்றக் குழந்தையள் பக்கத்திலை அழுவாரைப் போல நிக்குதுகள்.... திண்டுதுகளோ இல்லையோ.... நான் நல்லாய் அழுதிட்டன். எத்தினை சனங்கள் தங்கட சீவிய காலத்திலேயே வீட்டிலையிருந்து தூக்காத இறங்குப் பெட்டியளையும் சுமந்து கொண்டு அங்கையும் இஞ்சையும் அலைஞ்சு திரியுது கள்...கடவுளே!" திலகம் அன்ரி விக்கலெடுத்து அழுவது கேட்டது.

அன்ரியின் மகள் சொன்னாள்.

"எனக்கென்றால் இந்த ஷெல் அடியை எப்பிடி நிப்பாட்டிறதென்டுதான் யோசனையாயிருக்கு...?

அதுக்குப் பிறகுதான் நாங்கள் நிம்மதியாய் சீவிக்கலாம். அதுக்கு ஒரு வழி இல்லையோ..?"

இந்த கேள்விக்கும் அக்கா பதில் கூறவில்லை. அன்ரியின் மகள் என் வயதொத்த சிறுமி தான். எனக்கு மண்டைக்குள் என்னவோ செய்தது. அவளது கேள்விக்குப் பதில் சொல்லாவிட்டால் என் தலை வெடித்து சுக்கு நூறாகிவிடும் போலிருந்தது.

எழுந்து முன்னே போனேன்.


"விண்கல் பூமியை மோதாமல் எப்படித் தடுக்கலாம் என்று ஆராய்ச்சி செய்யிற விஞ்ஞானியளும் மனிசர் தானே? அவையளாலை அது முடியுமென்றால் எங்களாலையும் எங்கடை பூமியிலை ஷெல் விழுந்து வெடிக்காமல் ஒரு வழியைக் கண்டு பிடிக்கேலும்."

எனது இந்தப் பதிலால் மௌனம் கலைந்த அக்கா "எட விக்கிரமன் இவ்வளவு நேரமும் கேட்டுக் கொண்டே இருந்தனி!" என்றவாறே எழுந்து ஓடினாள்.

விக்கிரமன் என்பது என் பெயர்.

(நங்கூரம் 1995)

❑



ISBN-955-21-1185-4
62930

Rs. 205/-